
KULAPATHI A.P.C. VEERABAHU CENTENARY CELEBRATIONS THOOTHUKUDI
IMPARTING QUALITY EDUCATION · INSPIRING TEACHERS · EMPOWERING WOMEN
100 years
1915-2015

# குலபதி ஏ.பி.சி.வீரபாகு

## நூற்றாண்டு விழா மலர்



TMB

தமிழ்நாடு
மெர்க்கன்டைல்
பேங்க் லிட்

Be a step ahead of life

# வளரும் தலைமுறைக்கு
# வங்கியின் சேவையை கற்றுக்கொடுப்போம்




உங்கள் குழந்தைகளுக்கு வங்கியில் சேமிப்பதன் அவசியத்தை வலியுறுத்துங்கள். வங்கிக் கணக்கின் வசதிகளை அறிமுகப்படுத்துங்கள், TMB லிட்டில் சூப்பர் ஸ்டார் சேமிப்புக் கணக்கு ஏராளமான வசதிகள் கொண்டது, எளிதானது.

- வயது வரம்பு 10 வயதிற்கு மேல் 18 வயது வரை
- குழந்தையின் பெயருடன் காசோலை புத்தகம்
- பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ATM cum Debit கார்டு
- இலவச இண்டர்நெட்/மொபைல் பேங்கிங்
- கல்விக் கட்டணத்திற்கு இலவச DD வசதி*

*நிபந்தனைக்

இலவச தொலைபேசி எண்: 180 0425 0426 | www.tmb.in | tmbstepahead | t[illegible]td

எந்தக்

காரணத்தினாலும்

கல்வி

ஸ்தாபனங்கள்

கல்வியை

வியாபாரமாக்கக்

கூடாது

- *ஏ.பி.சி.வீரபாகு*



A.P.C. MAHALAXMI COLLEGE FOR WOMEN LIBRARY TUTICORIN-2

தோற்றம் : 05.05.1915

மறைவு : 13.08.1982

## குலபதி ஏ.பி.சி. வீரபாகு நூற்றாண்டு விழாக் குழுவினர்

**தலைவர்**
ஏ.வி.எம்.வி.மணி

**துணைத் தலைவர்கள்**
எஸ். பீட்டர் அல்போன்ஸ்
என். தனசேகரன்
எம். அப்பாத்துரை

**செயலாளர்**
பி.ஜோ வில்லவராயர்

**பொருளாளர்**
பா. கணபதி சந்தானம்

**உறுப்பினர்கள்**

சி.எஸ். ராஜேந்திரன்
கே. பொன் வெங்கடேஷ்
ஏ.வீரபாண்டியன்
நெவில் ஏ கட்டார்
போனோவென்ஞ்யூர் ரோச்
வி. ஆனந்தம் (விவேகம்)
பேராசிரியர். கே. பழனிசாமி
கே.எஸ். கந்தசாமி
சாகுல் ஹமீது
எம்.எஸ். தாகுதின்
முனைவர் ஏ. பிரான்சிஸ்
வி. பொன்ராஜ்
முனைவர். சி.வீரபாகு
முனைவர்.வி. தாமோதரன்
ஏ. பால சுப்பிரமணியன்
பேராசிரியர் பி.சங்கரன்
ஸ்ரீராம் (ஆடிட்டர்)
கே.சி.வி. ராஜன்
பேராசிரியர் பெருமாள்சாமி
எஸ். வேலாயுதம்
ஜி. சேதுராமலிங்கம்
டி. நாராயணன்
ஏ.பி.சி. வீ. சண்முகம்
முனைவர். ஆர்.சி. வாசுகி
டி.கே.சுப்பா நாயக்கர்
எம். சுந்தரி
எஸ்.பி. காந்தி(சைவநெறி)

## மலர் தோரணவாயில்

கல்வித் தந்தை குலபதி என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் பன்முகத்திறமை கொண்ட பண்பாளர் என்பது யாவரும் அறிந்ததே!

கல்வியை வியாபாரமாக்கக்கூடாது என்ற லட்சிய நோக்கத்தோடு தூத்துக்குடியில் 1947ம் ஆண்டு வ.உ.சி.கல்விக்கழகத்தினை நிறுவி அதன் சார்பில் கல்லூரிகள், பள்ளிகளை தோற்றுவித்து பல்லாயிரக்கணக்கானவர்கள் கல்வி பயிலவும், வேலைவாய்ப்பு பெறவும் வசதி செய்து கொடுத்து உதவியவர்.

அரசியல், ஆன்மீகம், கல்வி, கூட்டுறவு, வங்கி வணிகம், சர்வோதயம், பூமிதான இயக்கம், நூலகத்துறை, இந்தி பிரச்சார சபை உட்பட பல துறைகளில் தன்னை இணைத்துக் கொண்டு பணி செய்தவர்.

பத்தாண்டு காலம் (1957 - 1967) சட்டமன்ற உறுப்பினராக இருந்து நாட்டின் வளர்ச்சிக்காக பல ஆக்கப் பணிகளை ஆற்றியவர். அத்தகு சிறப்பு வாய்ந்த பெரியவர் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் நூற்றாண்டு விழா பல்வேறு நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அவ்விழாவினை முன்னிட்டு அவர்களின் பெருமைமிகு வரலாற்றுச் செய்திகளை சேகரித்து சிறப்பு மலர் வெளியிட்டுள்ளோம்.

கட்டுரை, கவிதை, செய்திகளை தந்துவுதவிய அன்பர்களுக்கு நன்றி. இம்மலரின் பணிகளை சிறப்புறச் செய்த சைவநெறி காந்தி, சொ.முத்துசாமி (வ.உ.சி. துறைமுக ஓய்வு பெற்ற கணக்கு அதிகாரி) க.பிச்சையா (ஓய்வு பெற்ற அஞ்சல் அதிகாரி) ஆகியோருக்கு நன்றி.

சிறந்த முறையில் அச்சடித்துக் கொடுத்த சுபா கிராபிக்ஸ் உரிமையாளர், ஊழியர்கள் ஆகியோருக்கு நன்றி.

இப்படிக்கு
குலபதி ஏ.பி.சி.வீரபாகு
நூற்றாண்டு விழா குழுவினர்

20.05.2017 தூத்துக்குடி

## குலபதி ஓர் விளக்கம்

பதினாயிரம் பேர்களுக்குக் கல்வி தானம் செய்தவர்களுக்கு குலபதி என்னும் பட்டமளிப்பு சிறப்பான மரபாகும். காசி இந்து பல்கலைக்கழகம் நிறுவிய பண்டித மதன்மோகன் மாளவியா, பம்பாய் பாரதீய வித்தியா பவன் தொடங்கிய கே.எம். முன்ஷீ ஆகிய சிறந்த கல்விக் கடல்களுக்கு குலபதி என்றப் பட்டம் வழங்கப் பெற்றது. எத்தனையோ பல்லாயிரம் பேர் பட்டதாரி ஆவதற்கு கல்லூரிகள் தோற்றுவித்த பெருந்தகை ஏ.பி.சி. வீரபாகு அவர்களுக்கு 1976ம் ஆண்டு தூத்துக்குடி சிதம்பரநகர் கல்யாண மண்டபத்தில் பிரபல கதாகாலட்சேபகர் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் என். இராமதீக்ஷிதர் குலபதி பட்டமளித்து பாராட்டினார்.







## வென்ற வீரபாகு ! வெற்றி வீரபாகு !

தரணியில் தன்நலம் கருதா தலைவரே !

தேசிய இயக்கத்தின் கர்மவீரர் கரம்பற்றியவரே !

எங்கள் மனதில், என்றும் நிறைந்தவரே !

உயர்ந்த செழுமையிலும் தன்னடக்கம் உடையவரே

இன்மையில் இன்முகம் கொண்டு இருந்தவரே!

மறுமையில் அவ்வுலகில் அமரத்துவம் பெற்றவரே !

செம்மையின் செயல்வீரராக செயல் புரிந்தவரே !

தேசியபணிக்கும், பொதுப்பணிக்கும் ராஜகிரீடமாகத் திகழ்பவரே !

காலங்கள் மாறினும் காலச்சுவடுகள் மாறாதவரே !

அவர்தம் பாதையில் ஒன்றிடுவோம் ! வென்றிடுவோம் !!

**- மு. குணசேகரன்**
த.பா.ஹிந்தி பிரசார சபா
திருச்சி -17



# தென் தமிழகம் ஈன்ற தியாக முத்து

**- பழ. நெடுமாறன்**

**தமிழகத்தின் தென் கடற்கரையில் அமைந்த தூத்துக்குடி நகரம் முத்துக்குளிப்புக்குப் புகழ்பெற்ற நகரம். அந்நகரில் தியாக முத்துக்கள் பிறந்து தமிழகம் மட்டுமல்ல இந்தியாவெங்கும் ஒளிவீசின.**

தியாகத் திருவுருவமாகத் திகழ்ந்த வ.உ.சிதம்பரனார் வெள்ளையனை எதிர்த்து வீரப்போர் புரிந்த களம் தூத்துக்குடியாகும். வ.உ.சிதம்பரனார் தலைமையில் தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் மக்கள் கிளர்ந்தெழுந்து நடத்திய போராட்டங்கள் வெள்ளையர்களை நடுநடுங்க வைத்தன. வெஞ்சினம் கொண்ட வெள்ளையர்கள் சிதம்பரனார் மீது வழக்குகள் தொடுத்து சிறையிலடைத்து செக்கிழுக்க வைத்து கொடுமைப்படுத்தினர் என்பது வரலாறு ஆகும்.

அதே தூத்துக்குடியில் பிறந்து, 1936ஆம் ஆண்டிலேயே காந்தியடிகளின் தலைமையை ஏற்று, நாட்டு விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் தலைவர் ஏ.பி.சி. வீரபாகு ஆவார். பிறகு நெல்லை மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டும், பல வகையில் மக்கள் தொண்டராக மிளிர்ந்தார்.

எந்தப் பதவியை அவர் வகித்தாலும் அதில் தனி முத்திரை பொறித்தவராகத் திகழ்ந்தார். அவருடைய நீண்ட நெடிய பொது வாழ்க்கையில் யாரையும் எதிரியாகக் கருதியதில்லை.

இராஜாஜி, காமராஜர், ம. பொ.சி., மோகன் குமாரமங்கலம், ஆர். வெங்கட்ராமன், எம். பக்தவத்சலம், சி. சுப்பிரமணியம் போன்ற தமிழகத் தலைவர்களுடனும், ஜவஹர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, இந்திராகாந்தி, பி.வி. நரசிம்மராவ் போன்ற அகில இந்தியத் தலைவர்களுடனும் நெருங்கிப் பழகி அனைவரின் அன்புக்கும் மதிப்பிற்கும் உரியவராகத் திகழ்ந்தார்.

மேலிடத் தலைவர்களின் மதிப்பிற்குரியவராகத் திகழ்ந்த தலைவர் ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் விரும்பியிருந்தால் மத்திய அரசில் அமைச்சர் பதவி, ஆளுநர் பதவி போன்றவற்றை எளிதாகப் பெற்றிருக்க முடியும். ஆனால் பதவியில் பற்றற்ற ஒருவராக அவர் இறுதி வரை வாழ்ந்தார். ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற நாவுக்கரசரின் வார்த்தைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் ஏ.பி.சி. வீரபாகு ஆவார்.

அவருடைய பொது வாழ்க்கைத் தொண்டிற்கு மகுடம் சூட்டிய செயல் தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரனார் அவர்கள் பெயரில் ஒரு கலைக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றை நிறுவியதாகும். இதன் மூலம் வ.உ.சி. அவர்களுக்கு தூத்துக்குடியில் சிறந்த நினைவுச்சின்னம் ஒன்றை நிறுவினார். இந்த கலைக்கூடத்திலிருந்து வெளியேறும் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் நாடெங்கும் பரவி வ.உ.சி.யின் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றனர்.



தலைவர் ஏ.பி.சி. வீரபாகு அவர்களுடன் நெருங்கிப் பழகும் பேறு எனக்குக் கிடைத்தது. சிறந்த பண்பாளராக, ஒழுக்கச் சீலராக, தியாகச் செம்மலாக அவரை நான் பார்த்தேன். அவரிடமிருந்து பலவற்றை நான் கற்றேன்.

இராஜாஜி அவர்கள் மீது மிக்க மதிப்பு வைத்து அவரைப் பின்பற்றியவர் ஏ.பி.சி வீரபாகு ஆவார். அதனால் காமராசரிடமோ, மற்றத் தலைவர்களிடமோ அவருக்கு வெறுப்பு என்பதல்ல. காமராசர் அவரை எந்த அளவுக்கு மதித்துப் போற்றினார் என்பதை நான் நேரில் அறிவேன்.

1969 ஆம் ஆண்டு நாகர்கோவில் இடைத்தேர்தலில் தலைவர் காமராசர் போட்டியிட்டார். தேர்தல் பணிகளுக்காக அவர் சென்னையில் இருந்து புறப்படுவதற்கு முன் ஏ.பி.சி. வீரபாகு அவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மறுநாள் நாகர்கோவிலில் தன்னைச் சந்திக்கும்படி கூறினார்.

பெருந்தலைவருடன் நானும் நாகர்கோவில் சென்றிருந்தேன். விருந்தினர் மாளிகையில் பெருங்கூட்டம் கூடியிருந்தது. உள்ளூர்த் தலைவர்களும் தமிழகம் எங்கிலுமிருந்து வந்திருந்த தலைவர்களும் அங்கு கூடியிருந்தார்கள். அவர்கள் அனைவரையும் பார்த்த காமராசர் கண்கள் கூட்டத்தில் யாரையோ தேடிச் சுழன்றன.

விருந்தினர் மாளிகைக்குள் நுழைந்தவுடன் ஏ.பி.சி. க்குத் தொலைபேசி போடும்படி என்னிடம் பெருந்தலைவர் கூறினார். அவ்வாறே நானும் தொலைபேசி போட்டேன். எதிர்ப்புறமிருந்து அண்ணாச்சி ஏ.பி.சி. பேசினார். 'தலைவர் உங்களிடம் பேச விரும்புகிறார்'. என நான் கூறிவிட்டு தொலைபேசியைத் தலைவரிடம் கொடுத்தேன்.

''என்ன! ஏ.பி.சி. இன்னும் வரவில்லையா? எனத் தலைவர் கேட்டார். அவர் என்ன பதில் கூறினார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் தலைவர் ''நீங்கள் உடனடியாக வர வேண்டும். நீங்கள் வந்த பிறகே தேர்தல் வேலையைத் தொடங்க வேண்டும்'' என்று கூறிவிட்டு தலைவர் தொலைபேசியை வைத்து விட்டார்.

மறுபடியும் தொலைபேசியின் மணி ஒலித்தது. நான் எடுத்தபோது மறுபுறம் அண்ணாச்சி ஏ.பி.சி. யின் குரல் கேட்டது. ''தம்பி, ஒரு முக்கியமான வேலையின் காரணமாக இன்று வரமுடியவில்லை. நாளை உறுதியாக வந்துவிடுவேன் என தலைவரிடம் கூறு'' என்றார். அவ்விதமே தலைவரிடம் கூறினேன்.

மறுநாள் அதிகாலையில் ஏ.பி.சி. வந்து சேர்ந்தார். தலைவரிடம் அவர் வந்திருப்பதை தெரியப்படுத்தினேன். உடனடியாக அறைக்குள் அழைத்து ''தேர்தல் பணப்பொறுப்பை நீங்கள் தான் ஏற்றுச் செய்ய வேண்டும்'' என்று கூறி அவரிடம் பணத்தையும் ஒப்படைத்தார்.

அந்தத் தேர்தலில் அண்ணாச்சி ஏ.பி.சி. அவர்கள் எவ்வளவு திறமையாக பணப் பொறுப்பைக் கையாண்டார் என்பதையும், யாருக்கும் எவ்வித மனக்குறையும் ஏற்படாமல் நடந்து கொண்டார் என்பதையும் அருகே இருந்து பார்த்த எனக்கு பெரும் வியப்பு ஏற்பட்டது. அவர் என்னை சொந்தத் தம்பிபோல் நடத்தினார். தேர்தல் உத்திகளை அவரிடம் இருந்து நான் கற்றுக் கொண்டேன்.



தேர்தல் முடிந்த அன்றிரவே வரவு-செலவு கணக்கை பெருந்தலைவரிடம் ஒப்படைத்துவிட்டு அவர் விடைபெற்றுச் சென்றார். எத்தனையோ பணிகளுக்கிடையே தொடர்ந்து பல நாட்கள் நாகர்கோவிலிலேயே தங்கி அவர் செயலாற்றிய முறையும், தேர்தல் முடிந்தவுடன் வரவு செலவு கணக்கைத் தலைவரிடம் ஒப்படைத்துவிட்டு அடுத்தப் பணிக்காக அவர் புறப்பட்டுச் சென்றதையும் நான் பார்த்த போது மாபெரும் கடமை வீரராக அவர் எனக்கு காட்சி தந்தார்.

பெருந்தலைவருக்கு மிக நெருக்கமான எத்தனையோ தலைவர்கள் நாகர்கோவிலில் கூடியிருந்த போதிலும் மிக முக்கியமான பணப்பொறுப்பிற்கு ஏ.பி.சி. அவர்களைத் தேர்ந்தெடுத்து அவரிடம் அதை ஒப்படைத்த விதம் என்னை வியக்கச் செய்தது. அதைப் போல ஏ.பி.சி. அவர்களும் கடமை உணர்வு குன்றாமல் தேர்தல் பணியைச் சிறப்பாக ஆற்றியதும் அதனினும் சிறந்ததாகும்.

மாற்றணியில் இருந்த போதிலும் அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் காமராசர், ஏ.பி.சி. அவர்களை நம்பி பொறுப்பை ஒப்படைத்தவிதமும் அதைப்போல ஏ.பி.சி. அவர்கள் கடமையாற்றிய விதமும் பாராட்டத்தக்கவையாகும்.

இதுபோல் எத்தனையோ நிகழ்ச்சிகளை அருகிலிருந்து பார்த்திருக்கிறேன். அண்ணாச்சி ஏ.பி.சி. இன்று நம் மத்தியில் இல்லை. ஆனால் தமிழக அரசியலில் அவர் பதித்தத் தடங்கள் என்றும் அழியாமல் ஆழமாகப் பதிந்திருக்கின்றன. அவருடைய நூற்றாண்டு விழாவில் அவரின் காலடித் தடங்கள் நம்மை வழி நடத்துமாக!

### ஏ.பி.சி. வீரபாகு சட்டசபை பேச்சு

- ⋆ போக்குவரத்துச் சாதனங்களை விஸ்தரித்தால்தான் உண்மையிலேயே நம்நாடு தொழிலாக்கம் பெற முடியும். போக்குவரத்து தான் தொழிலாக்கம் கொடுக்கக் கூடிய சாதனம்.

4-5-1957

- ⋆ மின் உற்பத்தியானது எந்த அளவுக்கு, உற்சாகமாக விரிவடைகிறதோ அந்த அளவுக்கு நம்முடைய விவசாயப் பொருளாதாரமும் சீர் அடையும் என்ற நம்பிக்கையுடையவர்களில் நானும் ஒருவன்.

28-3-1958

*கல்வித் தந்தை, தேசிய வழிச் செம்மல், சிவநெறிப்புரவலர் எனப் போற்றப்பட்டவர் ஏ.பி.சி.வீரபாகுபிள்ளை*

*சிவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்,*
*தொண்ட மண்டல ஆதீனகர்த்தர்*





# உயர்கல்வி - அறம் அளித்த எங்கள் குலபதி

பேராசிரியர் முனைவர் **C.E. சூரியமூர்த்தி,** M.S., Ph.D.,

மதுரை

1947-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 15-ஆம் நாள், பாரத தேசமெங்கும் சுதந்திரத் தென்றல் வீசுகின்றது. அப்போது, திருமந்திரநகர் என்ற தூத்துக்குடியில் வாழ்ந்து வந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகள், அறிவுசால் பெரியோர்கள் உள்ளங்களில் அச்சுதந்திரத் தென்றல், அந்நகர மக்களின் பொருளாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் சாதனைப் புயலாக மாறியது.

அந்நகரில் தன் தியாக வாழ்வைத் தொடங்கிய சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனாரின் நினைவாக வருங்கால இளைய சந்ததியினரும் அறிந்துகொள்ளும்படியாக ஒரு நினைவகம் அமைக்க வேண்டும் என்ற கருத்து பெரியவர்கள் மத்தியில் உருவெடுத்தது.

1948-ஆம் ஆண்டு, ஊர்ப்பெரியவர்கள் கூடி விவாதித்தார்கள். நினைவகம் பற்றி பல கருத்துக்கள் கூறப்பட்டன. சிலர் வ.உ.சி.பெயரால் மணிமண்டபம் கட்டவேண்டும் என்றனர். சிலர் பெரிய சிலை அமைக்க வேண்டும் என்றனர். மற்றும் சிலர் பூங்கா அமைக்கலாம் என்றனர். பெரியவர்களுக்கிடையில் ஒருமித்த கருத்துத் தோன்றவில்லை.

அப்போது 33 வயதான உயர்திரு ஏ.பி.சி. வீரபாகு ஐயா அவர்கள் எழுந்துநின்று பேசத்தொடங்கினார்கள் . கூட்டத்தில் அமைதி. ஐயா அவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள் என்ற எதிர்ப்பார்ப்புடன் ஊரார் இருந்தனர். என்னுடைய தகப்பனார் E. ஈசுவரநாயகம் அவர்களும் அக்கூட்டத்தில் இருந்ததால் அவர் மூலம் அறிந்ததை பதிவுசெய்கிறேன்.

குலபதி ஏ.பி.சி. ஐயா அவர்கள் செயல்வீரர். மிகச்சுருக்கமாகத் தன் கருத்தை முன்வைத்தார்கள். அவர்கள் சொன்னதாவது. சுதந்திர பாரதத்திற்கு முதலாவது வேண்டுவது கல்வி கற்ற இளைஞர்களே. வருங்கால பாரததேசம் எப்படி இருக்கவேண்டுமென மகாகவி பாரதியார்,

**''ஆயுதம் செய்வோம்**
**நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம்**
**கல்விச் சாலைகள் வைப்போம்**
**ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்**
**உண்மைகள் சொல்வோம் பல**
**வண்மைகள் செய்வோம்''** என விளக்கமாகப் பாடினார்.

நாட்டின் பொருளாதாரம் உயர்வடைய மேலான கல்வியே அவசியம்.



மேலும் பாரதியார்,

**அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்**

**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**

................

**அன்னயாவினும் புண்ணியங்கோடி**

**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

என்று நமக்கு வழிகாட்டுகிறார். உயர்கல்வி ஒன்றே உயர்தொழிற்சாலைகளை அமைக்க உதவும். தொழில் பெருகினாலே வேலைவாய்ப்புகள் பெருகும். இந்நகரிலே சிறந்த உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. ஆனால், உயர்கல்வி அளிக்கும் கல்லூரி ஒன்றுகூட இல்லை. வ.உ.சிதம்பரனார் பெயரில் கல்லூரி ஒன்று அமைத்தால் இளைஞர்களின் சிந்தனையும் செயலும் மேம்படும். அதனால் நாம் யாவரும் ஒருமித்த கருத்தோடு தியாகச்செம்மல் வ.உ.சி. பெயரால் ஒரு கல்லூரி அமைத்தலே சிறப்புடையதாக இருக்கும் என அழுத்தமாகப் பேசிவிட்டு அமர்ந்தார்கள். அறிஞர்கள் சபை கைதட்டி ஏகோபித்த முடிவை அறிவித்தது. மேலும், அக்கூட்டம் குலபதி ஐயாவையே முன்னின்று கல்லூரிக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக்கொண்டது.

குலபதி ஐயா அவர்கள் கைராசியானவர். அப்போதுள்ள நகராட்சி, கல்லூரி கட்ட, நகரின் மேற்குப் பகுதியில் நல்ல நிலம் வழங்கியது. செல்வந்தர்கள் தாராளமாக தானம் கொடுத்தார்கள். அப்போது சென்னைப் பல்கழைக்கழகம் ஒன்றே தமிழ்நாட்டில் ஒருங்கிணைக்கும் பல்கலைக்கழகமாக இருந்தது. அப்போது துணைவேந்தராக இருந்த மாண்புமிகு A. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் கல்லூரி துவங்க ஆணை பிறப்பித்தார்கள். அப்போது தமிழக முதன் மந்திரியாய் இருந்த மாண்புமிகு P.S. குமாரசாமி ராஜா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். என் தாயார் சித்தாந்தவித்தகி C.E.N. ஈசுவரவடிவம்மையார் இறைவணக்கம் பாடினார்கள்.

1950 -ம் ஆண்டு வ.உ.சிதம்பரனார் கல்லூரி தன் உயர்கல்விச் சேவையைத் தொடங்கியது. குலபதி ஐயா அவர்கள் பெருந்தலைவர் இராஜாஜியுடன் கலந்து, பேராசிரியர் அ.சீனிவாசராகவன் என்ற இருமொழிப்புலவரை கல்லூரி முதல்வராக நியமித்தார்கள். இக்கட்டுரையாளர் 1954 - 1956 வரை இரு ஆண்டுகள் இக்கல்லூரியில் பயிலும் நேரடி அனுபவம் பெற்றவர். பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் மிகச்சிறந்த பேச்சாளர். கேட்டார் பிணிக்கும் தகையவாய் என்ற வள்ளுவத்திற்கேற்ப பேசுவார்கள், பாடம் நடத்துவார்கள். பூவைத் தேனீக்கள் மொய்ப்பதுபோல் மாணவர்கள் அவர் வகுப்பிற்குச் செல்வார்கள். அவர் பாடம் நடத்தும் முறை மறக்க முடியாதது.

குலபதி ஐயா அவர்கள் ஒவ்வொரு துறைக்கும் மிகச்சிறந்த ஆசிரியர்களை நியமித்தார்கள். வ.உ.சிதம்பரனார் கல்லூரி ஒரு பல்கலைக்கழகம் போலவே இயங்கியது. பலநாட்கள் மாலையில் சிறந்த இலக்கியச் சொற்பொழிவுகளும், அறிவியற் சொற்பொழிவுகளும் நடைபெறும். அறிவுக்கு விருந்தாக ஒவ்வொரு நாளும் நிகழ்வுகள் உண்டு. கல்லூரி முதல்வர் அவர்கள்





கல்லூரியை ஒரு அறிவுச் சோலையாகவே நடத்தினார்கள்.

குலபதி ஐயா அவர்கள் கல்லூரியை கண்ணை இமை காப்பதுபோல் காத்தார்கள். ஒவ்வொரு நாளும் மாலை, கல்லூரி வளாகம் வந்து சுற்றிப்பார்ப்பார்கள். தோட்டங்கள் மிக நேர்த்தியாக பராமரிக்கப்பட்டன. பச்சைப்பசேல் என்ற கல்லூரி வளாகம் மாணவர்களின் படிப்புத்திறனை மேம்படுத்தின. கல்லூரியின் நூலகம் அறிவுப் பெட்டகமாக அமைந்து விட்டது. பல அறிஞர்கள் நூல்களை இலவசமாக அளித்தார்கள், மாணவர்கள் பெரும் பயன்பெற்றனர்.

பொருளாதாரக்குறை உள்ள மாணவர்கள் பலர் உதவித்தொகை பெற்றுக் கற்றார்கள். குலபதி ஐயா அவர்கள் பல ஏழை மாணவர்களை இலவசமாக படிக்க அனுமதித்தார்கள். கல்லூரியை ஐயா அவர்கள் கல்வி அறச்சாலையாகவே நடத்தினார்கள்.

கல்லூரியின் ஆண்டுவிழாக்கள் மிக கோலாகலமாக நடக்கும். குலபதி ஐயா அவர்கள் பல்கலைக்கழக வேந்தரான ஆளுநரையே விழாவிற்கு அழைப்பார்கள். மிகவும் பெரிதாக திட்டமிடப்பட்டு விழா நடைபெறும். எந்தக் கல்லூரியிலும் இவ்வளவு சிறப்பான நிகழ்வைக் காணமுடியாது. மாணவர்களும் நிகழ்வுகளை வாழ்வில் மறக்கமாட்டார்கள்.

சுதந்திரவீரர் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பன்முகம்கொண்ட மாமனிதர். சிறந்த மேடைப் பேச்சாளர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த கட்டுரையாளர், மொழி பெயர்ப்பாளர், தத்துவ அறிஞர், சிறந்த தமிழ் இலக்கியப் புலவரும் கூட. அவர், எழுச்சியூட்டும் சுதந்திரம் வேண்டி செய்த சொற்பொழிவிற்காக கண்ணனூர்(கேரளா) சிறையில் நான்கு ஆண்டுகள் ஆங்கிலேயரால் சிறை வைக்கப்பட்டார்கள். அந்தச் சிறைவாழ்வை அறவாழ்வாக மாற்றினார். சுதந்திர பாரதத்தில் மாணவர்கள் எப்படி கல்வி கற்று உயர்வடைய வேண்டும் என்னும் நோக்கத்துடன் '**மெய்யறம்**' என்ற வழிகாட்டு நூலை இயற்றினார். இந்நூல் திருக்குறள் போன்றே சமயம் சாராது உயர்ந்த மனிதவாழ்வுக்கு வழிகாட்டும். இந்நூல் 55 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஓரடி கொண்ட 10 பாக்கள் உள்ளன. ஒவ்வொரு பாவும் மாணவர்களுக்கு வழிகாட்டும் செய்திகளைக் கொண்டது. இலக்கியப் பாடலாக உள்ளதால், மாணவர்கள் மனப்பாடம் செய்து பயன்பெறலாம். வ.உ.சி.யின் நுண்மாண், நுழைபுலத் திறத்தைக் காட்டவல்லது, முதல் அதிகாரம் '**மாணவர் கடமை**' என்ற தலைப்பு கொண்டது.

முதற்பாட்டே ''மாண்பெற முயல்பவர் மாணவர்'' ஆவார் என்று தொடங்குகின்றது. சிறந்த சிறப்புகளை அடைய முயல்பவரே மாணவர் ஆவார் என்பதே அதன் பொருள். பின் ஆணும், பெண்ணும் மாணவராக உரிமையுடையவர் என்ற சம உரிமையை நிலைநாட்டுகிறார். பின்னொரு பாடலில் தகுந்த ஆசிரியர் மூலம் தன் திறமைகளை மாணவர் அறியவேண்டும் என்கிறார்.

7வது அதிகாரத்தில் நல்ல ஆசிரியரின் பண்புகளை வ.உ.சி. அவர்கள் சுட்டிக் காட்டுகிறார். முதல் பாடலில்,

**''அறிவினைத் தருபவராம் ஆசிரியர்''**



என்று ஆசிரியரின் முக்கியத்துவத்தைச் சுட்டிகாட்டுகிறார். 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்றே குறள் பேசுகிறது. மேலும். அறிவு அற்றம் காக்கும் கருவி என்றே வள்ளுவம் பேசுகின்றது.

மேலும் அறிவு பல துறைகளாகப் பிரிந்துள்ளதால், ஆசிரியர்களும் பலராக இருப்பர். ஒரு கல்லூரியில் இவ்வுண்மை தெற்றென விளங்கும். வ.உ.சி. அவர்கள் இக்கருத்தை,

'அறிவு வகையால் ஆசிரியர் பலர்' என்கிறார். மேலும் ஆசிரியர் மாணவனை தன் மகவுபோல் பாவிக்கவேண்டுமாம். ஆசிரியரும் தான் அறிந்தவற்றையெல்லாம் மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். வ.உ.சி. யின் '**மெய்யறம்**' என்ற நூலை மாணவர்கள் ஒவ்வொருவரும் கற்கவேண்டும். அதன்மூலம் அவர்களின் வாழ்வு மேன்மையுறும். 'கற்றோர்க்குச் சென்றமிடமெல்லாம் சிறப்பு'.

குலபதி ஐயா அவர்கள் வ.உ.சிதம்பரனார் கல்லூரியை மெய்யறம் என்ற நூலில் கூறப்பட்ட மாணவ - ஆசிரிய இலக்கணங்களிற்கு இலக்கியமாக மாற்றினார்கள் என்றே சொல்லலாம். கட்டுரையாளர் வ.உ.சி. கல்லூரியின் மாணவராகவும், ஆசிரியராகவும் (இயற்பியல்) இருந்த நற்பேறு பெற்றவர். வ.உ.சி. கல்லூரி, சிதம்பரனாரின் பெயரை மட்டுமல்ல, அவர் வகுத்த கொள்கையையும் ஏற்று நடத்தப்படுகிறது என்ற பெருமை உடையது. அதற்கு குலபதி அவர்கள் **மெய்யறம்** என்ற நூலை ஆழ்ந்து கற்றிருக்க வேண்டும் என்பதே கட்டுரையாளரின் முடிவு. கல்லூரி வளாகத்தில் முத்தமிழும் (இயல், இசை, நாடகம்) வளர்ந்தது. ஏன் நான்காம் தமிழான அறிவியல் தமிழும் செழித்து வளர்ந்தது. இக்கல்லூரி விரைவில் ஒரு தன்னாட்சி பல்கலைக்கழகமாக மாறும்வகையில் வளர்ந்துள்ளது. இதற்கு பெரிதும் காரணமான குலபதி ஏ.பி.சி. வீரபாகு ஐயா அவர்களை இன்று வாழும், இனிவரும் சமுதாயமும் நன்றியோடு போற்றும்.

## தலையான நினைவுச் சின்னம் வ.உ.சி. கல்லூரி



1961ல் தமிழ்நாடு முதல் அமைச்சர் கு.காமராஜ் அவர்கள் ஓட்டப்பிடாரத்தில் வ.உ.சிதம்பரனார் நினைவு நிலையத்தை திறந்து வைத்துப் பேசுகையில் என்னுடைய நண்பர் திரு. ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் தூத்துக்குடியில் வ.உ.சி. நினைவாக கல்லூரி நடத்துவது வ.உ.சி-க்குத் தலையாய நினைவுச் சின்னம் என்றார்கள்.





# தன்மானம் நிறைந்த தன்னலமில்லாத் தலைவர்

**சா. பீட்டர் அல்போன்சு**



''பொது வாழ்வில் புனிதம்'' இனிமேல் நடைமுறை வாழ்வில் சாத்தியமே இல்லை. பொதுவாழ்வில் நேர்மை, தனிமனித வாழ்வில் எளிமை, அரசு நிர்வாகத்தில் தூய்மை என்ற மதிப்பீடுகள் எல்லாம் காலாவதியாகிவிட்டன. வன்முறை அரசியல், பணத்தின் ஆதிக்கம், ஜாதிவெறி, மதவெறி போன்ற ஆயுதங்கள் இல்லாமல் இனிமேல் பொதுவாழ்வில் இருப்பது சாத்தியமில்லை, தேர்தல் வெற்றிகளை இனிமேல் ஜாதியும் பணமும் தான் முடிவு செய்யும். திறமை, அர்ப்பணிப்பு, கடினஉழைப்பு போன்றவற்றையெல்லாம் வாக்காளர்கள் தகுதிகளாக நினைத்த காலமெல்லாம் முடிந்து போனது'' போன்ற பொதுமக்களின் வருத்தம் நிறைந்த இத்தகைய வசனங்களை நான் சமீபகாலமாக அடிக்கடி கேட்டுக் கொண்டு இருக்கிறேன். எனக்கும் அதைப் போன்ற அச்சங்கள் வருவதை என்னாலும் தவிர்க்கவும் இயலவில்லை. ஏன் இந்த நிலை ?என்று அடிக்கடி நான் என்னையே கேட்டுக்கொள்வதுண்டு.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படையே அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்தாம். அரசியல் கட்சிகள் இல்லாமல் பாராளுமன்ற ஜனநாயகம் இல்லை. பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு இரண்டு முக்கியமான கூறுகள். ஒன்று அதன் அளவு (quantity). மற்றொன்று அதன் தரம் (quality). அளவு என்பது எத்தனை விழுக்காடு வாக்காளர்கள் தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள். எவ்வளவு பேர் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். தேர்தல்கள் சரியான காலங்களில் நடக்கிறதா? ஆகிய அளவு கோல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். அதன் தரம் என்பது தேர்ந்தெடுக்கப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளின் செயல்பாடு, பேச்சு மற்றும் எழுத்துச் சுதந்திரம், மனித உரிமைகள் பேணப்படுதல், சிறுபான்மை மற்றும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வுரிமைகள் , நீதிமன்றங்களின் சுதந்திரமான செயல்பாடு, பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களுக்கான சுதந்திரம், தரமான மக்கள் சேவை போன்றவற்றின் அடிப்படையில் அளக்கப்படும். தரத்திற்கான இத்தனை அளவுகோல்கள் இருந்தாலும் தரத்தின் அடிப்படை அளவு மக்கள் பிரதிநிதிகளின் செயல்பாடே! தகுதியான, அர்ப்பணிப்பு நிறைந்த கடுமையாக உழைக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான் பாராளுமன்றத்தின் செயல்பாடு சிறப்பாக இருக்கும். அத்தகைய மக்கள் பிரதிநிதிகளை மக்களுக்கு உருவாக்கித் தரக்கூடிய பணிகளை அரசியல் கட்சிகள் மட்டுமே செய்ய முடியும். ஆனால் அந்த அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் அதன் தலைவர்களைப் பொருத்தே அமையும். அரசியல் இயக்கங்களுக்கு தலைமையேற்பவர்கள், தலைமைத்துவம் (leadership) நிறைந்தவர்களாக, சுயநலம் இல்லாதவர்களாக, தன்னை முன்னிறுத்தாதவர்களாக, தொலைநோக்குப்பார்வை கொண்டவர்களாக, தனது இயக்கத்திற்காகவும் நாட்டிற்காகவும் எவ்விதத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பவர்களாக இருந்தால்தான் அவர்கள் வழிநடத்துகின்ற கட்சிகளால் உருவாக்கப்படும்



மக்கள் பிரதிநிதிகளும் அவர்கள் வழியொட்டி நடப்பார்கள். கடந்த காலங்களில் இந்திய அரசியலின் மதிப்பீடுகள் சரிந்து போனதற்கு மிகப்பெரிய காரணம் இத்தகைய தலைவர்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறைதான்.

அமரர் A.P.C.வீரபாகு அவர்கள் அப்படிப்பட்ட ஒரு தன்மையான தலைவர். தொண்டில் பழுத்த பழம். அருளால் நிறைந்த மனது. அறிவால் முதிர்ந்த அறிஞர். உழைப்பின் சிகரத்தைத் தொட்டவர். கல்வி மட்டுமே சமூக மாற்றத்தை கொண்டு வரமுடியும் என்ற சூத்திரத்தை நூறாண்டுகளுக்கு முன்பே தனது நுண்மான் நுழைபுலத்தால் உணர்ந்தவர். சைவ நெறிகள் நிறைந்த அருளாளர். காந்தியப் பொருளாதாரத்தை சர்வோதய நிறுவனங்கள் மூலம் வளர்த்தெடுத்த பொருளாதார மேதை. யார் தவறு செய்தாலும் தவறு எனக் கண்டிக்கும் தன்மானம் நிறைந்த தலைவர். தன் தலைமையின் கீழ் எங்கே தவறு நடந்தாலும் அந்தத் தவறுக்கு தார்மீகப்பொறுப்பேற்கத் தயங்காத தியாக மறவர்.அப்பெருமகனாரோடு சம்பந்தப்பட்ட இரண்டுநிகழ்வுகளை என்னால் வாழ்வில் மறக்கவே முடியாது. குலபதி வீரபாகு அவர்கள் ''தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ்'' கட்சியின் தலைவராக இருந்தார். நாங்கள் எல்லோரும் பெருந்தலைவர் காமராஜர் தலைமையில் ஸ்தாபன காங்கிரஸில் இருந்தோம். அப்போது இந்தியா பாகிஸ்தான் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வீரர்களுக்கு உதவிட நிதி திரட்ட இந்திரா காங்கிரஸின் மாணவர் அணி ''நட்சத்திர இரவு'' என்ற கலை நிகழ்ச்சியை நடத்தியது. அதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் சிலர் நிதி வசூலித்து சரியாகக் கணக்குக் காட்டாமல் மிகவும் ஆடம்பரமாக செலவுசெய்வதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. அப்போது ஸ்தாபன காங்கிரஸில் மாணவர் தலைவராக இருந்த முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் திரு.V.தண்டாயுதபாணி அவர்கள் தலைமையில் நாங்கள் அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்திக்கு ஏராளமான தந்திகளை அனுப்பினோம். தந்திகளைப் பார்த்த அன்னை இந்திராகாந்தி உடனடியாக தமிழ்நாடு காங்கிரஸின் தலைவரிடம் அதைப்பற்றி விசாரிக்கச் சொல்லி நேரடியாக உத்தரவிட்டார். குலபதி வீரபாகு அவர்களுக்கு இதைப்பற்றி எந்த விவரமும், சம்பந்தப்பட்ட மாணவர்களும் அதன் தலைவர்களும் தெரிவிக்கவில்லை. மாணவர்களை அழைத்த வீரபாகு அவர்கள் உடனடியாக அச்சிடப்பட்ட டிக்கெட்டுகள், வசூலான தொகை, செலவுகளின் விவரங்கள் அனைத்தையும் உடனடியாக தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று ஆணையிட்டார். அவரிடம் ஒப்படைக்கப்பட்ட கணக்குகளில் இருந்து ஒரு பெரும் தொகையினை மாணவர் தலைவர்களில் சிலர் தாறுமாறாக செலவழித்திருப்பதைக் கண்டு பிடித்தார்.அதன் பின்பு நடந்ததுதான் ஆச்சரியம்! வசூலித்த பணத்தில் எவ்வளவு பணம் தவறாகக் கையாளப்பட்டிருந்ததோ அந்த தொகை முழுவதையும் அவரே சொந்தப் பொறுப்பில் வங்கியில் கட்டினார். அப்பொழுதே அது சில இலட்சங்கள் இருக்கும்.அந்த மாணவர்களைப் பொறுப்பாக்கி கட்சியை விட்டு நீக்கவில்லை. ''அவர்கள் செய்த குற்றத்திற்கு நான் எப்படி பொறுப்பேற்பது? '' என்று எதிர் கேள்வி கேட்கவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் அதற்கு தார்மீகப் பொறுப்பு நான்தான் என்று ஏற்றுக்கொண்ட அந்த அறம் சார்ந்த அந்த தலைவரை என்னால் இன்னமும் மறக்க முடியவில்லை.





1976-அவசர நிலை அமுலில் இருந்த காலம். அன்னை இந்திரா காந்தியின் இருபது அம்சத் திட்டத்தின் வீச்சும், தாக்கமும் தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவியிருந்த காலம். அப்போதுஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டத்தின் (தற்போதைய தூத்துக்குடி மாவட்டமும் சேர்ந்து) மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவராக நான் இருந்தேன். இருபது அம்சத் திட்டத்தின் நிறைவேற்றுதலை மாவட்ட அளவில் கண்காணிக்க மத்திய அரசு ஒரு குழுவினை நியமித்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவில் ஐந்து பேர் மட்டுமே அலுவல் சாராத உறுப்பினர்கள். குலபதி வீரபாகு, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் அய்யா செல்லப்பாண்டியன், தியாகச்செம்மல் K.T. கோசல்ராம், அன்றைய மாவட்ட காங்கிரஸ் தலைவர் அமரர் S.K.T. ராமச்சந்திரன் மற்றும் நான் உட்பட ஐந்து பேர். 15நாட்களுக்கு ஒருமுறை அக்கூட்டம் கூடும். மாவட்டத்தின் ஒவ்வொரு துறையின் பணியும் அலசி ஆராயப்படும். மாவட்டத்தின் அத்தனை அதிகாரிகளும் வருகை தந்து தங்கள் துறைகள் சம்பந்தமாக விளக்கம் தர வேண்டும். குலபதி வீரபாகு அவர்கள் அருகில், எனக்கு இருக்கை. எல்லோரும் பேசும் போது நான் அவர்களைக் கவனித்துக்கொண்டே இருப்பேன். எனக்கு பேசுவதற்கு பயம். ஒருநாள் கூட்டம் முடிந்தவுடன் என்னை அவர்கள் அழைத்து, ''கூட்டத்திற்காக உனக்கு தரப்பட்ட அஜண்டா(AJENDA) புத்தகம் எங்கே?'' என்று கேட்டார்கள்.

நான் காரிலிருக்கிறது என்றேன். போய் எடுத்து வா என்றார்கள். போய் எடுத்து வந்தேன். அந்த புத்தகத்தை படித்துவிட்டுதான் கூட்டத்திற்கு வரவேண்டும் என்பது கூட அன்று எனக்கு தெரியவில்லை. கூட்டத்தின் விவாதப்பொருளை(AJENDA) படிக்காமல் வரக்கூடாது என்று எனக்கு அறிவுரை சொன்னார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த அவர்களது புத்தகத்தைக் காட்டினார்கள். ஒவ்வொரு பொருளுக்கு அருகிலும் அவர்கள் கைப்பட குறிப்பு எழுதி வைத்திருந்தார்கள்.'' இதை எடுத்துக் கொண்டு போ. அடுத்த கூட்டத்திற்கு வரும்போது இதைபோன்ற தயாரிப்புடன் வரவேண்டும்'', என்று சொன்னார்கள். வீட்டிற்குப் போய் படித்தேன். அரசுப்பணிகள் சம்பந்தபட்ட விவாதக்கூட்டங்களுக்கு எத்தகைய தயாரிப்புகளோடு செல்ல வேண்டும் என்பதை அன்று நான் தெரிந்து கொண்டேன். பின்னாளில் நான் தமிழக அரசின் பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக (CHAIRMAN, PUBLIC ACCOUNTS COMMITTEE) அநேக முறைகள் பணியாற்றியுள்ளேன். கூட்டத்திற்கு வருகை தரும் அதிகாரிகள் எனது தயாரிப்பினைப் பார்த்து என்னை மிகவும் பாராட்டுவார்கள். அப்பாராட்டுகள் முழுவதும் குலபதி வீரபாகு அவர்களையே சாரும்.

தற்போது தொழில் மற்றும் வியாபாரத்தில் தூத்துக்குடி சிறந்து விளங்குகிறது என்றால் அதற்கு ஒரு முக்கியமான காரணம் அமரர் A.P.C. வீரபாகு அவர்கள். கோவில்பட்டி, ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், புதூர், தூத்துக்குடி ஒன்றியம் போன்ற மிகவும் பின்தங்கிய பகுதிகளைச் சார்ந்த ஏழை எளிய மாணவ, மாணவிகள் கல்வி வசதி பெற்றார்கள் என்றால் அதற்கு தலையாயக் காரணம் அய்யா வீரபாகு அவர்களே. அவர்கள் நட்டு வைத்த விதைகள் தாம் இன்று வ.உ.சி. கல்வி நிறுவனங்களாக பெரும் ஆலவிருட்சங்களாகத் தழைத்துள்ளன.



‘‘தக்கார் தகவிலரென்பர் அவரவர் எச்சத்தாற் காணப்படும்’’ என்பார் வள்ளுவர்.அவ்வாக்கிற்கிணங்க ஐயா அவர்களது மாண்பின் பெருமையை அப்படியே காப்பாற்றும் பிள்ளைகள் அவருக்கு வாய்த்தது ஐயா அவர்களின் பெரும் பாக்கியம் கல்வி கடைச்சரக்காக மலிந்து தெருத் தெருவாக ஏலம் விடப்பட்ட நாட்களில் காசு பணத்திற்கு ஆசைப்படாமல் அய்யா அவர்களது மதிப்பீடுகளைக் காத்த பெருமை அண்ணன் சொக்கலிங்கம் அவர்களுக்கும் சகோதரர் சண்முகம் அவர்களுக்கும் உண்டு. ஆசிரியர் நியமனங்களுக்கும், மாணவர் சேர்க்கைக்கும் ‘‘கை நீட்டி காலணா வாங்காத’’ அவர்கள் பெருமையை இச்சமூகம் பாராட்டியே தீர வேண்டும்.

கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது தூத்துக்குடிக்கு அரசு பொறியியல் கல்லூரி வேண்டும் என்ற என் நண்பர் சண்முகத்தின் கோரிக்கையை அவரிடம் வைத்தேன்.கலைஞர் அவர்கள் 20 ஏக்கர் இடம் வாங்கித் தாருங்கள் என்று கேட்டார். நண்பர் சண்முகத்திடம் சொன்னேன். அண்ணன் சொக்கலிங்கம் அவர்களோடு கலந்து கொண்டு வ.உ.சி. கல்விச் சங்கத்திற்கு சொந்தமான இருபது ஏக்கர் இடத்தினை இலவசமாக அரசுக்கு வழங்கினார்கள். அரசு பொறியியல் கல்லுரிக்கு குலபதி. A.P.C. வீரபாகு பொறியியல் கல்லூரி என்று பெயர் வைக்க வேண்டும் என்று கலைஞரிடம் கேட்டேன். அப்பெருமகனாரின் பெயரை வைப்பதில் அரசுக்கு முழு உடன்பாடு என்று கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் நண்பர் சண்முகத்திடம் தொலைபேசியில் தெரிவித்தேன். அவர்கள் அண்ணன் சொக்கலிங்கத்தோடு கலந்து கொண்டு கல்லூரிக்குத் தங்களது தந்தையார் பெயர் வேண்டாம். செக்கிழுத்த செம்மல் தியாகி வ.உ.சி. அவர்களது பெயரையே வைத்திடல் வேண்டும் என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்கள்.அதன்படியே சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தேன். வாழ்வாங்கு வாழும் தலைவர் கலைஞர் அவர்கள் அப்படியே சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்தார். மண்ணில் மறைந்தாலும் நம் மனங்களில் வாழும் மாபெரும் தலைவர் அமரர் A.P.C. வீரபாகு அவர்கள். தூத்துக்குடி மண் இருக்கும் வரை அவர் புகழ் நாட்டில் வாழும். காலம் அவர்களைப் போன்ற தலைவர்களை நமக்குத் தரவேண்டும். அப்போதுதான் பாராளுமன்ற ஜனநாயகப் பயிர் பத்திரமாக செழித்து வளரும்.

## ஏ.பி.சி. வீரபாகு சட்டசபை பேச்சு

- ★ விவசாயத்தை கமர்ஷியல் முறையிலும் கொண்டு வர வேண்டும் Large Scale farming by Joint Stock Companies என்ற முறையிலும் ஏற்படுத்த வேண்டும். 2-3-1963
- ★ எப்போதுமே அவசரமாக நாட்டில் எந்த முன்னேற்றத்தையும் காண முடியாது. நிதானமாக ஆக்க பூர்வமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் மூலமாகத் தான் நிரந்தரமான முன்னேற்றம் ஏற்படும். 2-3-1964
- ★ நிலம் உழுபவனுக்கே சொந்தம் என்று சொன்னால் சீக்கிரமே அதை அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுத்து விடுவது நல்லது. 2-3-1964



# மானுடக் குலத்தின் வெற்றி

**க.ப. அறவாணன்**
முன்னாள் துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

**ந**ல்லது, கெட்டது; இலாபம், நட்டம்; வரவு, செலவு முதலானவற்றைக் கணக்குப் பார்த்து அவசரப்படாமல் நின்று நிதானமாக முடிவுக்கு வருவது அறிவு சார்ந்ததாகும். அறிவு சார்ந்த முடிவு மூளையைச் சார்ந்தது. நாம் எடுக்கும் எல்லா முடிவுகளும் அறிவை மட்டும் சார்ந்திருக்கவில்லை. உணர்வைச் சார்ந்தும் அமையும். உணர்வு இதயத்தைச் சார்ந்து அமையும். நம்மிடம் வந்து யாசகம் கேட்பவனை அறிவு மனது ஏற்காது. திட்டும். இவன் உழைத்துப் பிழைத்துக் கொண்டால் என்ன? ஊதாரியாக அலைகிறானே என்று! இப்படியில்லாமல் நம்மை நம்பி வந்துவிட்டான் வாய்திறந்து கேட்டும்விட்டான் என்ன கஷ்டமோ, நஷ்டமோ இயன்றவரை - உதவுவோம், என்று இருக்கின்ற காசைக் கொடுத்தனுப்புவது. இது இதயம் தொடர்பானது. உணர்ந்து எடுத்த முடிவு. இம்முடிவால் நன்மையும் விளையலாம், தீமையும் விளையலாம். இரண்டுக்கும் வாய்ப்பிருக்கிறது.

சிலப்பதிகாரத்தில் வரும் கோவலன், கண்ணகியிடம் காட்டும் அன்பு அறிவுப்பூர்வமானது. மாதவியின் ஆடலைக் கண்டும், பாடலைக் கேட்டும் அவளை விரும்பி அவளிடமே சென்றதும், குழந்தை பெற்றுக் கொண்டதும், வாழ்ந்ததும் உணர்வுப்பூர்வமான முடிவுகள். இம்முடிவால் கோவலனுக்குச் சேர்ந்தவை பெருமைகள் அல்ல. இவ்வழியிலேயே கோவலனின் நெஞ்சம் கவர்ந்த அழகியாக வந்து சேர்ந்த மாதவி, கோவலன் இறப்பிற்குப் பின் பழைய வாழ்க்கையைத் தொடராமல் துறவு வாழ்க்கையை மேற்கொண்டது அறிவுப்பூர்வமான செயல். தாய் சித்திராபதி ''நாம் பழையபடியே வாழ்வோம்'' என்று அறிவுறுத்த, பெற்றெடுத்த அழகு மகளைச் சுட்டிக்காட்டி 'மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை இவள், 'திருந்தாச் செய்கை தீத்தொழில் படாள்' என்று ஆட்கொண்டு ஒரு துறவியாக உலவவிட்டது அறிவுசார்ந்த செயல். அதன் பயன் மணிமேகலை புகழ்பெற்ற பௌத்தத் துறவியாக முடிந்தது. அமுதசுரபி ஏந்தி அனைவருக்கும் உணவிட முடிந்தது. நாடு பலவும் கடந்து நற்றொண்டு ஆற்ற முடிந்தது.

மணிமேகலையைப் பெற்றெடுத்தபோது கோவலன் மாதவிக்கு அருகிலிருந்தான். அந்த இனிய நாளில் நேரில் வந்து காண்பதற்காக நிறைய பேர் திரண்டிருந்தார்கள். வந்தோர் எல்லாம் புது மகவைப் பெற்றெடுத்ததற்காகப் பாராட்டினார்கள். வந்து சென்றோர் அனைவருக்கும் தங்கக் காசுகளைக் கைகள் சிவக்கும்படியாக வாரி வழங்கினான் கோவலன். இதன் விளைவாக பின்னாளில் உற்றாரைப் பிரிந்து தனிமைத் தீவில் தத்தளித்த மணிமேகலை தன் தந்தையை நினைத்து கலங்கி ''ஓஐயாவோஔ'' என்று அரற்றினாள். இந்நிகழ்ச்சிகள் எல்லாம் இதயம் சார்ந்தவை, உணர்வு சார்ந்தவை.

இராமன் நாடாள வேண்டும் என்று தந்தை தயரதன் விரும்பினான். வரம் கேட்டு வெற்றி கொண்ட கைகேயி இராமன் நாடாளக்கூடாது; பதினான்காண்டுகள் காடேக வேண்டும் என்றும் தன்னுடைய மகன் பரதன் நாடாள வேண்டும் என்றும் வரம் வேண்டி வற்புறுத்திப் பெற்றாள். வரத்தின்படியே இராமன் தன் மனைவி சீதை, தம்பி இலட்சுமணன் ஆகியோரோடு



காடேக நேர்ந்தது. அச்செய்தியைச் செவியுற்ற உடனேயே தயரதன் அதிர்ச்சியுற்று மாண்டான். இந்நிகழ்ச்சி முற்றும் உணர்வுப்பூர்வமானது. எதற்கும் அசையாமல் கலங்காமல் நின்ற கைகேயின் மனம் அறிவு பூர்வமானது. தங்கை சூர்ப்பனகை, தமிழக காட்டில் நேரில் பார்த்த சீதையின் அழகை அங்கம் அங்கமாக வர்ணித்தபோது கேட்ட அளவில் இராவணன் மயங்கி நின்றான். மயக்கம் முற்றும் தெளியாமல் சீதையைக் கடத்தி வந்தான். ஒரு பெரும் போரையே சந்தித்தான். தன்னையும் அழித்துக்கொண்டான். தன் நாட்டையும் அழிய வழிவகுத்தான். இவை அனைத்தும் பெண் ஆசையால் விளைந்த விளைவுகள்.

நம் முன்னோர் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை என்று எளிய மொழியில் எடுத்துக் கூறுவார்கள். ஓர் ஆடவனின் அழிவு மேற்கண்ட மூன்று ஆசைகளாலும் நிகழும் என்பது கருத்து. இதுதான் உண்மை. இதுதான் வரலாறு.

இதனைப் பல ஆண்டுகள் காட்டில் தனிமைத்தவம் இருந்து, ஆசைதான் அனைத்திற்கும் அடிப்படை என்று கண்டுபிடித்தார் புத்தர். அவருடைய தத்துவ விளக்கம் அனைத்தும், ஆசைதான் மனிதனை அழிவுக்கு அழைத்துச் செல்கிறது என்று நிறுவின. உலக உண்மையும் இதுதான். அரசகுமாரனான புத்தர் அரசாட்சியை வெறுத்து, துறவு பூண்டு, கட்டிய மனைவியைக் கைவிட்டு, பெற்ற குழந்தையைத் துறந்து இரவோடு இரவாக கானகத்திற்கு வந்து, கடும் தவம் மேற்கொண்டார். புத்தர் ஓர் அறிவுஜீவி என்பதைக் காட்டும் செயல்கள் இவை.

உலக இலக்கியங்கள் எல்லாம் அறிவுக்கும், உணர்வுக்கும் நடக்கும் போராட்டங்களை வேறுவேறு கதைகளாக வர்ணிக்கின்றன. கவிதைகளாக வடிக்கின்றன. நாடகங்களாக நடத்துகின்றன. ஒரு தனி மனிதனுடைய தனி வாழ்க்கையும் அறிவுக்கும் உணர்வுக்கும் இடையே நடக்கும் போட்டிகளையும், பூசல்களையும், மோதல்களையும், சாதல்களையுமே வர்ணிக்கின்றது. சாதாரண மனிதன் இவ்விரண்டிலிருந்தும் தப்ப முடியாது. ஒன்றை ஒன்று அழிக்காவண்ணம் இரண்டையும் அனுசரித்து ஈடுகொடுத்துப் போவதே மனித வாழ்க்கையில் வெற்றி. மானுடக் குலத்தின் வெற்றி.

**THE HINDU**

**Today's Paper » MISCELLANEOUS**

**dated January 2, 1960: Tuticorin harbour scheme**

"The Tuticorin harbour scheme and the Sethusamudram canal project will come into being soon and when these two schemes fructify, the distance between the east and the west coasts will become much shorter and big ocean going vessels will also call at this port," said Mr. S.V. Ramaswamy, Deputy Minister for Railways, Union Government, replying to a memorandum presented on behalf of a number of trade organisations in Tuticorin town. The memorandum was presented at a reception arranged in the Indian Chamber of Commerce premises, Mr. A.P.C. Veerabahu, M.L.A., presiding. Replying, the Minister said the Government were doing their very best to develop Tuticorin port as also the Sethusamudram canal.





# வாழ்வாங்கு வாழக் கற்றுத் தருவதுதான் கல்வி.

பேராசிரியர் ச. முத்துக்குமரன்
முன்னாள் துணைவேந்தர்

**கற்க கசடற கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக. (குறள்)**

என்றார் வள்ளுவர், கற்க வேண்டியதைக் கற்கவேண்டும். எதைக் கற்பது? தான் பிறந்த சமுதாயத்தில் வாழ, கல்வி தேவைப்படுகிறது.

விலங்குகளில் ஒரு சில மட்டுமே சேர்ந்து வாழ்கின்றன; மற்றவை யாவும் தனியாகவே வாழ்கின்றன. ஆனால் மனிதன் சமுதாயமாகவே வாழ்கிறான். ஒரு சமுதாயத்தில் வாழ, அச்சமுதாய மொழியை அறிவது தேவை. ஆகவே கல்விக்கு அடிப்படையாக அமைவது, தான்வாழும் சமுதாயத்தின் மொழியை அறிவது. அதாவது தனது தினசரி வாழ்க்கைக்கு, தனது சமுதாயத்தின் மற்ற அங்கத்தினர்களுடன் பழகத் தேவையான அளவுக்கு, தன் சமுதாயத்தின் மொழியை அறிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக தன் சமுதாயத்தின் பழக்க வழக்கங்களையும், பண்பாட்டையும், புரிந்து கொண்டால்தான் தன்சமுதாய மக்களுடன் வாழ முடியும். அதற்கு தன்சமுதாய மக்களின் இலக்கியங்களையும் ஓரளவுக்குக் கற்க வேண்டும்.

மூன்றாவதாக தன் வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருளை ஈட்டுவதற்கு ஒரு வாழ்க்கைத் தொழில்கல்வி அல்லது தொழில் நுட்பக் கல்வி அறிய வேண்டும்.

இன்று மாணவர்களுக்கு அவர்களது சமுதாய மொழி கற்பிப்பதில் கவனம் செலுத்தப்படவில்லை. அவர்களது சமுதாய மொழி, இலக்கியங்களில் மேலானவற்றைக் கற்பிப்பதில்லை. ஆதலால், அவர்களால் தமது சமுதாயத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை; தம் சமுதாய மக்களுடன் பழகத் தெரியவில்லை. மற்றவர்களுடன் பொது இடங்களில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது கற்பிக்கப்படாததால் அவர்கள் நடத்தை வரவேற்கத்தக்கதாக அமையவில்லை. எடுத்துக்காட்டாக, தொடர்வண்டியில் சென்ற இருவேறு கல்லூரி மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டதாகச் செய்தி (28.07.2013). பொது இடங்களில் நடந்து கொள்ளும் விதமும், மற்றவர்களின் கருத்துக்களை மதிக்கும் பழக்கமும் இல்லாததால் அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை வன்முறை மூலம் தீர்த்துக்கொள்ள முயன்றனர் என்று அனுமானிக்கிறோம்.

நமது நாட்டின் இன்றையக் கல்வியில், பொது அறிவுக்கு இடமில்லாத காரணத்தால் பலர் தம் உயிரையும் இழப்பதைக் காண்கிறோம். மெரினா கடலில் தொடரும் விபரீதம் என்ற ஒரு செய்தி (26.7.2013). அதில் மெரினா கடற்கரையில் கடலில் குளித்து பலர் பலி ஆகின்றனர். சென்னை கடற்கரையில் கடலில் குளிப்பது ஆபத்தானது என்பதைக் கூட நம் இளைஞர்கள் பலர், நிறைய உயர்படிப்பு படித்திருந்தாலும் தெரிந்துகொள்ளவில்லை என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.



தமது குடும்பத்தில் ஓர் அங்கத்தினருக்கு ஒரு குறையோ அல்லது ஒரு தவறான பழக்கமோ இருந்தால் என்ன செய்யவேண்டும் என்பது மெத்த படித்த பலருக்குத் தெரியவில்லை! அண்மையில் வந்த ஒரு செய்தி: கணவனும் மனைவியும் மென்பொருள் நிறுவனங்களில் நல்ல பதவிகளில் இருந்தனர். ஏதோ காரணத்தால், இருவருடைய நிறுவனங்களும் அவர்களைப் பணியிலிருந்து நீக்கிவிட்டன. அதன்பின் கணவன் அடிக்கடி நண்பர்களுடன் குடித்துவிட்டு இரவில் நேரம் கழித்து வீட்டுக்கு வருவது வழக்கமாகியது. அதனால் இருவருக்கும் அடிக்கடி சண்டை நடந்தது. ஒரு நாள் மனைவி தனது ஒரு வயதுக் குழந்தையை விட்டுவிட்டுத் தற்கொலை செய்துகொண்டாள். இதைப்பார்த்த கணவனும் தற்கொலை செய்துகொண்டான். அதாவது இவர்கள் இருவருக்குமே தாங்கள் வேறு பணி தேடிக்கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கை இல்லை. அப்பெண்ணுக்கு தன் கணவனைக் குடியிலிருந்து மீட்கும் தைரியமில்லை.

இதற்கு நேர்மாறாக அதிகம் படிக்காத, என்னிடம் வேலை பார்த்த ஓட்டுனரின் மனைவி பற்றியும், எங்கள் வீட்டு சமையல்காரப் பெண் பற்றிய விவரங்களையும் இங்கு பதிவு செய்ய வேண்டும். என்னிடம் பணியாற்றிய ஓட்டுனர் குடிகாரராக மாறினார். அவர் மனைவி அவருக்குப் புத்திமதி சொல்லி அலுவலக உதவியுடன் மது மீட்பு மருத்துவ சிகிச்சை அளித்து அந்த ஓட்டுனரை மது அரக்கன் பிடியிலிருந்து மீட்டாள். எங்கள் வீட்டு சமையல்காரப் பெண்மணியின் கணவர் குடிகாரராக மாறினார். அப்பெண்மணி தன் கணவனுக்குப் புத்திமதி சொல்லி அவரது குலதெய்வக்கோயிலுக்கு அழைத்துச் சென்றும் பூசைகள் செய்தும் கூட அவர் குடியை விடவில்லை. ஆனால் இந்தப் பெண்மணி மறுபடியும் இருமுறை அந்தக் கோயிலுக்கு அழைத்துச் சென்று அவரைக் குடியில் இருந்து மீட்டார். அந்த மெத்த படித்த பெண்மணியைவிட, குறைந்த கல்வி பெற்ற இந்த இரு பெண்களுக்கும் தம் கணவரைத் தம்மால் காப்பாற்ற முடியும் என்ற தன்னம்பிக்கை இருப்பதைக் காணலாம்.

இன்றையக் கல்வி தன்னம்பிக்கையை ஊட்டவில்லை, குலைக்கிறது என்பதையும், இக்கல்வியைக் கற்காதவர்கள் தன்னம்பிக்கையுடன் வாழ்வார்கள் என்பதையும் இச்செய்திகளில் இருந்து நாம் அறிகிறோம்.

முழுமையாகப் பார்க்கும்போது, இன்று நமது இளைஞர்களிடம் காணப்படும் பல பிரச்சனைகளுக்கு முக்கிய காரணம் நமது கல்வி. அதன் குறிக்கோள்களில் ''பொருள் ஈட்டுவதைக் கற்பது'' என்ற ஒற்றைக் குறிக்கோளை மட்டுமே பற்றிக்கொண்டு, மற்றவற்றைக் கைவிட்டு விட்டதே என்பது விளங்கும். ஆகவே, விரைந்து நாம் நமது கல்வியில் வாழ்வாங்கு வாழக் கற்பதற்கு உரிய இடத்தை அளித்து நம் இளைஞர்கள் முழுமையான தரமான கல்வி பெற வழிவகைச் செய்யவேண்டும்.





# குறளும் குலபதியும்

(பேரா. அ. செகதீசன்)



**நம்** குலபதியின் பன்முகத் திறமை வைரத்தில் தீட்டப்பெற்ற பட்டைகளாய் ஒளிர்கின்றன; கோகினூர் வைரம் அது! குறள் என்னும் நுண்மாண் நுழைபுல நுண் உருப்பெருக்கி ஆடி வழியாகப் பார்த்தால் குலபதியின் குறட்பண்பு ஒளிர்ந்து விளங்கும்; அத்துணை அடர்த்தி ஒளித்திரள்! தூத்துக்குடி முத்து, கொற்கை முத்தும் அப்படித்தானே!

நவமணிகளை நீரோட்டம் கண்டு தேர்ந்தெடுக்கும் திறம் வாடித்தெரு வணிகர்களுக்கு உண்டாம்! குலபதியின் தலைமைப் பண்புகள் குறள் நெறியில் பதிவாகியிருப்பதை உணரலாம்!

''குறளால் உலகாள்வோம்!'' என்பார்கள். குலபதி தம் வாழ்நாளில் அக்குறளையே ஆண்டவர்! அரசியலில், தாம் மேற்கொண்ட தேசிய இயக்கத்தில், கல்வியில், தொண்டில், கூட்டுறவுப் பணியில், வங்கி, வணிகத் துறையில் ''கடையனுக்கும் கடைத்தேற்றம்'' என்னும் வகையில், பூதான இயக்கப் பொழிவில், நூலக நுண்மான் நுழை-புலப்பிரிவில், தேசியக் கண்ணோட்டத்தின் வழி வந்த இந்தி பரப்பு இயக்கத்தில், தம்முடைய தலைமைப் பண்பால் ஆண்டவர்; எல்லாவற்றுக்கும் ஆண்டவர்; எம்போன்றோரையும் ஆட்கொண்டவர்; தடுத்தாட் கொண்டவர்; குறள் மொழிக் கொள்கைகளை வாழ்வின் நிகழ்வில் எல்லாம் எடுத்தாண்டவர்.

திருநெற்றியில் இடும் திருச்சின்னம் முதலாக, உடுக்கும் கதராடை தொடர்ந்து, உண்ணும் உணவில், வீர நடையில், மான உணர்வில், மக்களுக்கு நலம் சேர்ப்பதில், செயற்பாட்டுத் திறத்தில், குலபதி குறள் வாழ்வு வாழ்ந்தவர்; வாழ்ந்து காட்டியவர்.

**''இரவார், இரப்பார்க்கு ஒன்றுஈவர் : கரவாது**
**கைசெய்து ஊண்மாலை யவர்!''**

தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்வதே 'பிறப்பு' ஆகத் ''திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கமாகத் திகழ்ந்தவர்!'' ''உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை!''

**''தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு''**

என்பது இன்பத்துப் பாலில் இடம் பெறும் குறள். தமது சொந்த உழைப்பைக் கொண்டு தாமும் வாழ்ந்து, தம் பொருளை மற்றவர்க்கும் உதவி, அதனால் வரும் இன்பம் ஆகும், மனைவியிடம் கொள்ளும் அணைப்பு! இல்லற இன்பத்துக்கு இணை பொது நலத்தொண்டு; அப்படி வாழ்ந்த பெருமைக்குரியவர் இந்தக் கதர் சட்டைக்காரர்!

காட்சிக்கு எளியர், வள்ளுவர் எடுத்துக்காட்டு! மூன்று வரி, முப்பால், திருநீறு மட்டுமே அவரது செல்வம்; அதுவும் செந்தில் ஆண்டவன் இலை விபூதி!

இறைவன் மீது நிறைந்த பற்று, எல்லார்க்கும் பயன் அளிக்கும் வகையில் ஆகிவரல்



வேண்டும். பரந்து விரிந்த அறிவு வடிவான ஆண்டவனை வழிபடுவது எவ்வாறு? ''கற்றதனால் ஆய பயன்'' அறிவு அல்லவா? ஆகவே மக்களெல்லாம் அந்த மேலாம் அறிவைப் பெறுவதற்குக் கல்விக் கோயில் குலபதி எடுத்தார்! ஆடவர் கலை அறிவியல் கல்லூரி, மகளிர் கல்லூரி நிறுவி இருபாலாரையும், ''கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' எனக் குறள் கூறுமாறு அறிவு வழிப்படுத்தினார்.

**''கற்றதனால் ஆயபயன் என்கொல்! வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்''**

- என்று வினாத் தொடுத்து விடையும் அளிக்கின்றது! ஆக இறைவழிபாடு அறிவுவழிபாடு; அதற்குக் கல்வியே உடன்பாடு என்று குறள் வழிக் குலபதியானார் நம் கல்வித் தந்தை.

அக்கல்விக் கோயில்களுக்கு வ.உ.சி. கல்லூரி என்றும், ஏ.பி.சி. மகாலெட்சுமி கல்லூரி என்றும் திருப்பெயர்கள் சூட்டுவானேன்? அவ்விடத்தில் தான் 'செய்ந்நன்றி அறிதல்' என்னும் குறளதிகாரம் சிறக்கின்றது.

தாம் ஒரு நன்மையும் செய்யாதிருக்கவும், தமக்கு உதவி அளித்தமைக்கு அச்சிறப்புக்குப் பரந்த இந்த உலகத்தையும், விரிந்த அந்த வானத்தையும் ஈடாக்க முடியாது.

வ.உ.சி. ''நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்து-அது நமக்கே உரிமையாம் என்பது உணர்ந்து'', விடுதலை வேள்விக் கனல் எழுப்பி எல்லார்க்கும் விழிப்பூட்டினார்; 'கப்பலோட்டிய தமிழன்' ஆனார். சிறைப்பட்டார், செக்கிழுத்த சிதம்பரனாராய்க் கை விரல்கள் தேயக் கல்லுடைத்தார்; சணல் கிழித்தார் ரத்தம் சிந்த! தமது வக்கீல் உரிமத்தையே இழந்தார்! விடுதலைக்கு முன்னும் சரி, பின்னும் சரி அந்த தியாகிக்கு நாம் என்ன செய்தோம்? அந்தச் செய்நன்றியறிதலுக்குத்தான், வ.உ.சி. கல்லூரி. பாளை நெடுஞ்சாலையில், பாளை விரித்துக் கல்விப்பால் சொரிகின்றது. குலபதியை மகன்மை கொண்ட அத்தை திருவாட்டி மகாலட்சுமி இன்று மகளிர் கல்லூரியாக, எட்டயபுரம் சாலையில் நெடுநின்று நிறை கல்வி வழங்குகின்றார். எல்லாம் செய்நன்றி அறிதல் அல்லவா!

**''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது''** - என்பது குறள்.

குறளும் குலபதியும் என்று கூறுவது பொருந்துந்தானே!

செய்நன்றியறிதலே செயற்கரிய செயலாகச்செழித்தோங்குவது. அது பெரியோர்க்குரிய செயல்! சிறியர்க்கோ செயற்கு உரிய செயல் இது என்பதே தெரியாது!

**''செயற்கரிய செய்வார் பெரியர் ; சிறியர்**
**செயற் கரிய செய்கலாதார்''**

செயற்கரிய செயல்கள் செய்தவர்கள் அந்த அளவில் வாழ்நாளில் வாளா இருந்துவிட மாட்டார். தொடர்ந்து இயலும்போதெல்லாம் அறச்செயலை ஓய்வில்லாமல் ஆற்ற வேண்டிய இடத்திலெல்லாம் இயற்றிக்கொண்டே இருப்பார்கள்! அப்படித்தான் குலபதியும், கல்லூரிகளுடன் சார்ந்த மேனிலைப்பள்ளிகள், மழலையர் பள்ளிகள், ஆசிரியர் குடியிருப்புகள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள்; உடற்பயிற்சிக் கூடங்கள், கட்டண வரையறை உணவு ஊட்டிடங்கள், ஆண்டுதோறும் தாளாளர் உதவியால் நலிந்த ஏழை மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்புகள்; அறக்கட்டளைகள்; நாள்தோறும் நடந்து வந்து நேரில்கண்டு அமைதி காணும் அருட்செயல்கள்!





**''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாம்செயல்''**
**''செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்''**

குறட்பாவுக்கு குலபதியின் தலைமை அறப்பண்பைப் பதித்து வைத்திருக்கின்றன அல்லவா! ஆதலின் குலபதி அவர்களை ''அறநெறி அண்ணல்'' என்று வழங்கலாந்தானே!
'ஊருணி', 'உள்ளூர்ப் பயன்மரம்', 'மருந்தாகித் தப்பாமரம்' என மூன்று உவமைகள்;

உலக நடையை உணர்ந்து எல்லாரும் பயன்கொள்ள வேண்டும் என்று அறிவால் தனது செல்வத்தைப் பயன்படுத்துபவன், தன்னிடம் உள்ள தண்ணீரை உள்ளவரை தந்துதவும் ஊருணி போன்றவன். அறிவுடையன் செயல் இது.

**''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு''**
**''நன்றே தரினும் நடுவு இருந்து ஆம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்''**

என்னும் குறள் நெஞ்சம் கொண்டதால், நன்கொடை என்னும் பேரால் வன்கொடை வாங்கினார் அல்லர்.

**''எல்கேஜியாம் யூகேஜியாம் பிரிகேஜியாங் கப்பா!**
**எங்கதெனை வித்துக் கொடுப்ப குப்பன் மவனே சுப்பா!**
**கல்வித்தாயின் மடியினிலே நடக்குதப்பா கொள்ளை**
**கைந்நாட்டுப் போடுதையா கரிசல் காட்டுப் பிள்ளை!''**

என்றபடி இன்றைய நிலையை அன்றே உணர்ந்துதாம், நன்கொடை வாங்காத முன் எடுத்துகாட்டாய் நின்றார்! இத்தகையோரை ''எதிரதாக் காக்கும் அறிவினார்'', ''இனிவரப் போவதை முன்னரே உணர்ந்து காத்தருளும் அறிவுடையார்'' என்கின்றது திருக்குறள்! மாணவர்களிடத்து மட்டும் அல்ல, ஆசிரியர் நியமனத்திலும் எக்கொடையும் வாங்கியதில்லை! வ.உ.சி. கல்லூரியில், 'வாங்கும் காரிருள்' இன்று வரையில் சூழ்ந்ததே இல்லை! ''நாற்பதாயிரம் கோயிலில் சொல்லலாம்!''

இன்றைய நிலையில், எண்ணிப்பார்க்க முடியாத இந்நிலையில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை, அரசினர் கல்லூரிகள்போலக் கடைபிடித்த கல்லூரி, வ.உ.சி. கல்லூரி என்று துணிந்து கூறலாம்.

**''ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின்''**

என்னும் குறள்வழிச் செயற்பட்ட செயலாளர், சிவநெறிச் செம்மல், தாம் நிறுவிய கல்லூரியில், கிறித்துவரும், மகமதியரும் எனும் சிறுபான்மையருக்கு வாய்ப்புத்தந்து பாடம் கற்பிக்கும் ஆசிரியராகப் பதியச்செய்தவர்! கல்லூரியைப் பொறுத்தமட்டும் தம்மினத்தோர் சிறுபான்மையராயிருந்தனர் என்பது வெளிப்படை! இத்துணைச் சிறப்புக் குரியவர் ''நாவன்மை மிக்கவர்''



**சொல்லுதல் யார்க்கும் எளிய ; அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்''**

என்னும் குறள் வழி செய்து காட்டிய செயலாளர்!

**அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக; சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்'** என்னும் குறளின்

பாராட்டுக்குரியவர் ஆவார்! அவ்வாறே, இன்றைக்கு அரசியல் கட்சிப் பிரமுகர்கள், பேசத்தகாதவற்றைப் பேசி எங்கே அவர்! என்று எங்கும் எதிர்ப்புக் கனல் புகைய, முகம் தெரியாமல் ஓடிக்கொண்டிருக்க, அன்று குலபதி, தம் நாவானது வழுக்கியோ, வாய்சோர்ந்தோ எந்தச் சூழ்நிலையிலும் பேசியது கிடையாது.

வ.உ.சி. கல்லூரியில், ''கவின் கலை மன்றத்தைத் திறந்து வைத்துப் பேசும்போது,'' இக்கல்லூரித் தாளாளர் சட்டமன்றத்தில் பேசும்போது, மேசையின் எதிர்வரிசையில் இருப்பவர், எங்கள் வரிசைக்கு வந்துவிடமாட்டாரா என்று ஆதங்கப்படுவோம்!'' என்பாரா?

**''சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது!**

குறள் கூறும் இத்தகைய அரிய நாநலத்தால், நா நயத்தால் அவரை மாறுபாட்டால் வெல்ல முடியாது என்று முன்னுணர்ந்ததால் அல்லவா அக்கட்சித் தலைவர் அவ்வாறு பேசிப் பாராட்டினார்! அது மட்டுமா, அய்யா முயற்சியில் எழுந்த மகளிர் கல்லூரிக்கு இசைவளித்ததுடன், கல்லூரித் திறப்பு விழாவுக்கும் பல்வேறு நெருக்கடிக்கிடையில் வருகைதந்து, மனநிறைவுடன் திறந்து வைத்துச் சிறப்பித்தார்கள்! இன்றைக்கும் அத்தலைவரின் இல்ல வரவேற்பறையில், மகளிர் கல்லூரி சார்பில் படித்தளித்த கவிதை வரவேற்பு மடலை வைத்து அழகு பார்த்து வருவதாகக் கேள்வி! (குலபதியே நேரில் கண்டு சொன்ன குறிப்பு.)

மைய அரசிலும், மாநில அரசிலும், மற்ற மாநிலங்கள் வரிசையிலும் அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் அனைவரும் குலபதியிடம் இணக்கமாகவே இருந்திருக்கின்றனர். வ.உ.சி. கல்லூரியில், காந்தி, வ.உ.சி., பாரதி ஆகியோர்க்குக் கொண்டாடிய நூற்றாண்டுவிழா மூன்றுக்கும் முறையே மாண்புடைய பிரதமர்கள் மூவரும் வருகை தந்து பெருமைபடுத்தியிருக்கின்றனர்! ஆளுநர்கள், அமைச்சர்கள், துணை வேந்தர்கள், மேலோர், நூலோர், வேதவிற்பனர், பெருந்தலைவர் உள்ளிட்ட அனைவரையும் வருகைபுரியச் செய்து, கல்லூரிக்குச் சிறப்புச் சேர்த்த புகழ் குலபதியையே சாரும். தமது மணிவிழாவுக்கு, ஆதீனச் சந்நிதானங்களை ஒருசேர மேடையில் அமர்த்தி அழகுபார்த்த திறம் மணிவிழா நாயகருக்கு அன்றி வேறு யாருக்கு வரும்?!

**''தோன்றிற் புகழொடு தோன்றுக''** என்பது பொதுமறை!

குலபதி தோன்றுகின்ற இடத்திலெல்லாம்,

**''தென்றல் நடை, அன்ன நடை; தேர்ந்த கல்வித்**
**திறமை நடை; அறிவு நடை; பந்தல் சுற்றும்**
**மன்றல் நடை; தேங்குமடை திறப்ப தான**
**மதிப்பு நடை வீறு நடை; நடைகி டைத்தால்**
**இன்பம் நடை பெறுமென்றே சொல்வார்; அன்னார்**





**ஏகுமிடம் குறள்கொம்புத் தேன டையோ!''**

என்று சொல்லி பாராட்டும் அளவுக்குச் சொற்பொழிவு தூக்கலாக இருக்கும். இவ்வளவுக்கும் எந்த முன்னேற்பாடும் இல்லாமல், குறிப்பேதும் எடுத்துக்கோத்துக் கைகளில் வைத்துக் கொள்ளாமல் அல்லது அடுத்திருந்து கொடுத்து வாங்கிப் படிக்காமல், ஆற்றொழுக்காக பேசுவார்! அப்படியே ஒலிபெருக்கியின் முன்நின்று பேசுவார்; அத்துணையும் ''ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றாண்மைக்கு'' உரியனவாக விளங்கும். குறளைத் தேர்ந்து உள்வாங்கிய கொள்கலம். அதனால்தான் அப்படிக் குலுங்கும்!

''கேடில் விழுச்செல்வம் கல்வி'' கெடுதல் இல்லாத விழுமிய செல்வம் கல்வி என்பதை உணர்ந்து கற்றுத் தேர்ந்த செல்வர் தமிழிலும் ஒருசேர ஆங்கிலத்திலும் முழுத்திறமை பெற்றுப் பேச்சிலும் எழுத்திலும் சிறந்து திகழ்ந்தார் என்றால் செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அதாவது கேள்விச் செல்வம் வரையறையின்றிப் பெற்றதால்தான்! சென்னை 'லயோலா' கல்லூரியில் பயின்றதன் பண்பால் ஆங்கிலம் அவருக்குக் கைவரப்பெற்றது. சொல்லின் செல்வர் அனைவர்தம் உரைப் பொழிவையும் கேட்டிருக்கின்றார்! அன்றில்நடை, அழகுநடை, இடையறாத ஆற்றுநடை, பேச்சுநடை என்று சிறப்பிக்கும் அளவுக்கும் ஆங்கிலம் பேசுவார் ஆனால் இன்னார் பாணி என்றில்லாமல் தமக்கென்று தனிப்பாணி வகுத்துக் கொண்டு திறமாக உரை நிகழ்த்துவார்!

**''கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்**
**சொல்தெரிதல் வல்லா ரகத்து**

வள்ளுவர் வழங்கும் இத்தலைமைப் பண்புக்குத் தகைமை சேர்த்தார்!

தீபாவளிக்கு அடுத்து ஆறுநாள் அளவும் ''கந்தர் சஷ்டி நோன்பு''. ஒவ்வொரு நாளும் மாலையில், தமது இல்லத்தின் வளாகத்தில் மேடை அமைத்துத் தக்காரைக் கொண்டு 'கந்தபுராணச்' சொற்பொழிவு நிகழச் செய்து, முன்னிருந்து கேட்டு மகிழ்ந்து, மற்றவரும் அந்நோன்பின் பயனை அடையச் செய்வார். அவ்வாறு வாகீச கலாநிதி என்று போற்றப் பெற்ற **கி.வா.ஜகந்நாதன்.** அவர்களைக் கொண்டு நிகழ்வித்த சொற்பொழிவுத் தொகுப்பு நூலே ''கந்தவேள் கதையமுதம்''என்பது! குலபதி கேள்விச் செல்வத்தின் மீது கொண்ட தேட்டந்தான் எத்தகையது! அவ்வாறே முன்னிலைப் பேச்சாளர்களைத் தம் ஆட்சிக்குட்பட்ட கல்வி நிலையங்களில் சொற்பெருக்காற்றச் செய்து மாணவர் ஆசிரியப் பெருமக்கள் பெரும்பயன் அடைய முன்நின்று பெருமகிழ்வு தந்தவர்.

வ.உ.சி. கல்லூரியில் தமிழ்த் துறையில் இருபது ஆண்டுகளாகப் பணியாற்றிய மறைமலையடிகளின் திருமகனார் பெரும்புலவர் மறை திருநாவுக்கரசு அவர்களைக் கொண்டு முறையாகக் கந்தபுராணச் சொற்பொழிவுடன், நாயன்மார் வரலாற்றையும் தொடர்ந்து பொழியச் செய்து, சைவ சித்தாந்த சபையிலும், சச்சிதானந்த சபையிலும் அந்நிகழ்ச்சிகளை நிகழச்செய்து, முன்னிருந்து கேட்டு, நிகழ்ச்சி நிறைவில் நோன்பு களைப்பு நிலையிலும் சொற்பொழிவில், சுட்டுக்காட்டும் இடங்களையெல்லாம் சுவையோடு காட்டி, சொல்மாலை தொடுத்துச்சூட்டி, அந்த நவீன நாவுக்கரசருக்குத் தொகைப் பரிசும் தந்து, ஈத்துவக்கும் இன்பம் அடைவார்கள். மறை.திருநாவுக்கரசு அவர்களின் நாயன்மார் வரிசையில் சுந்தரர் வரலாறு, திருநாவுக்கரசர் வரலாறு, திருஞான சம்பந்தர் வரலாறு, நாயன்மார் வரலாறு, மறைமலையடிகள் வரலாறு ஆகிய நூல்களைப் பதிப்பிக்கப் பெருந்தொகை நன்கொடை



வழங்கி, வரவேற்றுப் போற்றிய புரவலர் குலபதி அவர்கள், மறை திருநாவுக்கரசு ஓய்வு பெற்ற நாளில் அவருக்கு முப்பொழுது எப்போதும் உண்கலமாகப் பயன்பட வேண்டும் என்று தம்முடைய தனி அன்புப் பரிசாக வெள்ளித்தட்டு ஒன்றை வழங்கி பாராட்டினார் அந்தப் பொன்மனச் செல்வர்!

நாயன்மார்களின் மேல் நனி பெற்ற பற்றிருப்பினும், தணியாத தனிப்பற்றுத் திருஞானசம்பந்தா் மீது உண்டு. புனித வாய் மலர்ந்து அழுத திருஞான சம்பந்தர் பாதமலர் பணிந்தேத்தித் திருத்தொண்டு பரவுவாம் என்னும் சேக்கிழார் வழிச் சிந்தனைச் செம்மல் அவர்!

கலம்பக இரட்டையராகத், தாம் புரவலராகவும் செந்தமிழ்ச் செம்மல் அ. சீனிவாச ராகவன் ஆங்கிலப் புலவராகவும் கலந்து, கல்வி நிறுவனங்களைப் பேணி, நலம்பல செய்துள்ளனர். வ.உ.சி. கல்லூரிக்கு முதல் முதல்வர் என்னும் சிறப்பைக் குலபதி செந்தமிழ்ச் செம்மலுக்கு வழங்கிச் சிறப்பித்தார். அ.சீ.ரா. அவர்கள் ஆங்கிலத்துறை, முதுகலைத் துறையாய் மையமிட்டு மேம்பாடு அடையும் வகையில் நற்பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னரும் அப்பணி தொடர்ந்தார்கள். அந்நிலையிலும் அவரைக் கல்லூரி வளாகத்திலேயே குடியமர்த்திக் கண்ணியத்தோடு கல்விக் குடும்பத்தின் கடமை என்று நன்றியறிதலுடன் அவரது மதிப்பு விளங்கச் செய்தார்கள். அன்பு வழியில் அறிவு பெறுவதற்காக அத்தனையும் அறம் என்பதாகச் செயலாற்றியச் சிறந்த செயலாளர். ஆதலின் அன்பு அறிவு அறம் கல்லூரி இலச்சினையில் இலட்சியமாகப் பொறிக்கப் பெற்று இன்றைக்கும் பொலிகின்றன.

பத்தாயிரம் பேர்களுக்கு கல்வி பயிற்றுவித்த பெருமைக்குரியோரைக் குலபதி என்கிறது மகாபாரதம். ஆயிரங்காலத்துக் கல்விப்பயிர் வைத்து இதுவரை லட்சோப லட்சம் கோட்டை விளைச்சலைக் கண்ட இப்பாரதம் கண்ட அதிபதி அவர். இன்னும் பின்னும் விளைவித்து இந்நாட்டைக் காக்க இருக்கிறது அவர் வைத்தியற்றிய தேசியப் பயிர், சுதேசிக் கதிர்ப்பயிர், அத்துணை விளைச்சலும் குறள் களத்தில் கொட்டி நிரப்பப் பெற்றவை!

**மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை**
**என்நோற்றான் கொல் எனும் சொல்**

என்னும் குறளுக்கு ஏற்ப, மொழிக் கிணங்கவும் கட்டிக் காத்துவருகின்ற நம் செயலர் ஏ.பி.சி.வீ சொக்கலிங்கம் அவர்கள், குலபதிக்கு நூற்றாண்டு விழா எடுக்கின்றார்.

**வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு**

என்று உணர்ந்த தகைமையால் கல்வி மேம்பாட்டுக்கு, ஆய்வுப் பணிக்குத் தாராளமாக உதவுவார் நம் தாளாளர். தம் கல்லூரிப் பணியாளர்கள் என்னும் அன்புரிமையால் ஏற்படும் பெருமிதம் நிறைந்த குலபதி, அவர். துறையளவிலான தேசியப் படைப்பயிற்சிக்கு, கப்பல் படைப்பயிற்சிக்கு, சமூக நல விழிப்புணர்வுத் திட்ட அணிவகுப்புக்கு, தேசியம், அரசு மக்கள் நலத் திட்டம் சார்ந்த முகாம்களுக்குத் தங்கு தடையின்றிக் கனிந்துதவுவார்.

**உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு** - குறள்

உலகம் உவப்ப ஒன்று சேர்ந்து உயர வேண்டும் என்பது உயரிய நோக்கம். அதுவே உலகம் தழுவிய உயர்வு. அத்தகைய உலக அறிவுக்குத் தொய்வு என்பதே இல்லை; என்றும் ஒரு சீராகவே இருத்தல் வேண்டும், ஏற்றத் தாழ்வுகளுக்கு இடம் இல்லை என்பதை குறளால்





உணர்ந்ததன் பயனால் ஒவ்வொரு செயலையும் "உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்" என்னும் குறள் வழி உயர்வாகச் சிந்தித்து இயல இயங்கச் செய்தார் எனலாம்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் குறளின் ஓங்கிய குரலைக் கேட்காதவரா குலபதி? நன்றியறிதலுடன் எந்த ஏற்றத் தாழ்வும் இன்றி, உடலுழைப்புத் தொழிலுக்கும் ஏற்றம் தந்து பாராட்டும் பண்பினர் அவர்! எவ்வாறு?

கட்டுமானத் தொழில் மேலாளர் அவரைக்கொண்டே அவரால் கட்டப்பெற்ற கட்டிடத்தைத் திறந்து வைக்கச் செய்து சிறப்பித்தவர் நம் நிறுவனர்! அது மட்டுமா? அந்த மேலாளர் புகைப்படத்தை, கல்லூரி வளர்ச்சி ஆட்சிக்குழு வரிசையில் வைத்து அலுவலகத்தில் காட்சிப்படுத்தியுள்ளார் என்றால் அவரது மாட்சியை எப்படியும் பாராட்டிப் போற்றலாம் தானே!

**''வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம், வேந்தன்கண்**
**ஊறெய்தி உள்ளப்படும்!''**

இத்தகைய செயலாண்மைமிக்கோரின் செயற்பாட்டையெல்லாம் கேட்டு, ஆட்சியாளர்களால் ஆழ்ந்து நினைக்கப்படுவார் என்று கூவி அழைக்கிறது குறள்! தமிழ்நாடு அரசே, குலபதியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவேண்டும்! தேசிய அளவிலேயே கொண்டாட வேண்டுமே!

**''காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்''** என்பது குறளின் நல்ல தீர்ப்பு!

குலபதி, சினம்கொண்டு வெடிப்புறப் பேசுபவர் என்பார்கள். குறிப்பிட்ட செயலைச் செய்து முடிக்க எதனைக் கற்றிருக்க வேண்டுமோ, அதனைக் கற்காமல் வந்து உடற்றுபவரைக் கண்டித்துப் பேசும் சிறுசெயலையும் கூடச் செய்யவில்லை என்றால், எக்காலத்தும் அவரைப் புகழ் சூழாது என்கின்றார், ''கடுஞ்சொல் அல்லனேல்'' என்ற திருவள்ளுவர்!

**''கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்**
**ஒல்லானை ஒல்லாது ஒளி''** - என்பதே அக்குறள்!

அதே வேளையில், மாணவர் போராட்டக் காலங்களில் மாணவர்களைக் கண்டிப்பதுடன் தண்டிக்கவும் வேண்டும் என்ற நிலை வரும் போது, தாளாளர் அவர்கள், ''ஓங்குவது வேகமாக இருக்க வேண்டும்; ஆனால் அடி மென்மையாக விழவேண்டும். மாணவர் கல்வி மேம்பாட்டுக்குத் தடையாய் விழுந்துவிடக் கூடாது'' என்பார்!

**''கடிதோச்சி மெல்ல எறிக; நெடிதாக்கம்**
**நீங்காமை வேண்டு பவர்''** - இக்குறளைத் தாம் பேசும் மேடைகளில் அடிக்கடி எடுத்துக் காட்டுவார்கள். இத்தகைய கனிந்த மனமே குலபதியின் மனம். கடிந்த சொல் எனினும் நெஞ்சில் படிந்த சொல்லாய் வருவதில்லை என்பது தெளிவாம்.

அறுபது அகவை கடந்ததும், கடவுள் தமக்கு ஐந்தாண்டுகள் நீட்டிப்பு (Extension) தந்திருக்கின்றார் என்று சொல்லிவந்தார். நிலையாமை குறித்த நினைப்பு உள்ளுணர்வாய் அவர்க்கு உணர்த்தியிருக்க வேண்டும்! காலத்தில்கழிவது நாள் என்று எண்ணியிருக்கின்றோம்; வள்ளுவரைக் கேட்டால், ''அது நமது வாழ்நாளில் ஒரு பகுதியை வகிர்ந்தெடுக்கும் வாள்; என்கின்றார்!

இறுதி நாள்களில் தமது உடல்நிலை குறித்து எவரிடமும் சொன்னார் இல்லை; சோர்வு; நடைப்பயிற்சியில் தளர்வு; உண்ணும் உணவு ''வயிற்றுக்கும் ஈயப்படும்'' என்னும் நிலை;



ஆனால் கருத்து மாறுபாடு கொண்டவர்களிடையில் எப்போதும் போலப் பீடு நடை; பெருமித நடை! திருக்குறள் தேர்ந்தவர் அல்லவா! ஒரு குறள் அப்படியே படம் பிடிக்கின்றது!

**''நோவற்க நொந்தது அறியார்க்கு; மேவற்க**
**மென்மை பகைவர் அகத்து!''**

அந்த நிலையிலும், ''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்'' என்று தமிழ்மறை வரையறுத்ததற்கேற்பத் தேசியம் பேசப் பீளைமேடு தனியாகவே செல்கின்றார்! சென்னையில் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றார்! அய்ந்தாண்டு நீட்டிப்பு என்று அவர் சொல்லி வந்த புதிர் வெளிப்படப்போகின்றதோ!

**''புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு!''** - என்பது உண்மையாகப் போகின்றதோ!

பாரிய உடல்; ஆனால் பிஞ்சு மனம்! நோய்இன்னதென்று கண்டறிய, மருத்துவர்கள் அந்த சிவநேசச் செல்வரின் நெஞ்செலும்பில் துளை போட்டு அதன் உள்ளீட்டை எடுக்கின்றார்கள்!

காலையில் சிவபூசை, வேல்பூசை நிறைவேற்றிய வண்ணம் நெஞ்சுருக, நாவாரத் திருமுறை ஓதுவார்; பண்ணமைதியுடன் நெகிழ்ந்து குரல்வண்ணம் குழையப்பாடுவார்! அந்தஇசை இரங்கல் முறையீடாயிருக்கும்; தேவாரம் திரட்டும் வாய்; திருவாசகத்தேன்பிலிற்றும் நா ''இறைவன் பொருள் சேர் புகழைப் புரிந்தது; அவருக்கு இருள்சேர் இருவினையும் தீண்டா'' என்றே குறள் முடிவு கூறுகின்றது!

**இருள்சேர் இருவினையும் சேரா; இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

நெஞ்சு எலும்பில் துளைபோடச் சுழற்றும் போது எப்படி இருந்திருக்கும்! குலபதி அவர்கள் அந்த நிலையிலும் நெஞ்சைத் தம்முடைய தளர்ந்த விரல்களால் தொட்டு, ஆதிசங்கரரின் வடமொழிச் சுலோகம் ஒன்றை இடம் கண்டு சொன்னார்கள் என்றால்; தவம்; தவம்; தவமுயற்சி வென்றது; முற்றுப்பெற்றது என்பதாம்! தமக்கு வந்த துன்பத்தைப் பொறுத்து, மற்றவர்க்கு எத்துன்பமும் செய்யாதிருத்தல் ஒன்றே, அவ்வளவே தவம் என்கின்றது குறள்! ஆம் அத்தகைய தவமுதிர்வே அங்கு நிகழ்ந்தது!

**உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு**

தவம் முடிந்தது; எல்லாமே முடிந்தது:

நாம் எதிர்பாராத அந்த இறுதி நாள் வந்தேவிட்டது! ஊரே ஒன்று சேர்ந்து கலங்கிற்று! நிலைத்த புகழை நிலைநிறுத்திவிட்டுப் பூதவுடல் பூந்தேராய்ப் புறப்பட்டுவிட்டது! அழுதனர், மக்கள் தொழுதனர்; ஆர்ப்பரித்தனர்; அய்யகோ இந்த அவலம் நேர்ந்ததே என்று அலறினர்; இப்படியும் நடக்குமா என்று அங்கலாய்த்தனர்; அவரைக் கல்வித்தந்தையாய்க் கண்டு போற்றியோர், குலபதியாய்க் கொண்டு வழிபட்டோர்; அறநெறி அண்ணலாய்ப் புகழ்ந்து மகிழ்ந்தோர்; சிவநேசச் செல்வராய்ச் சிந்தித்துச் சேர்ந்தோர், செயலராய்ச் சிறப்பித்தோர்; முதலாளி என்று அவரிடம் வளைய வளைய வந்தோர்; முனைப்புடன் செயற்பட்டோர், மாணவர், ஆசிரியர், அலுவலர், பொதுமக்கள் என அனைவரும், "அவலக் கவலை கையாறு அழுங்கல் தவலா உள்ளம் தம்பால்" கொண்டு தத்தளித்தனர்; வானமும் தன் பங்குக்குப் பன்னீர் தூவி நின்றது! அப்படியென்றால், அந்தச் சாக்காடு விரும்பி வேண்டிப்



பெறத்தக்கதோ! அதற்காகத்தாம், தமது மறைவை நம் தாளாளர் அதற்குள் எதிர்கொண்டாரோ!

புதிய ரத்தம் பாய்ச்சினால்தான், தாம் பிழைத்தெழக்கூடும் என்று மருத்துவர்கள் முனைப்புடன் செயற்படும் நிலையிலும், மறுத்திடவில்லை. எனினும், ''புலால் உணவு உட்கொள்ளாதவரின் ரத்தத்தைக் கொடுங்கள்'' என்று குலபதி வேண்டினார் என்றால் குறளின் உயிர்க்கோட்பாடுகள் ஆன கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த உறுதிப்பாடு புலனாகின்றது!

குலபதியின் தலைமைப் பன்முகத்திறமைகள் ஒட்டுமொத்தமாய்த் தீட்டப்பெற்ற வைரத்தின் பட்டைகளாய் ஒளிர்கின்றன என்றால், ஒவ்வோர் ஒளிர்வும் மிளிர்வும் அவ்வத்தலைமைப் பண்புடன், அவ்வம் மகனாகத்துலக்கம் உறுகின்றது எனலாம். கல்விப் பணித் தலைமைக்குத் திருமிகு. ஏ.பி.சி.வீ.சொக்கலிங்கம் என்றால், தேசியத் தலைமைக்குத் திருமிகு. வீ.சண்முகம், தந்தை கல்விக்கண் திறந்த கல்வித் தந்தை என்றால், கற்கக் காணும் கண்களைத் திறக்கும் மைந்தனாகத் திருமிகு. டாக்டர். வீ.வேலாயுதம்; வாணிப மரபுக்குத் திருமிகு. வீ.கணபதி மற்றும் ஒருவர் என வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றது.

வ.உ.சி.கல்லூரியிலேயே பயின்று, விலங்கியல் இளங்கலை, முதுகலையில் தேர்ந்து, முனைவர் பட்டத்துக்கும் முனைந்து கற்று, முழுமை பெற்று, இன்று அக்கல்லூரியிலேயே முதல்வராகத் திருமிகு. ஏ.பி.சி.வீ.சொ.வீரபாகு என்று பாட்டனார் பெயரில் விளங்குகின்றார் என்றால் தியாகச் சின்னமாம் வ.உ.சி. கல்லூரி தன்னிறைவு பெற்றுள்ளது என்பதாம். நோன்பின் பயன் நூற்றாண்டு விழாவாகின்றது!

**''இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு''**

வாழ்க குறள்; வாழ்க குலபதியின் நூற்றாண்டுப் புகழ்!

பேராசிரியர் **அ.செகதீசன்,**
தமிழ்வாசகம், ஆரியூர், (வழி) கெடார்;
வெங்கந்தூர் அஞ்சல்,
விழுப்புரம் மாவட்டம் - 605 402

## ஏ.பி.சி. வீரபாகு சட்டசபை பேச்சு

- ★ வீரபரம்பரையைச் சேர்ந்த கட்டபொம்மன் தோன்றியது பாஞ்சாலங்குறிச்சி பிரதேசம். நம் நாட்டிற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தபிரதேசம் அது. அந்தப் பிரதேசத்தின் முன்னேற்றத்திற்கு ஆவனச் செய்ய வேண்டும்.

4-5-1957

- ★ நம்முடைய பஞ்சாயத்து முறைதான் மற்ற நாடுகளுக்கு போய் இருக்கிறது என்று சொல்லலாம். பஞ்சாயத்து என்று சொல்லப்படுகிற ஐந்து பேர் கொண்ட குழு என்று புராதனமாகவே சோழன் காலத்திலிருந்து வந்திருக்கிறது.

4-11-1957



# பட்டமும் அதன் பின்னணியும்

குலபதி ஏ.பி.சி. வீரபாகு அவர்களின் சேவைகளையும் அறிவுத் திறமையும் பாராட்டி பல்வேறு அமைப்புகள் பல பட்டங்களை வழங்கி சிறப்புச் செய்திருக்கிறது. அந்த வகையில் குன்றக்குடி பெரிய அடிகளார் அவர்கள் - திருப்பத்தூர் தமழ்ச்சங்கத்தின் சார்பில் 'தமிழவேள்' என்ற பட்டத்தை ஏ.பி.சி வீரபாகு அவர்களுக்கு, அவர்தம் மணிவிழாவின் போது வழங்கி பெருமைப்படுத்தினார்கள். அதன் பின்னணியைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும்.

ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தமிழ்மீது அதிகம் பற்று கொண்டவர். அதன் காரணமாக தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தை கற்றுக்கொள்ள அவர் முயற்சி மேற்கொண்டார். கடையநல்லூரைச் சார்ந்த தமிழறிஞரும், இலங்கை வீரகேசரி நாளிதழில் ''இராமாயண வரலாற்றுண்மை'' என்ற தொடர் கட்டுரையின் ஆசிரியரும், பல்வேறு நூல்களை எழுதியவருமான திரு. உ.போ. முத்துராமலிங்கம் அவர்களின் தொடர்பு கிடைத்தது. ஏ.பி.சி. வீரபாகு அவர்களின் வேண்டுகோளின்படி உ.போ. முத்துராமலிங்கம் அவர்கள் ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்கு தொல்காப்பியம் பாடம் எடுத்தார். தனது பல்வேறு பணிகளுக்கிடையேயும் நேரத்தை ஒதுக்கி தொல்காப்பியத்தை படித்தார் ஏ.பி.சி.வீரபாகு அவர்கள். அப்போது அவருக்கு 52 வயது. இந்த செய்தியை திருவள்ளுவர் கல்லூரி மேனாள் முதல்வர், பேராசிரியர் சாம்பசிவம் அவர்கள் மூலம் அறிந்த குன்றக்குடி பெரிய அடிகளார் ஒருமுறை ஏ.பி.சி. வீரபாகு அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது இதனைப் பற்றி கேட்டதோடு தொல்காப்பியத்தின் ஒரு சூத்திரத்தின் பொருள் பற்றி இருவரும் விவாதித்தனர். அதற்கு ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் கூறிய விளக்கத்தைக் கேட்டு குன்றக்குடி அடிகளார் ஆச்சரியமடைந்தார்.

பல்வேறு அலுவல்களுக்கிடையேயும் தொல்காப்பியத்தை தெளிவுற கற்ற பாங்கினை பாராட்டும் முகமாக 'தமிழவேள்'' என்ற பட்டத்தை ஏ.பி.சி.வீரபாகு அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்கள் குன்றக்குடி பெரிய அடிகளார்.

**சைவநெறி காந்தி**

## ஏ.பி.சி. வீரபாகு பெற்ற பட்டங்கள்

ஏ.பி.சி.வீ. அவர்கள் தான் மேற்கொண்ட துறைகள் அனைத்திலும் தனது முத்திரையைச் சிறப்பாக பதித்துள்ளார். அன்னாரின் பல்துறை திறமைகளைப் பாராட்டும் முகமாகப் பல பட்டங்கள் அவரை நாடி வந்தடைந்துள்ளன.

### பட்டங்கள்

*கல்வித் தந்தை*
*குலபதி*
*அறநெறி அண்ணல்*
*சிவநெறிச் செல்வர்*
*தமிழவேள்*
*கந்தவேள் அருள்ஒளிமணி*
*தூத்துக்குடி கல்வித்தூண்*
*தொண்டர் திலகம்*
*கூட்டுறவுத் தந்தை*
*சிந்தனை இமயம்*
*பண்பாட்டுச் சின்னம்*
*தூத்துக்குடி நன்முத்து*
*20 நூற்றாண்டின் இராசராச சோழன்*
*தேசிய வழிச் செம்மல்*
*சிவநெறிப் புரவலர்*
*சைவமணி*
*பொருளாதார மேதை*
*சிந்தனைச் சிற்பி*
*அரசியல்மேதை*
*நடமாடும் பல்கலைக்கழகம்*
*காவிதி*





# காலத்தால் செய்த உதவி

**E. குமார்** எம்.ஏ., கீழப்பாவூர்

1972-ஆம் ஆண்டு நெல்லை மாவட்டம் திருக்குற்றாலம்-ஐந்தருவி அருவிக்கு அருகில் இருக்கும் சங்கராஸ்மரத்திற்கு வந்து சுவாமியை சந்தித்து ஆசிபெற வந்தார் ஒருவர். சுவாமியை சந்தித்து உரையாடிக்கொண்டு வரும்போது அங்கே ஒரு கட்டிடம் அரைகுறையாக இருப்பதைக் கண்டார்.

''சுவாமி! இந்தக் கட்டிடம் ஏன் அரைகுறையாக நிற்கிறது?'' என்று கேட்கிறார்.

கேள்விக்கு விடையாக சுவாமி சொன்னார்கள். ''இங்கு வந்து சித்த வித்தியார்த்திகள் தியானம் செய்ய ஒரு கட்டிடம் கட்டவேண்டுமென்பது எனது நெடுநாளைய எண்ணம். அன்பர்களும் ஒரு தொகை சேர்த்துத் தந்தனர். செங்கோட்டையில் இருக்கும் ஒரு கட்டிட ஒப்பந்தக்காரரை அழைத்து வந்து இருக்கும் பணத்தை கொடுத்து கட்டிடம் கட்டச் சொன்னேன். அவரும் வேலையைத் தொடங்கி, இப்போதுள்ள நிலையில், முடித்து 'சுவாமி நீங்கள் தந்த பணத்திற்கு இவ்வளவு வரைதான் கட்ட முடியும்', எனக் கூறி இதை இப்படியே விட்டுவிட்டார். மேற்கொண்டு கட்ட பணம் இல்லாமையால் இவ்வாறு உள்ளது,'' எனச் சொன்னார்கள்.

இதை கேட்டுக் கொண்ட பெரியவர் கூறுகிறார். ''சுவாமி! நான் தூத்துக்குடி சென்று இரண்டொரு நாளில் ஒரு பொறியாளரை அனுப்பி வைக்கிறேன். அவர் இதை முழுமையாக கட்டித் தருவார். அதற்கான செலவை அடியேன் பொறுப்பேற்க அருளவேண்டும்'' என்றார்.

சுவாமியும் புன்னகையோடு சம்மதிக்க, அந்தத் தியான மண்டபம் முழுமை பெற்று உயர்ந்த கட்டிடமாக எழுந்தது. வந்த பெரியவர் வேறு யாருமல்ல. நமது குலபதி. ஏ.பி.சி. வீரபாகு அவர்கள்தான்.!

1974ம் ஆண்டு ஆகஸ்ட் 30ம் நாள் சுவாமிகள் சமாதி அடைந்த செய்தி கேள்விப்பட்டு விரைந்து வந்த ஏ.பி.சி.வீரபாகு அவர்கள், மிகுந்த மன வேதனையோடு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சுவாமிக்கு அஞ்சலி செலுத்தினார்கள். குலபதி அவர்களின் பணிவும், வள்ளல் தன்மையும் இந்த நிகழ்வுகளின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

(இந்தத் தகவலை என்னிடம் சொன்னவர் ஆசிரமத் தலைவர் பிரம்மஸ்ரீ ஆ.சிவராமகிருஷ்ணன் அவர்கள்).

*உயர்ந்த லட்சியங்களுடன் சேவை செய்தவர் ஏ.பி.சி.விரபாகு*

***தி.சு.அவினாசிலிங்கம்***
*கோவை*

*வ.உ.சி.யின் வழித் தோன்றலாக இருந்து பாரம்பரியத்தைக் காத்து பல்லாற்றாலும் பொது மக்களுக்கு நன்மை புரிந்தவர்*

***ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டாரச் சந்நிதி சுவாமிகள்***
*திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்*



# பல் துறைகளில் வெற்றி கொடி நாட்டியவர்

எஸ். நயினார் குலசேகரன் - நட்டாத்தி

**ஏபிசி** என்று அனைவராலும் அன்பாய் அழைக்கப்படும் வீரபாகு அய்யாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளிவரும் மலரிலே அய்யாவைப் பற்றி இக்கட்டுரையைப் பதிவு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஏபிசி அவர்கள் சிறந்த ஆன்மீகவாதி, அரசியல் மேதை, கல்வித் தந்தை, கூட்டுறவு ஆசான் என்று பெயர் பெற்றவர். அய்யாவை பற்றி நான் அறிந்த சில விவரங்களை மட்டும் இங்கு பதிவு செய்கிறேன்.

**சிறந்த ஆன்மீகவாதி :** அய்யா அவர்கள் ஒவ்வொருநாளும் அவர்கள் வீட்டில் பூஜை அறையில் அதிகாலை பூஜை செய்யும்போது அந்த ஓசையில் வாடித்தெரு மக்கள் துயில் எழுவார்கள் என்று அந்தத் தெரு மக்கள் கூறுவார்கள். ஒரு நாள் ஏ.பி.சி அவர்கள் அழைப்பின் பேரில் அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். அங்கு முருகன் அடிமை ஸ்ரீலஸ்ரீ பன்றி மலை சுவாமிகள் இருந்தார். அவர் என் கையில் சில உதிரிப் பூக்களை கொடுத்து ‘முருகா கையை திறந்து பார்’ என்றார். திறந்து பார்த்தேன். கையில் திருச்செந்தூர் முருகனுடைய இலை விபூதி, பிரசாதம் இருந்தது. போதுமா? என்று ஏபிசி அவர்கள் கேட்டார்கள். நான் போதும் என்றேன். இதன் மூலம் ஏ.பி.சி. அவர்களின் ஆன்மீகத்தையும் அவருக்கு பிரியமானவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தையும் புரிந்துகொள்ள முடிந்தது. 17 வருடங்களுக்குப்பின் மீண்டும் தூத்துக்குடியில் நடைபெற்ற முதல் தசரா சப்பர பேரணிக்கு தலைமை வகித்து நடத்திக் கொடுத்தார். இப்பேரணி இன்று வரை தொடர்ந்து நடத்திடவும், ஆன்மீக வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தார்கள்.

**அரசியல் மேதை :** ஏபிசி அவர்கள் எந்தப் பொருள் பற்றியும் தெளிவாகப் பேசக் கூடியவர். அய்யா அவர்களின் மேடைப் பேச்சு கருத்தாழ மிகுந்ததாக இருக்கும். எந்தக் கேள்விக்கும் உடனே பதில் சொல்லும் திறமை வாய்ந்தவர். அத்துடன் ஏபிசி அவர்கள் மேடையில் பேசுவது குயிலின் குரலைப் போல் இனிமையாக இருக்கும். எனவே, அவருடைய குரல், வளமிக்க பேச்சாற்றல், பேச்சில் தெளிவான கருத்துகள் இவைகளை வைத்து **அரசியல் மேதை** என்று அழைக்கப்பட்டார்.

**கல்வித்தந்தை :** ஏபிசி அவர்களின் தாரக மந்திரம் கல்வியை வியாபாரமாக்காதே என்பதாகும். அதனடிப்படையில் சுதந்திரப் போராட்ட வீரரும், கப்பலோட்டிய தமிழரும், செக்கிழுத்த செம்மலுமான வ.உ.சி.யின் பெயரில் தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரம் கல்லூரியை ஆரம்பித்து கல்வியை வியாபாரமாக்காதே என்ற தனது கொள்கையை அமுல்படுத்தியவர். அத்துடன் பல கல்வி ஸ்தாபனங்களை நிறுவி ஏழைகளையும் கல்வி கற்க செய்தார். இதனால் பல ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியர்கள் பயனடைந்தார்கள். இதனால் ஏபிசி அவர்கள் கல்வித் தந்தை என்று மக்களால் அழைக்கப்பட்டார். கல்வியை வியாபாரமாக்காதே என்ற தனது கொள்கையை தனது வாரிசுகளும் பின்பற்றிட முறைப்படுத்தினார். அவரது எண்ணம் போல் அவரால் துவக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் அவரது வாரிசுகளால் இன்றும் நடத்தப்படுகிறது.

**நேர்மை வழி :** ஏபிசி அவர்களின் திறமையை பயன்படுத்த வேண்டும் என்று பெருந்தலைவர் காமராஜர் போன்ற தலைவர்கள் எண்ணியதின் காரணமாக திருவைகுண்டம் சட்டசபை தொகுதியில் 1957-லிருந்து 1967 வரை 10 ஆண்டுகள் எம்.எல்.ஏ-வாக இருந்து அரும்பணியாற்றினார். ஏ.பி.சி. அவர்களின் நேர்மைக்கு ஒரு உதாரணம் கூறுகிறேன்.





அவர்கள் எம்.எல்.ஏ-வாக இருந்த போது திருவைகுண்டம் தொகுதியில் ஆறுமுகமங்கலம், மாரமங்கலம் விவசாயிகள் போராட்டம் நடைபெற்றது. அப்போது ஏரலில் விவசாயிகள் - நிலச்சுவான்தாரர்கள் அடங்கிய ஒரு சமாதானக் கூட்டத்தை நடத்தி அதில் காங்கிரஸ் அரசு நிறைவேற்றிய குத்தகைதாரர்களை நிலத்தைவிட்டு வெளியேற்றக்கூடாது என்ற குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டத்தை கூறி விவசாயிகளின் கோரிக்கைகளை நியாயப்படுத்தினார்கள். இதனால் விவசாயிகளின் கோரிக்கை வெற்றி பெற்றது. ஏ.பி.சி அவர்களின் நேர்மை கண்டு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். சில காங்கிரஸ் நிலச்சுவான்தாரர்கள் அதிருப்தி அடைந்தார்கள். ஏ.பி.சி அவர்கள் கடைபிடித்து வந்த நேர்மையை இச்சம்பவம் உறுதி செய்தது.

**வர்த்தகத்தின் வழிகாட்டி :**

தூத்துக்குடி மாநகரம் தென் இந்தியாவிலேயே ஒரு தொழில் நகரமாக விளங்கிட அதன் வழிகாட்டியாக இருந்த ஏபிசி அவர்கள், தூத்துக்குடி வர்த்தக சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார். ஏற்றுமதியையும், இறக்குமதியையும் அபிவிருத்தி செய்ய தூத்துக்குடி துறைமுகத்தை கொண்டு வந்ததிலேயே ஏ.பி.சி. அவர்களுக்கு முக்கிய பங்குண்டு. அதேபோல் ஸ்பிக் உரத்தொழிற்சாலை, தொழிற்பேட்டை தூத்துக்குடிக்கு வந்ததிலும் ஏ.பி.சி அவர்களின் பெரும் முயற்சியே காரணமாகும். தொழில்வளர்ச்சியிலும், வியாபாரத்திலும் தூத்துக்குடி முதன்மை பெற காரணமாக இருந்தார்.

**கூட்டுறவு ஆசான் :**

தூத்துக்குடியில் தற்போது சென்ட்ரல் ஸ்டோர்ஸ் என்றும் தூத்துக்குடி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை என்ற பெயரிலும் இயங்கி வரும் கூட்டுறவு பண்டகசாலை 04.06.1940-ல் பதிவு செய்யப்பட்டு 09.06.1940-ல் டிஸ்ட்ரிக் சென்ட்ரல் ஸ்டோர்ஸ் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டது. இதன் முதல் தலைவர் ஜே.எல்.பி.ரோச் விக்டோரியா ஆவார். அதன்பின் 1950-ல் தலைவராக பொறுப்பேற்ற ஏ.பி.சி அவர்கள் இதன் தலைமையகத்தை தூத்துக்குடிக்கு மாற்றினார். ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் போன்ற அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரங்களை பிரதான வியாபாரமாக்கினார். 1953-ல் திருநெல்வேலி மாவட்டம் முழுவதுக்கும் இந்தக் கூட்டுறவு சங்கமே, நெல் கொள்முதல் செய்தது. மேலும் காப்பித்தூள் வியாபாரம், உரம், அரிசி, பாடப்புத்தகம், வெளிநாட்டு கைகடிகாரங்கள், துணி வகைகள் விற்பனை செய்யப்பட்டது. வெற்றிகரமாக இச்சங்கத்தை நடத்தி ஊழியர்களுக்கு 4 மாத போனஸ் வழங்கப்பட்டது. ஸ்டேட் பாங்க் ஊழியர்களுக்கு நிகராக இக்கூட்டுறவு ஸ்டோரின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது. இப்படி ஏ.பி.சி அவர்களைத் தலைவராக கொண்ட கூட்டுறவு ஸ்டோரின் வியாபாரமும் செல்வாக்கும் கொடி கட்டி பறந்து சாதனை புரிந்தது. தற்போதும் இக்கூட்டுறவு சங்கம் தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

மேலும் செங்கோட்டை, கோவில்பட்டி, சங்கரன்கோவில், திருச்செந்தூர், திருவைகுண்டம், தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, முதலிய இடங்களில்கூட்டுறவு கிளைச் சங்கங்களை ஆரம்பித்தும், பால் கூட்டுறவு சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் இப்படி பல கூட்டுறவு சங்கங்களை ஆரம்பித்து, செயல்படுத்தி கூட்டுறவு இயக்கத்தை வளரச்செய்தார். இதனால்



ஏ.பி.சி அவர்கள் 'கூட்டுறவு ஆசான்' என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

**திறமைமிக்கத் தலைவர் :**

தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபோது நடைபெற்ற சட்டமன்ற இடைத் தேர்தல்களில் தூத்துக்குடி தொகுதியில் சட்டிக்கொட்டு மூலம் காங்கிரஸ் பிரச்சாரம் செய்த ஏழைத் தொண்டன் சட்டிக்கொட்டு சாமுவேல் என்பவரை தேர்தலில் நிறுத்தி வெற்றி பெறச் செய்தார். அதேபோல் விவசாயக் குடும்பத்தில் பிறந்து வக்கீலாக பணிபுரிந்த காந்தியவாதி சுந்தர்சிங்கை தூத்துக்குடி தொகுதி இடைத்தேர்தலில் நிற்கவைத்து ஜெயித்து காட்டினார். மேலும் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டு காமராஜ் அவர்கள் தலைமையில் ஸ்தாபனக் காங்கிரஸ் பலமாகயிருந்தபோது, இந்திரா காங்கிரஸ் கட்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்று அதனைத் திறம்பட நடத்தினார். ஸ்தாபன காங்கிரஸ் பலமாக இருந்தபோதிலும் ஓய்வு பெற்ற ஏழை ஆசிரியர் செல்லச்சாமி என்பவரை தென்காசி தொகுதியில் போட்டியிட வைத்து அவரை பாராளுமன்றத்திற்கு அனுப்பினார். அப்படிப்பட்ட மாபெரும் தலைவரின் ஆதரவோடு நான் நெல்லை மாவட்ட இந்திரா காங்கிரஸ் செயலாளராக பணிபுரிந்ததிலும், ஸ்ரீவைகுண்டம் சட்டப்பேரவை தொகுதியில் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டதிலும் பெருமிதம் கொள்கிறேன்.

ஒவ்வொரு துறையிலும் தனது ஆற்றல் மூலமும், திறமையின் மூலமும், அறிவாற்றல் மூலமும் தனது வெற்றிக் கொடியை நாட்டியவர் அய்யா ஏபிசி அவர்கள். குறிப்பாக அரசியல், கல்வி, கூட்டுறவு, ஆன்மீகம் ஆகிய நான்கு துறைகளிலும் மாபெரும் வெற்றியைப் பதிவு செய்தவர் அய்யா ஏ.பி.சி. அவர்கள். அவர்களின் திருநாமம் பலநூறு ஆண்டுகள் அனைவர் மனதிலும் இடம் பிடிக்கும் என்பது நிச்சயம்!

## எங்கேயும் எப்போதும்

ஒரு சமயம் சென்னை யிலிருந்து ரயிலில் வந்து கொண்டிருந்தேன். பக்கத்தில் இருந்த பயணியும் நானும் பரஸ்பரம் பேசிக் கொண்டிருந்தோம். அவர் கோவில்பட்டிக்காரர். நான் தூத்துக்குடி என்றவுடன், 'ஐயா, நான் வ.உ.சி. கல்லூரியில் தான் படித்தேன். ஏ.பி.சி. ஐயாவைத் தெரியுமா?' என்றார். 'நன்றாகத் தெரியும்' என்றவுடன், 'இன்றைக்கு நான் அரசுப் பதவியில் இருப்பதற்கு காரணம் ஐயா அவர்கள்தான். நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன். சலுகை பெற்று வ.உ.சி கல்லூரியில் சேர்ந்தேன். பிற்பட்டோர் சான்றிதழில் ஏற்பட்ட சிக்கலினால் சலுகை ரத்தானது. பணம் கட்ட எனக்கு வசதியில்லை, என்ன செய்வதென்று யோசனை பண்ணிக் கொண்டிருக் கையில், ஐயா அவர்கள் மாலை 5.30 மணிக்கு அவர்களைச் சந்திக்கச் சொன்னார்கள். முன்பின் தெரியாத என்னை வர சொல்லி இருக்கின்றார் களே என்று எனக்கு ஒரே பயம்: சென்றேன். என்னைப் போன்று சுமார் 50 மாணவர்கள் இருக்கும். சலுகை இல்லையென்று பயப்படாதீர் கள். நான் அரசினை அணுகி உங்களுக்கு சலுகை வாங்கித் தருவேன். படிப்பை பாதியில் நிறுத்தி விடாதீர்கள். சலுகை வரும் வரைக்கும் பணமும் கட்ட வேண்டியது இல்லை,' என்றார்கள். பின்னர் அரசு சலுகையினைப் பெற்று தந்தார்கள். அதனால் நான் இன்று அரசு வேலை பார்க்கிறேன், என்றார்.

**சைவநெறி காந்தி**





# தீர்க்கதரிசிக்கு வணக்கங்கள்

**முனைவர் பேரா. இரா. செல்வக்கணபதி**

தலைமைப் பதிப்பாசிரியர் -

சைவ சமயக் கலைக் களஞ்சியம் - சென்னை - 600 090

**மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**

**தம்புகழ் நீர்இத் தாம்மாய்ந் தனரே**

என்பது புறநானூற்றின் வைரவரிகள்.

கடந்த 20 ஆம் நூற்றாண்டின் பெருமைமிகு தமிழ் மகன் என்று ஒரு பட்டியல் தயாரித்தால் அதில் முதல் பத்து இடத்தில் ஒருவராக நிற்பவர் அமரர் குலபதி ஏ.பி.சி வீரபாகு அவர்கள்.

1900 வரை 19 நூற்றாண்டுகளில் உலகம் பெற்ற ஆமைவேக வளர்ச்சியைப் புரட்டிப் போட்டு 20ஆம் நூற்றாண்டு இமாலய சாதனை படைத்தது.

இன்றைக்கு 69 ஆண்டுகளுக்கு முன்னரே கல்வியின் தேவை உணர்ந்து, சுதந்திரப் போராட்டப் போரின் சுடரொளி வ.உ.சிதம்பரனார் பெயரில் கல்விக் கழகத்தை நிறுவிய தீர்க்க தரிசி வீரபாகு ஐயா அவர்கள்.

கல்வியை வணிகமாக்காத கம்பீரத்தோடு கடந்த நூற்றாண்டில் கல்விக்கழகங்கள் பலவற்றைக்கண்ட பச்சையப்பனார், வள்ளல் அழகப்பர், ராஜா அண்ணாமலை செட்டியார், கருமுத்து தியாகராஜ செட்டியார், கோவை அவிநாசிலிங்கம் செட்டியார் போன்ற மாபெரும் மனிதர்களில் ஒருவராக - சரிசமமாக வைத்து மதித்துப் போற்றத்தக்க மாபெரும் மனித நேயர் குலபதி வீரபாகு அவர்கள்.

**''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**

**பேணித் தமராக் கொளல்''**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க பல்துறை அறிஞர்களை எல்லாம் இனம் கண்டு, அன்னாரை வருந்தி அழைத்து, தம் கல்வி நிலையங்களில் பணியாற்றச் செய்து, தம் கல்வி நிலையங்களை அறிவுக் கோயிலாக உயர்த்திப் பிடித்தவர்.

சைவமும்-தமிழும் அன்னாரின் இரு கண்கள். விருந்தோம்பல் அவர்கள் குலப்பெண்களின் குருதிகளோடு இரண்டறக்கலந்தது. உயர்ச்சிப்பற்றி வரும் செருக்கின் நிழல் கூடத் தம்மீது படிந்து விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக வாழ்ந்தவர்கள், வாழ்ந்து வருபவர்கள், தமிழகத்துச் சைவ வேளாளர்கள். தமிழில், தமிழ் மற்றும் ஆன்மீக இலக்கியங்கள் எண்ணாயிரம் படைத்த ஒளிபூத்த அறிவினர். சைவ வேளாளர்களுக்கு உரிய மேற்கூறிய அத்தனை உயர் பண்புகளையும் ஒரு சேரப்பெற்று எம் குலத்தின் தலைவராக - 'குலபதியாக உயர்ந்து நின்றவர் அமரர் ஏ.பி.சி. வீரபாகு அவர்கள்.



அரசியலிலும் அவர் தடம் பதித்தவர். அவரிடம் அரசியல் நாகரிகம் பூண்டு மலர்ந்தது.

ஆன்மீக வளர்ச்சிக்கு அவர் அள்ளிக்கொடுத்த நன்கொடைகளும், ஆற்றிய அரும்பணிகளும் தனியே ஆராயப்படவேண்டிய பரப்புடையது.

கேலிக்குரியதாகி, மடியும்நிலையில், இன்று ஊசலாடும் கூட்டுறவு இயக்கம் வீரபாகு அவர்கள் காலத்தில் தென் மாவட்டங்களில் மதிக்கத்தக்க மானுடப் பண்பின் வெளிப்பாடாக ஒளிர்ந்தது.

நியாயத்தோடு, நாணயத்திலும் கம்பீரமாக உயர்ந்து நின்ற அன்னார் வங்கி வணிகத்திலும் முத்திரை பதித்தார்.

வினோபா கண்ட பூமிதான இயக்கம் - தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் பெற்ற இமாலய வெற்றிக்கு குலபதி அவர்கள் மூல காரணராக நின்றார்.

தமிழகத்தின் வட மாவட்டங்களில் சிறந்திருந்த நூலகக்கலை, தென் மாவட்டங்களில் இல்லையே என்ற ஆர்வலர் பலர் கவலையை நீக்கி பல்லாயிரம் நூல்கள் இடம்பெற்ற ஒரு பிரமாண்ட நூலகத்தை நிறுவினார்.

இந்திக்கு எதிரான போராட்டங்கள் ஒரு பக்கத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில், அஞ்சாது தேசிய பொதுமொழி ஒன்றின் தேவையுணர்ந்து இந்தி பிரசார சபையையும் அவர் நேசக்கரம் நீட்டி ஆதரித்தார்.

அன்னாரின் நூறாண்டு விழா நிகழும் நாளில் அந்த தீர்க்க தரிசியைத் திசைநோக்கி வணங்குகின்றேன். வாழ்க அவர்புகழ்,

அன்பன் **இரா. செல்வக்கணபதி**

*கூட்டுறவு, கல்வி, சமயம், வாணிபம், அரசியல் முதலிய துறைகளில் உயர்நெறி நின்று பணியாற்றியுள்ளார்.*

***சு.அருணாசலம்,***
*தமிழ்நாடு காந்தி நினைவு நிதி*

## ஏ.பி.சி வீரபாகுவின் நூலகக் கனவு

ஏ.பி.சி வீரபாகுவின் கனவுகளில் ஒன்று நாளந்தா பல்கலைக்கழகத்தில் உள்ள ஆராய்ச்சி நூலகம் போன்று ஒரு நூலகத்தை ஏற்படுத்த வேண்டும். அது தென் மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு பயன்பட வேண்டும் என்பது. எனவே நூலகத்தில் தனிக்கவனம் செலுத்தினார்கள். வ.உ.சி கல்லூரியில் உள்ள ஏ.பி.சி வீரபாகு நினைவு நூலகத்தில் தற்சமயம் சுமார் 75000 நூல்கள் உள்ளன. மேலும் ஏ பி சி வி சொக்கலிங்கம் மணிவிழாவை முன்னிட்டு ஐ.ஏ.எஸ் போன்ற தேர்வுகளுக்கு செல்லும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அது சம்பந்தப்பட்ட நூல்கள் நிறைய வாங்கப் பட்டுள்ளது. மேலும் INFLIP என்ற திட்டத்தில் எந்த பல்கலைக்கழகத்தோடும் தொடர்பு கொண்டு அங்குள்ள நூல்களை இங்கிருந்தே படிக்க - பிரதி எடுக்க வசதி செய்யப்பட்டுள்ளது.





# மறைந்தும் மறையாத மாமனிதர்

**இரா. கள்ளப்பிரான், துணைப் பொது மேலாளர் (ஓய்வு) ஐ.ஓ.பி.,**
பாண்டியன் கிராம பாங்க் முதல் சேர்மன்



நேர்மை, உறுதி, கம்பீரம், கொள்கைப் பிடிப்பு, சேவை, பக்தி, சாதுர்யம், செயலாக்கம் போன்ற நற்குணங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்தவர் குலபதி திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்கள். அந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் மறைந்த திரு. எம். சங்கரபாண்டியன் பிள்ளை அவர்கள் வீட்டில், நான் முதன் முதலாகத் திரு. ஏ.பி.சி. வீரபாகு அவர்களையும், அந்நாள் மத்திய நிதிஅமைச்சர் திரு. சி.சுப்ரமணியம் அவர்களையும், புளியங்குடியில் சந்தித்தேன். முதல் சந்திப்பிலேயே அவர்களது குணங்களாலும், திறமையாலும், தோற்றப் பொலிவாலும் கவரப்பட்டேன். அப்போது நான் புளியங்குடி ஐ.ஓ.பி. மேலாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன்.

அது ஐ.ஆர்.8 காலம். வங்கிகள் அரசுடைமை ஆக்கப்பட்டிருந்தன. ஏழை, எளிய மக்கள், விவசாயிகள், குறு, சிறு தொழில் ஆற்றுவோர், சுயவேலை செய்வோரெல்லாம் வரவேற்கப்பட்டு, வங்கிச்சேவை விரிவுபடுத்தப்பட்டிருந்தது. உண்மையான உற்சாகத்துடன் எங்கள் கிளை பகலும், இரவும் பணியாற்றி ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. ''**பிச்சைக்காரர் கடைக்காரரானார்**''!.இது பற்றியெல்லாம் விரிவாக எடுத்துரைத்து தேசிய மயமாக்கப்பட்டபின் ''வங்கிச் சேவை வியக்கத்தக்க வகையில் விரிவடைந்திருக்கிறது'' என்பதைப் பற்றி பல பொதுக்கூட்டங்களில் பேசும் போது, இவரையும், இவர் கிளையையும் தான் எடுத்துக்காட்டாகக் கூறுவேன்'' என்று திரு. சங்கரபாண்டியன் பிள்ளை சொன்னதை வெகு உற்சாகமாக வரவேற்ற திரு. ஏ.பி.சி.வீ. அதன்பின் பல மேடைகளில் அதுபற்றிப் பேசியதாக பின்னர் என்னிடம் தெரிவித்தார்.

இப்படி எங்களுக்கிடையே ஏற்பட்ட புரிதல், பன்மடங்கு பெருகி, ஒரு இணக்கமான கூட்டுறவாக உருவெடுத்தது. நான் தூத்துக்குடி கிளை மேலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, நாங்கள் பல ஊர்களில் கடன் வழங்கு விழாக்களில் கலந்து கொண்டோம். அவர்கள் வந்து கலந்து கொள்வதற்கு வசதியாகவே பற்பல கடன் வழங்கு விழாக்களை அமைத்தேன். அவரது கட்சியைச் சார்ந்தவர்கள் இதைச் சுட்டிக்காட்டிப் பேசியதாக ஒருமுறை என்னிடம் சொன்னார்.

அந்தக் கூட்டங்களில் எல்லாம், ஆக்கபூர்வமான கருத்துக்களை அவர் எடுத்துச் சொல்லி, ''எப்படிக் கடனை வாங்குகிறீர்களோ அது போல் உரிய நேரத்தில் கடனைத் திருப்பிக்கட்டி விடவேண்டும். அப்போதுதான் வங்கியுடன் உங்கள் உறவு நீடித்திருக்கும்'' என்பதை அழகாக எடுத்துரைப்பார். ''ஒவ்வொரு வங்கிக்கும் ஒரு வரையறுத்த பணி, பாணி இருக்கும். அதைப் புரிந்து கொண்டு நீங்கள் பயன்படுத்தினால் நீடித்த நன்மை கிடைக்கும்'' என்று அவர் சொல்லும் போது, ஒரு கூட்டுறவு வங்கித்தலைவர், ஓர் அரசியல்வாதி, ஒரு வியாபாரி, வர்த்தக வங்கி சேர்மன், ஒரு கல்வியாளர் என்று பன்முகம் காட்டுவார்.



முன்னர் நான் தூத்துக்குடியில் பயிற்சி அதிகாரியாக (1963ல்) பணியாற்றிய போதே திரு. ஏ.பி.சி.வீ அவர்கள் தலைவராயிருக்கும் ''தி செளத் இந்தியா பாங்க் லிமிடெட், இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்குடன் இணைந்தால் நல்லது'' என்ற என் கருத்தை எங்கள் வங்கி மேலதிகாரிகளிடம் வெளியிட்டேன். அப்போதைய உதவிப் பொதுமேலாளர், திரு. ஏ.பி.சி.வீ யுடன் அது பற்றிப் பேசினார். ஆனால் அப்போது உடன்பாடு ஒன்றும் ஏற்படவில்லை. அடித்தளம் இடப்பட்டது. பின்னர் இரண்டு வங்கிகளும் இணைந்தது வரலாறு.

அன்றைய தமிழ்நாட்டு அரசியல் நிலையை, தமிழக அரசின் செயல்பாடுகளை அலசி, அவர் தயாரித்து, நாட்டின் பிரதமருக்கு அளித்த அறிக்கை பிரசித்தமானது. பிரதமரால் மிகவும் பாராட்டப்பட்டது. 'அவரை இன்னும் பெரிய அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்', என்று பிரதமர் திட்டமிட்டு நடவடிக்கை எடுக்கும் சமயத்தில், நமது ஊழ் நம்மிடமிருந்து அவரைத் திடீரெனப் பிரித்துவிட்டது.

மனிதருக்கு ''முகத்திரண்டு கண்ணான'' கல்வியை அளிப்பதில் அவர் காட்டியுள்ள அக்கறை, அவர் வகுத்துச் சென்ற நடைமுறை, அவர் அமைத்துத் தந்த உறுதியான மேடை, ஒவ்வொரு குடிமகனையும் இறும்பூது எய்தச் செய்கின்றது. செய்கின்ற காரியங்கள் யாவற்றையும் சிறப்பாகச் செய்கின்ற அதே நேரத்தில், வாய்மை தவறாத அவருடைய நடைமுறை, வள்ளுவத்திலும், காந்தியத்திலும் அவருக்குள்ள ஈடுபாட்டை, சத்தியத்தைக் காத்து மற்றவர்களுக்கு வழிகாட்டுகின்ற பாங்கினை எடுத்துரைப்பதாக இருக்கிறது.

அவருடைய தலைமையில் எங்கள் வங்கி நடத்திய விழாவில், கேடயமும் கையுமாக அவர் கம்பீரமாகக் காட்சி தரும் நிழற்படம் பார்த்தேன். அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கேடயம் வழங்குவதற்கும், பெறுவதற்கும் தகுதியுள்ள ஒரு பெரிய தலைவரை, தேசத்திற்கே சொந்தமான ஒரு சிறந்த சிந்தனையாளரை, நிர்வாகியை, வங்கியாளரை, செயல்வீரரை, அவரது நூற்றாண்டு விழாவின்போது நினைவு கூர்ந்து, அவருக்கு நமது தாழ்மையான வணக்கங்களைத்தந்து, இச்சிறு நினைவஞ்சலியை நிறைவு செய்கிறேன்.

அவர் ஆரம்பித்து வைத்த பலசேவைகளை, அவரது வழித்தோன்றல்கள் வெகுசிறப்பாக நடத்திக் கொண்டிருப்பது கண்டு அவர் மகிழ்ந்து வாழ்த்துவது உறுதி !

**பாங்குகளை தேசியமயமாக்கியது சரியா என்ற ஏ.பி.சி.வி பேச்சிலிருந்து**

சோஷலிசம் என்பது ஒரு பொருளாதாரக் கோட்பாடு. சமுதாயம் வளர்ச்சியை நோக்கிச் செல்லும் திசை வழியை விஞ்ஞானப் பூர்வமாகக் காட்டும் தத்துவம். ஆனால் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் மக்களின் தேவையை அது பூர்த்தி பண்ணும். பொது மக்களின் சேமிப்பு பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்கிப் பயன்படுத்த வேண்டும். ஷேம நல அரசாங்கம் (Welfare State) இதில் கவனம் செலுத்துவது இன்றியமையாத கடமை ஆகும்.





## சான்றோரைப் போற்றும் தன்மையர்

தமிழ்ச் சான்றோர்களை பெரிதும் போற்றி வந்தார். சைவ சமய ஆதீனகுருமகா சந்நிதானங்கள், திரு. கி.வா.ஜகந்நாதன், திருமுருக கிருபானந்த வாரியார் போன்ற பெரியவர்களின் பாதங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குவார். அன்னாரின் செயல்.

"*மாலற நேயமலிந்தவர் வேடமும்*
*ஆலயந் தானும் அரனெனத் தொழுமே*"

**(சிவஞானபோதம். சூத்.12)**

என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாய் திகழ்கிறது.

அன்னாரின் சமயப்பற்று தமிழ்மொழிப் பணியாகப் பரிணமித்தது. சமயப் பெரியோர்களின் சொற்பொழிவுகளும், தமிழறிஞர்களோடு கொண்ட தொடர்பும் அப்பணி மேலும் சிறப்புற உதவின.

# பண்புகள் பல... பார்வைக்குச் சில...

- ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் நாள் தவறாமல் காலையில் சிவ பூஜை செய்வார்கள். வெளியூர் செல்லும் போதும் பூஜை பெட்டியை எடுத்துச் செல்லுவார். ரயிலில் பயணம் செய்யும் போது கூட பூஜை செய்ததை அவருடன் பயணம் செய்த என்னுடைய அலுவலக அதிகாரி கூறி ஆச்சரியப்பட்டார்.
- எந்தப் பொருளையும் பணத்தையும் சிக்கனமாக தேவைக்கு கையாளும் குணம் கொண்டவர்.
- தைப் பொங்கல் திருநாளன்று அவருடைய இல்லத்தில் அவரிடம் ஆசி பெறுவதற்கு கட்சி, கல்லூரி, கூட்டுறவுத் துறை, வங்கி, சேவாதளம் உட்பட பல்வேறு அமைப்பைச் சார்ந்தவர்கள், அவரால் பயன் பெற்றவர்கள் மற்றும் அவர் மீது மரியாதை கொண்டவர்கள் வருவார்கள். அவர்கள் மத்தியில் அந்தந்த துறையைச் சார்ந்து பல விவரங்களை பேசுவார்கள்.
- கருத்துச் செறிவு கொண்ட அவரது மேடைப் பேச்சு, குறிப்பு எடுப்பதற்கு வசதியாக இருக்கும்.
- தெட்சிண பாரத் இந்தி பிரச்சார சபையின் உதவித் தலைவராக இருந்த போது சபை ஊழியர்களின் சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளார். அதோடு ஊழியர்களுக்காக சென்னையில் வீடு கட்டும் திட்டத்திற்கு உதவி செய்தார். நன்றியை தெரிவிக்கும் விதமாக ஊழியர்கள் ஏ.பி.சி. வீரபாகு காலனி என்று பெயர் வைத்துள்ளனர்.

**-சைவநெறி காந்தி**



# அடித்தளம் அமைத்துத் தந்தவர்

**இராம.சிதம்பரம்**
முன்னாள் தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவர்,
முன்னாள் நாகை - மாவட்ட காங்கிரஸ் தலைவர்,




1969-ல் இந்திய தேசிய காங்கிரஸ் இரு பிரிவுகளாகப் பிளவுப்பட்டது. அன்னை இந்திராவின் தலைமையேற்று தமிழகத்தில் திரு. ஆர்.வி.சாமிநாதன், தலைமையில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு காங்கிரஸ் தளபதியாக விளங்கியவர் திரு. ஏ.பி.சி. வீரபாகு அவர்கள்! 1970ல் தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் கோபால்சாமி தென்கொண்டார், தமிழ் மாநில இந்திரா காங்கிரஸ் மாநாட்டினை நடத்திய போது, APC வீரபாகுஜி அவர்கள் பொருளாதாரத் தீர்மானத்தை அம்மாநாட்டில் முன்மொழிந்து, சிங்கம் என கர்ஜனை புரிந்து, பொருளாதார சிந்தனைகள், வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்ட காரணிகளை எடுத்துக் கையாண்டவிதம், இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டு இருக்கின்றன. அய்யா வீரபாகுஜி அவர்கள், தலைவர் RVSக்கு பிறகு, அன்னை இந்திராகாந்தியால் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். தமிழக காங்கிரஸ் வரலாற்றில் அப்படியொரு விவேகமிக்க, மற்றும் சுறுசுறுப்புடன் செயல்பட்டு, உரியவர்களுக்கு உரிய அங்கீகாரம் அளித்து செயல்பட்டதன் விளைவாகதான் இன்றைக்கும் தமிழகத்தில் காங்கிரஸ் ஜீவித்துக் கொண்டு இருக்கிறது. 3 மாதங்களுக்கு ஒருமுறை மாநிலம் முழுவதும் சுற்றிச்சுற்றி வந்து, காங்கிரஸ் செயல்வீரர் கூட்டத்தினையும், பொதுக் கூட்டங்களையும் நடத்தி வந்ததுடன், காங்கிரஸ் இயக்கத் தொண்டர்களுக்கும் பெரும் ஆதரவினையும், அந்நியோனிய உரையாடல்கள் மூலம் நெருங்கிய தொடர்பினையும் ஏற்படுத்தி கொண்டு உந்துதல் சக்தியாக விளங்கினார்கள். அவர்களின் திட்டமிட்ட அயராத பணிகளே தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரசுக்கு அடித்தளத்தை அமைத்துத் தந்தது. மாவட்டம்தோறும் மாபெரும் மாநாடுகளை நடத்தி தமிழக அரசியல் கட்சிகளிடையே காங்கிரஸ் கட்சியின் முக்கியத்துவத்தை உணர்த்தியவர். மாநாட்டு அரங்கில் பல்வேறு புதியவர்களை உரிய முறையில் அறிமுகப்படுத்தி ஆயிரக்கணக்கான இளைஞர்களை வழிநடத்திச் சென்ற பெருமை அவருக்கே சேரும். அவர் காலத்தில் உருவான இளைஞர்கள் இன்றைக்கு தமிழ்நாடு காங்கிரஸில் முக்கியத்துவம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.

திரு.ப.சிதம்பரத்தை காரைக்குடியில் பாராட்டினார்கள். சேலத்தில் K.V. தங்கபாலு அவர்களையும், நெல்லையில் கண்ணனையும், கன்னியாகுமரியில் VT தாமஸ் அவர்களையும், சென்னையில் ஜெகவீரபாண்டியனையும், தஞ்சையில், தஞ்சை ராமமூர்த்தி அவர்களையும், திருச்சியில் அபேதானந்தம் அவர்களையும், பவானியில், பவானி பதிப்பக கோபால கிருஷ்ணன் போன்றவர்களையும் அங்கீகரித்து காங்கிரஸில் உரிய இடங்களைப் பெற்றுத் தந்து, காங்கிரஸ் வளர்ச்சிக்கு அஸ்திவாரம் இட்ட பெருமை அவரைச் சாரும். அன்னை இந்திரா காந்தியோடு - அவர்கள் கொண்டு இருந்த நேரடி தொடர்பு - அநேக விதங்களில் தமிழகத்தின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தது. தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு போராட்டம் மிகச் சவாலாக இருந்த நேரத்தில் தமிழகத்தின் இந்தி-பிரச்சார சபையின் துணைத் தலைவராக பதவி ஏற்றுக்கொண்டார்கள். மேயர் நிதி, கிராம வளர்ச்சித் திட்டம், சர்வோதய வளர்ச்சித் திட்டங்கள், சமுதாயத்தோடு கூட்டுறவு வங்கிகளை இணைத்தல் ஆகிய திட்டங்கள் வெற்றி பெற பாடுபட்டார், கல்வியை வியாபாரமாக ஆக்காமல் சிறந்த கல்வி வள்ளலாகவும் விளங்கியவர். இப்படி பல்வேறு பரிமாணங்களை கொண்ட திரு. APC வீரபாகு அவர்கள், ஆன்மீகத்திலும் மனித நேயத்திலும் மகத்தான தலைவராக விளங்கினார். அவரை இம்மண்ணும், மனித இனமும் உள்ளவரை மறக்க இயலாது.!



# கல்வி வழங்கும் ஆலமரம்



**மு. அப்பாத்துரை**

முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்

**கி**ராமப்புறத்தில் பிறந்த நான் உயர்நிலைக் கல்விபெற தூத்துக்குடிக்கு வந்தபோது நான் சேர்ந்த பள்ளி சுப்பையா வித்யாலயம் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி (தற்போது பாரதியார் வித்யாலயம்). இப்பள்ளி வ.உ.சி.கல்லூரி நிர்வாகத்தினால் நடத்தப்படுகிறது என்பதை இங்கு வந்த பின்னரே அறிந்து கொண்டேன். அப்பொழுது இப்பள்ளி தூத்துக்குடியில் உள்ள புகழ் வாய்ந்த பள்ளிகளின் வரிசையில் இடம்பெறவில்லை என்றாலும் கற்பிப்பதில் சோடை போகாத பள்ளி. இப்பள்ளியைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் ஒன்று உப்பளத் தொழிலாளர்களும் கரிக்களத் தொழிலாளர்களும் வாழும் பகுதியாக அன்று விளங்கியது. இப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் இப்பள்ளியில் தான் பயின்றார்கள். இங்கு பயின்ற பெரும்பாலான மாணவர்களின் குடும்பப்பின்புலமே, இப்பள்ளி மத்தியதர வர்க்கத்தின் கவனத்திற்கு வராமைக்கு காரணமாக இருந்தது என்பதை பின்னால் உணர்ந்து கொண்டேன்.

மேட்டுக்குடியினருக்காக அன்றி, சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்காக இப்பள்ளியை வ.உ.சி. கல்லூரி நிர்வாகம் நடத்தியது. அதன் முழுப்பெருமையும் திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்களையேச் சாரும் என்பதையும் பின்னாளில் நான் உணர்ந்து கொண்டேன்.

என் கல்லூரிப் படிப்பு வ.உ.சி.கல்லூரியிலேயே தொடங்கியது. அக்கல்லூரி விடுதியில் தங்கியிருந்தபோது என் சகமாணவர்களால் பொதுவுடமைக் கொள்கையின்பால் ஈர்க்கப் பட்டேன். பேராசிரியர்கள் ஆ.சிவசுப்பிரமணியன், நந்தகுமார், என்.வீ.ராவ் ஆகியோரின் வழிகாட்டுதல்கள் எங்களுக்குக் கிடைத்தன.

இக்கல்லூரி வாழ்க்கையில்தான் திரு. ஏ.பி.சி. வீரபாகு அவர்களைக் காணும் வாய்ப்பு அடிக்கடி கிட்டியது. கல்லூரி வேலை நேரத்தில் அவர் கல்லூரிக்குள் வருவதே கிடையாது. ஆசிரியர்களும் மாணவர்களும் தன்னைக்கண்டு வணங்கி மரியாதை செலுத்த வேண்டும் என்பதை அவர் விரும்பவில்லை. நான் படித்த காலத்தில் கல்லூரி நிர்வாகிக்கு கூழைக் கும்பிடு போட்டு வாழும் பேராசிரியர்கள் அதிகம். ஆனால் வ.உ.சி. கல்லூரியில் இத்தகைய சூழலை அவர் உருவாக்கவில்லை. கல்லூரி வேலை நேரம் முடிந்து மாலை ஐந்து மணியளவில்தான் அவர் கல்லூரிக்குள் நுழைவார். அப்போது ஆள்அரவம் இன்றி இருக்கும். விடுதி மாணவர்கள் மட்டுமே அவர் நடந்து வரும்போது பார்ப்பார்கள். கல்லூரி வேலை நேரத்தில் அவர் வந்தார் என்றால் அன்று கல்லூரியில் ஏதோ சொற்பொழிவு நிகழ்த்த வெளியிலிருந்து யாரோ வருகிறார்கள் என்று அர்த்தம்.

தூத்துக்குடியைச் சுற்றிலும் உள்ள, குறிப்பாக தென்மேற்கிலும், தெற்கிலும் உள்ள கிராமங்கள் வறண்ட கரிசல் கிராமங்கள். இப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலோர் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள். எனவே மாதந்தோறும் விடுதிக் கட்டணத்தை செலுத்த முடியாத நிலையில் இருந்தார்கள். உதவித் தொகையை மட்டுமே நம்பி படித்தார்கள். அப்போது பெரும்பாலான கல்லூரிகளில், அரசு உதவிபெறும் மாணவர்கள்



மாதந்தோறும் விடுதிக்கட்டணத்தை செலுத்தியே ஆகவேண்டும் என்ற விதிமுறையைக் கண்டிப்பாக பின்பற்றினார்கள். அரசு உதவித்தொகை வந்தபின் தவணைமுறையில் வழங்கிவிடுவார்கள். ஆனால் வ.உ.சி.கல்லூரியில் இம்முறை கிடையாது. மாறாக பணமே கட்டாமல் விடுதியில் தங்கியிருக்கும் உரிமையை மாணவர்களுக்கு திரு. ஏ.பி.சி. வீரபாகு, அவர்கள் வழங்கியிருந்தார். அரசு உதவித்தொகை வந்தபின்னர் விடுதிக் கட்டணத்தை அதில் சரிசெய்து கொள்வார். இன்றையச் சூழலில் இது பெரிய செய்தியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் மாத ஊதியமின்றி, வேளாண்மை வருவாயை மட்டுமே நம்பிருந்த கிராமப்புற மாணவர்களுக்கு அவர் வழங்கிய சலுகை மிகப்பெரிய வரப்பிரசாதமாக விளங்கியது.

நான் பயின்ற காலத்தில் கிட்டத்தட்ட ஆயிரம் மாணவர்கள் விடுதியில் வாழும் மாணவர்களாக இருந்தனர். அகில இந்திய மாணவர் பெருமன்றத்தின் வ.உ.சி. கல்லூரி கிளையைத் துவக்குவதில் நான் முன்னின்றேன். சந்திப்பது எளிது என்பதால் மன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்களாக விடுதி மாணவர்களையே சேர்த்தோம். அந்நேரத்தில் குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையில் நகர மாணவர்களும் இருந்தார்கள். விடுதிகளில் அடிக்கடி தண்ணீர்ப் பிரச்சனை, கழிப்பறை பிரச்சனை, உணவின் தரம் தொடர்பாக பிரச்சனைகள் உருவாகும். அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் இப்பிரச்சினைகளில் முன்னிருந்து உணவு உண்ணாமை, கல்லூரி செல்லாமை போன்ற வடிவங்களில் போராட்டங்களை அவ்வப்போது நடத்த நேரிட்டது. இந்த சந்தர்ப்பங்களில் அவருடன் நேரடியாகப் பேசும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டின. நாங்கள் சொல்லும் பிரச்சினைகளை காதுகொடுத்து கேட்கும் பண்பு அவருக்கு இருந்தது.

எங்கள் கோரிக்கைகளை சில நேரங்களில் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவார். சில நேரங்களில் உறுதியாக நிறைவேற்ற முடியாது என்று கூறி விடுவார். ஆனால் எங்கள் மீது அவர் காழ்ப்புணர்ச்சி கொண்டதே கிடையாது. வன்முறையில் ஈடுபட்ட மாணவர்களைக்கூட அவர்களது வாழ்க்கை பாதிக்கும் வகையில் கல்லூரியைவிட்டு அவர் வெளியேற்றியது இல்லை. சில சூழ்நிலைகளில் இத்தகைய மாணவர்களை வேறு கல்லூரிகளில் அவரே முன்முயற்சி செய்து சேர்த்து விடுவார்.

1971இல் நான் இறுதியாண்டு பயிலும்போது, அவர் இந்திராகாந்தியின் தலைமையை ஏற்றுக்கொண்டு இயங்கிய இந்திய தேசியக் காங்கிரசின் தமிழ்நாடு பிரிவின் தலைவராக, விளங்கினார். அப்போது தோழர். பாலதண்டாயுதத்தை கல்லூரிக்கு வரவழைத்து சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்தார். தோழர். பாலன் மன்னர் மானிய ஒழிப்பு குறித்தும், திரு.ஏ.பி.சி. வீரபாகு வங்கிகள் நாட்டுடைமையாக்கம் குறித்தும் மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஆழமாக உரையாற்றியமை இன்றும் என் உள்ளத்தில் பசுமையாக நினைவில் இருக்கிறது.

வ.உ.சி. கல்லூரியின் மற்றொரு சிறப்பாக எனக்கு நினைவுக்கு வருவது நான் கல்லூரியை விட்டு வெளிவந்த பின் அவர் உருவாக்கிய புதுமையான விடுதி குறிப்பிடத்தக்கது. இவ்விடுதியில் சேரும் மாணவர்கள் ரூ. 200/- கட்டினால் போதும். இதன் பிறகு அவர்கள் பணம் எதுவும் செலுத்த வேண்டாம். அவர்களது உதவித்தொகையைக் கொண்டே அவர்களது கல்விக்கட்டணம், பல்கலைக்கழகத் தேர்வுக்கட்டணம்,





விடுதிக்கட்டணம் அனைத்தையும் சரி செய்து விடுவார்கள். ஆனால் உணவின் தரமும், அளவும் வரையறுக்கப்பட்ட அளவிற்குள் இருக்கும். எனக்குத் தெரிய பல நலிந்த பிரிவினர் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு பட்டதாரிகளாக வந்துள்ளனர். வ.உ.சி. கல்லூரியின் கடந்த கால வரலாறு குறித்து நான் கேட்டறிந்த செய்திகளில் ஒன்று. வ.உ.சி. நினைவாக மணிமண்டபம் ஒன்றை அமைக்கும் திட்டத்தையே திரு. ஏ.பி.சி. வீரபாகு மாற்றியமைத்து கல்லூரியைத் தோற்றுவித்தார் என்பதாகும். இக்கல்லூரி தோன்றுவதற்கு முன்னர் பொருள்வளம் கொண்டவர்கள் மட்டுமே 50கி.மீ தொலைவிலுள்ள பாளையங்கோட்டையில் தம் பிள்ளைகளைப் படிக்கவைத்தனர். அதிகப் பொருள்வளம் படைத்தவர்கள் திருச்சியிலும், சென்னையிலும் பிள்ளைகளைப் படிக்க வைத்தனர். இயலாதவர்கள் உயர்நிலைப்பள்ளியைத் தாண்டி படிக்க முடியாத நிலை இருந்துள்ளது. இந்நிலை மாற வ.உ.சி.யின் பெயரால் ஒரு கலைக் கல்லூரியை தோற்றுவித்தார். இதன் தொடர்ச்சியாக வ.உ.சி. கல்வியியல் கல்லூரியும் உருவானது. மகளிர் கல்விக்காக ஏ.பி.சி மகாலட்சுமி கல்லூரியைத் தோற்றுவித்தார். அவர் நிறுவிய வ.உ.சி. கல்விக் கழகம், திருவைகுண்டம் வட்டத்தில் உள்ள புதுப்பட்டியில், அவரது பெயரால் மேல்நிலைப்பள்ளி ஒன்றை நடத்தி கிராமப்புற மாணவர்களுக்கு கல்வி வழங்கும் பணியைச் செய்து வருகிறது. தூத்துக்குடி நகரில் அவரது பெயரால் சுயநிதி அடிப்படையிலான ஆங்கில வழி மேல்நிலைப்பள்ளி ஒன்றையும் நடத்தி வருகிறது.

இவ்வாறு அவர் வித்திட்ட வ.உ.சி.கல்லூரி என்ற நிறுவனம், கல்வி வழங்கும் ஆலமரமாக தழைத்து வளர்ந்து பல விழுதுகளை விட்டு கல்வி வழங்கி வருகிறது. அத்துடன் ஆசிரியர் நியமனத்திற்கும், மாணவர் சேர்க்கைக்கும் நன்கொடை என்ற பெயரிலான லஞ்சம் வாங்காத நிறுவனமாக விளங்கி வருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக சமயச் சார்பின்மையையும், சாதிச் சார்பின்மையையும் பேணி வருகிறது.


## தொடரும் தொண்டுகள்

- ஏ.பி.சி.வீ. சொக்கலிங்கம் அவர்கள் செயலர் பொறுப்பேற்ற பின் ஆண்டுக்கொரு முதுநிலை வகுப்பு பொருளாதாரம், வணிகம், கணிதம், வரலாறு, விலங்கியல், தாவரவியல் ஆகியத் துறைகளை ஏற்படுத்தினார். நிலத்தியல், வேதியியல், பொருளியல் நிலத்தியல் ஆகிய துறைகளில் ஆய்வுகள் மற்றும் முனைவர் பட்டம் பெறுவதற்கேற்ற வகையில் அங்கீகாரம் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளார். நவீன வசதிகளுடன் கூடிய நூலகம். ஸ்பிக் ஆய்வு மையம், கணிப்பொறி மையம், உடற்பயிற்சியகம் என்று விரிவாக்க கட்டிடங்களும் உள் கட்டமைப்புகளும் அமைத்து மாணவர்களுக்கு சிறந்த கல்வி கிடைக்க ஏற்பாடு செய்து வருகிறார். பொன் விழா ஆண்டான 2001ல் பொன் விழா கட்டிடம் கட்டி அதனை எல்லோர் நினைவிலும் நிற்கச் செய்தார். பல பேராசிரியர்களையும், அலுவலக ஊழியர்களையும் அரசின் ஒப்புதல் பெற்று நியமனம் செய்துள்ளார்.
- வ.உ.சி கல்வியியல் கல்லூரி, பாரதியார் வித்யாலத்தின் செயலாளராக ஏ.பி.சி.வி. சண்முகம் அவர்கள் இருந்து பணியாற்றி வருகிறார்கள்.
- கல்வியை வியாபாரமாக்கக் கூடாது என்ற ஏ.பி.சி. வீரபாகுவின் இலட்சியத்தை கடைபிடித்து வரும் அன்னாரின் புதல்வர்களையும், வ.உ.சி கல்விக்கழக குழுவினரையும் பாராட்டுவோம். அவர்களின் பணிகளுக்கு உறுதுணையாக இருப்போம்.



# காந்திஜி கண்ட கல்வி முறை

**A. வேதரத்னம்** B.Sc.,
**மேனஜிங் டிரஸ்டி, கஸ்தூரிபா காந்தி, வேதாரண்யம்.**



இந்திய விடுதலைப் போராட்டத்தின் பொழுது புதிய தேசியக் கல்வி இயக்கமும், ஆதாரக் கல்வித் திட்டமும் உருவாயின. அதற்குக்காரணம், ''ஆங்கிலேயர் தரும் கல்வி அடிமைக் கல்வி. அது புதிய இந்தியாவை உருவாக்காது'' என்ற விழிப்புணர்வின் விளைவே ஆகும். இன்றைய உலகில் வன்முறையும், வெறுப்பும், அநீதியும், ஏற்றத்தாழ்வும், சுரண்டலும், பாகுபாடும் வறுமையும் மிகுந்துள்ளன. சுற்றுச்சூழல்கேடு, ஆயுதப்போட்டி, சுயநலம், ஆதிக்கவெறி, மானிட உரிமைமீறல், இலாபநோக்கம், போட்டி முதலியன கோலோச்சுகின்றன. புதிய உலகைப் படைக்க, புதிய மானிடரைப் படைக்க புதிய கல்வி தேவை. இன்றைய கல்வி, சிலர் வாழ வழிவகுக்கும் கல்வியாகும். இன்றைய குறைகள் மலிந்த சமுதாயத்தை நிரந்தரப் படுத்தும் கல்வியாகும். இன்று நமது நாட்டில் இத்தகு கல்வி முறையே அமுலில் உள்ளது. உலகின் பல பகுதிகளிலும் இந்நிலைதான்.

டாக்டர். இவான் இலிச் நாம் கற்ற குப்பைக் கல்வியை நம்மிடமிருந்து தூக்கி வீசிவிட வேண்டும் என்கிறார். ""Deschooling" என இது அழைக்கப்படுகிறது. டாவோ ''வெறுமையாதல்'' (Be Empty) எனக் கூறுகிறார். வெறுமையானாலேயே கற்க இயலும். "Deconstruction" என்றும் இதனைப் பார்க்கலாம். ''உண்மைக் கல்வி விழிப்பைத் தரும்'' எனப் பெளலோ பீரேரே என்ற இலத்தீன் அமெரிக்க கல்வியாளர் விளக்குகிறார். அடிமட்ட மக்கள் விழித்து ஆற்றல்பெற உண்மைக் கல்வி தேவை. முழுவளர்ச்சியடையவும், தற்சார்பாக நேர்மையாக வாழவும், உலகம் முழுவதும் ஈடேற்றம் அடையவும் உகந்த கல்வி, காலத்தின் தேவையாகும்.

மகாத்மா காந்தி, இப்புவனம் பெற்றெடுத்த தலைசிறந்த புரட்சியாளர்களுள் ஒருவர். மனிதனின் ஆளுமை வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் எவையெல்லாம் தடையாக இருந்தனவோ அவற்றையெல்லாம் எதிர்த்து அவர் புரட்சி செய்தார். மாற்றத்திற்குத் தடையாக இருக்கும் தற்போதைய சமூகக் கோட்பாடுகளின் விலங்குகளிலிருந்து, தம்மையும் மற்ற மானிட வர்க்கத்தினரையும் விடுவிக்கப் பாடுபட்டார்.

அப்போதைய கல்வித்திட்டம் வெறும் நூலறிவை நோக்கமாகக் கொண்டது. இயல்பான வளர்ச்சிக்கு எதிராகவும், இடத்துக்கும் காலத்துக்கும் வளைந்து கொடுக்காத தன்மையாகவும், உயிரற்றதாகவும் ஒரே மாதிரியாகவும் இருந்தது. பலதரப்பட்ட மாணவர்களுக்கும், ஒரு மாணவனின் பல்வேறு திறமைகள் செயல்படுவதற்கும், அக்கல்வித்திட்டம் உதவியாக இல்லை. பயனுடைய குடிமக்களாக உருவாக்குவதற்கு அடிப்படையான ஒழுக்கம், கூட்டுறவுணர்ச்சி, தலைமைப்பண்பு ஆகியவற்றையும் அக்கல்வித்திட்டம் வளர்க்கவில்லை. தேர்வுக்கொத்த அதிக முக்கியத்துவம், அளவுக்கு மீறிய பாடங்கள், கல்வி கற்பித்த முறை,



குறைந்த உபகரணங்கள் ஆகிய எல்லாமாகச் சேர்ந்து மகிழ்ச்சியான அனுபவத்தை நல்க வேண்டிய கல்வியை, பெரும் சுமையாக்கிவிட்டன. பழைய கல்வித்திட்டம் குழந்தைகளின் சூழ்நிலைக்கு கொஞ்சம் கூடத் தொடர்பில்லாதது என்பதைத் தம் வாழ்நாளின் தொடக்க நாட்களிலேயே காந்தியடிகள் உணரலானார். நாட்டின் எண்ணிக்கையில் மிக மிகக் குறைவான ஒரு சில சிறுவர் சிறுமியர் மட்டுமே பெற்று வந்த அக்கல்வியினால் சூழ்நிலையும் சிறிதுகூட மாறவில்லை. எனவேதான் அவர் அப்போதைய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் புரட்சி செய்தார். நடைமுறையிலிருந்த கல்வித்திட்டத்தை எதிர்த்துப் புரட்சி செய்ததோடு அவர் அமைதியாகவில்லை: தாம் நினைத்த கல்வித்திட்டத்திற்கு இயைந்தமுறையில், பழைய திட்டத்தில், தேவையான மாறுதல்களைச் செய்வதற்குப் பல வகையிலும் அவர் முயற்சி செய்து வந்தார். அவர் கருத்துப்படி குழந்தை அல்லது மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய எல்லாவற்றின் நற்பண்புகளையும் வெளிக்கொணர்வதே கல்வியாகும்.

வேறு எப்பணியையும் விட ஆசிரியராக இருப்பதையே தாம் மிகவும் விரும்புவதாகப் பிற்காலத்தில் அண்ணல் அடிக்கடி கூறிவந்தார். அவரிடம் மிகமிகச் சிறுவர் முதல் தள்ளாத வயோதிகர் வரை எல்லோரும் கல்வி கற்றனர். அவர் கல்வி கற்பிக்க வயது ஒரு நாளும் தடையாக இருந்ததில்லை. அவர் கல்வி புகட்டிய முறை பல்வேறு பயன்களை நல்கிய ஒரு சிறந்த கலை: அவர் பாடம் கற்பித்தார்; ஒழுக்கம் புகட்டினார்; பிரசாரம் செய்தார்; கட்டுப்பாட்டில் நிலையாக இருக்கச் செய்தார். இவை யாவற்றையும் ஒரே சமயத்தில் ஒரே முறையிலேயே செய்தார்.

தென்னாப்பிரிக்கா சத்யாகிரகம் நடைபெற்று வந்தபோது, சிறைசென்ற சத்யாகிரகிகளின் குடும்பத்தினரை பராமரிக்க காந்தியடிகள் இல்லம் ஒன்று தொடங்கினார். ''டால்ஸ்டாய் பண்ணை'' தொடங்கி அங்குப் பல குடும்பத்தினருக்கு இடமளித்தார். குடும்பங்களின் எண்ணிக்கை மிகுதியாக, சிறுவர், சிறுமியரின் எண்ணிக்கையும் அதிகரித்ததால், அனைவருக்கும் கல்வியளிப்பதில் பிரச்சனை எழுந்தது. ஏறத்தாழ 1912 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது இது. நடைமுறையில் இருந்த கல்வி அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, அனுபவங்கள், சோதனைகள் வாயிலாக உண்மையான கல்வித்திட்டத்தை காண அவர் முடிவுசெய்தார். தகுதி வாய்ந்த இந்திய ஆசிரியர்கள் கிடைக்காததால், சிறுவர், சிறுமியருக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பைத் தாமே மேற்கொண்டார்.

அவருடைய கல்வித்திட்டத்தில், மனதிற்குப் பயிற்சியளித்து ஒழுக்கத்தை வளர்ப்பதற்கே முதலிடம் அளித்தார். ஒழுக்கத்தை வளர்ப்பதே குழந்தைக் கல்வியின் சரியான அடிப்படை என்று அவர் கருதினார். இதற்கு மட்டும் நாம் சரியான ஏற்பாடு செய்துவிட்டால், குழந்தைகள் தாமாகவோ, நண்பர்களின் துணைகொண்டோ மற்ற யாவற்றையும் கற்றுக்கொள்வார்கள் என்பது அவர் துணிபு.

ஆன்மப் பயிற்சியைப் பொறுத்தவரை ஒழுக்கத்தை வளர்ப்பதே ஆன்மாவை வளர்க்கும் வழி. அதுவே கடவுளைப் பற்றியும், தன்னைப் பற்றியும் முழுமையாக அறிய வழிவகுக்கும் என்பது காந்தியடிகளின் கருத்து. இளைஞர்களுக்கு அளிக்கும் பயிற்சியில் இது முக்கியமான பகுதி என்று கருதினார். குழந்தைகள் தெய்வீகப் பாடல்களை மனப்பாடம் செய்யவும் ஒப்பிக்கவும் தூண்டினார். நீதிநெறிகளை விளக்கும் நூல்களை அவர்களுக்குப் படித்துக்



காட்டினார். ஆனால் இவையாவும் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. மாணவர்களுடன் நெருங்கிப் பழகப்பழக, புத்தகங்களின் மூலம் ஆன்ம பயிற்சியை அளிக்க முடியாது என்பதைக் கண்டார். எவ்விதம் உடலுக்கும், அறிவுக்கும், பயிற்சி அளிப்பதன் மூலம் உடலையும் அறிவையும் வளர்க்கிறோமோ, அவ்விதமே ஆன்மாவுக்கும் பயிற்சியளிக்க வேண்டும் என்று கண்டார். காந்தியடிகள் கருத்துப்படி ஆன்மாவுக்குப் பயிற்சியளிப்பது என்பது ஆசிரியர்களின் வாழ்க்கையையும், ஒழுக்கத்தையும் பொறுத்ததாகும். காந்தியடிகள் தம்முடன் வாழ்ந்த சிறுவர் சிறுமியர்கட்குத் தாம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் என்பதற்காகத் தாம் எவ்விதம் ஒழுங்கையும், புலனடக்கத்தையும் மேற்கொண்டொழுகினார் என்பது பற்றியும் தனது சத்தியசோதனையில் விவரித்துக் கூறுகிறார்.

இந்தியாவிலும் அவருடைய சோதனைகளைத் தொடர்ந்து செய்து வந்ததன் காரணமாக கல்வி பற்றிய காந்தியடிகள் கருத்து மேலும் விளக்கம் பெற்றது. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் புகுத்தி பரப்பிய வெறும் ஏட்டுக் கல்வி அவருக்கு வெறுப்பளித்தது. அது தன் முயற்சியையோ, பொருள் உற்பத்தி செய்வதில் திறமையையோ வளர்ப்பதற்கு என்று அல்லாமல் அரசாங்கத்துக்கு குற்றேவல் செய்யும் பணியாளர்களை உற்பத்தி செய்வதற்கென்றே திட்டமிட்டு அமுல் செய்யப்பட்டதாகும். அக்கல்வி, கற்றவர்களை பொது மக்களிடமிருந்து பிரித்து வைத்தது மட்டுமில்லாமல், பொதுமக்களுக்கு யாதொரு பயனையும் அளிப்பதில்லை என்பதையும் காந்தியடிகள் கண்டார். ஆங்கிலேயர் நம்முடைய பண்டைக்கிராம சமுதாய அமைப்பை அழித்து, வெளிநாட்டுப் பொருட்களைக் கிராமங்களில் திணித்ததனால் கிராம மக்கள் சிதறுண்டு, வேலையிழந்து, ஏழ்மையிலும் வறுமையிலும் அழிந்து கொண்டிருந்தனர். படித்தவர்கள், தாம் பெற்ற கல்வியை ஏழை மக்களின் வாழ்வைப் பலியிட்டும்கூடத் தம்முடைய சுயநலனுக்கான கருவியாகவே கருதி வந்தனர். இத்தகைய சூழ்நிலையில் கிராமப் பொருளாதார வாழ்வைப் புதுப்பித்து, கல்வியையும் அதனோடு இணைப்பதே நாட்டுக்குச் சேவை செய்ய ஏற்றவழி என்று காந்தியடிகள் கருதினார். எனவே, கிராமத் தொழில்களை அடிப்படையாகக் கொண்டு, கல்வி நடைபெற வேண்டும் என்றாயிற்று. பொருள் உற்பத்தி செய்வதில் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பொருளாதார உற்பத்திக்கு கல்வி ஒரு கருவி என்ற அளவில் மட்டும் குழந்தைகளின் கல்வி இருப்பதைக் காந்தியடிகள் விரும்பவில்லை. தொழிலை அடிப்படையாகக் கொண்டே கல்வியில், குழந்தைக்குக் கைத்திறன் பயிற்சி கிடைக்கிறது. அதே நேரத்தில் அறிவு, மனவளர்ச்சிக்கான பயிற்சியையும் கல்வி அளிக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். இதுவரை அந்நிய மொழியில் கற்றுவந்த, வாழ்க்கைக்குச் சற்றும் தொடர்பில்லாத கல்விக்குப் பதிலாக, குழந்தையின் தாய்மொழியில் அதன் சமூக, கலாச்சார சூழ்நிலைக்கும் பொருத்தமாகக் குறிக்கோளுடைய கல்வியை அளிக்கும் வகையில் சோதனை அமைந்தது.

சுதந்திரத்துக்கு முன்னோடியாக மாநிலங்களில் காங்கிரசு மந்திரி சபைகள் அமைந்தபோது காந்தியடிகள் தம் வாழ்நாளில் சுமார் முப்பது ஆண்டுகட்கு மேலாகத் தாமே சோதனை நடத்தியும், தம் சொந்த அனுபவத்தின் வாயிலாகவும் கண்டுபிடித்த தம்முடைய கல்விக் கொள்கைகளை நாட்டு மக்களின் முன் வைத்தார். இவ்விதமாகத்தான் 1937 ஆம் ஆண்டு ‘தொழில் மூலம் கல்வி’ என்ற மிகப் புரட்சிகரமான ஆதாரக்கல்வி (Basic Education) தோன்றியது.



சத்தியத்தையும், அகிம்சையையும் அடிப்படையாக் கொண்ட சமூகப் புரட்சியை உண்டாக்குவதற்கு ஆதாரக்கல்வி மிகவும் இன்றியமையாதது என்பது காந்தியடிகளின் நம்பிக்கை. ஆதாரக்கல்வி என்பது வாழ்க்கையின் மூலமே வாழ்ந்து கற்கும் ஒரு வாழ்க்கை முறையாகும். இது பிறப்பு முதல் சாவு வரை நீடிக்கும் ஓர் அரிய கலை. தானாகவும் மற்றவர்களுடன் கூடியும் செயலாற்றி, பலம் பொருந்திய சிறிய சமுதாயங்களின் சிறந்த குடிமக்களாவதற்கு, குழந்தைப் பருவத்திலிருந்து பயிற்சி அளிப்பது இக்கல்விமுறை. இதன் மூலம் அவர்களின் சொந்தத் தேவைகளும் பொதுத்தேவைகளும் பூர்த்தியாகி, அழகிய சக்தி வாய்ந்த ஆன்மீக வாழ்வுக்கு அடிப்படை ஏற்படும். இக்கல்வி வேலையின்மைக்கு மாறாக அவர்களுக்கு பாதுகாப்பளிப்பதாக இருக்கும்.

ஆதாரக்கல்வியில் ஆசிரியர் ஆற்றவேண்டிய பங்கு மிக முக்கியமானதாகும். எனவே, அதற்கேற்ப அவர் தம்மைத் தகுதியுடையவராக்கிக் கொள்ள வேண்டும். ஒரு நல்லாசிரியர் எப்படி இருக்க வேண்டுமென்பதற்குக் காந்தியடிகள் தம் சொந்த வாழக்கையில் தாமே சான்றாக விளங்கினார். தம்முடைய வாழ்வில் தாமே அனுசரிக்காத எதனையும் அவர் மற்றவர்கட்குப் புகட்டியதில்லை.

பெண்கல்வி, உயர்கல்வி மற்றும் முதியோர் கல்வி பற்றியும் கூறியுள்ளார். ஆண்களுக்கும், பெண்களுக்கும் பெரும்பாலும் ஒரே மாதிரியான கல்வியே இருக்க வேண்டும் எனக் காந்தியடிகள் விரும்பியதால் அவர் ஆண்கல்விக்கும் பெண்கல்விக்கும் வேறுபாடு காணவில்லை. உயர்கல்வி பற்றிய காந்தியடிகளின் கருத்து திட்டவட்டமானது. வாய்ப்புக் கிட்டியபோதெல்லாம் அவர் அவற்றை வலியுறுத்திக் கூறி செயல்படுத்திவந்தார்.

மனித வர்க்கத்திற்கு கல்வி புகட்ட எவ்விதமான சாதனத்தையும் பயன்படுத்தத் தவற வில்லை. தலைசிறந்த பத்திரிகை ஆசிரியராக அவர் விளங்கினார். மனித சமுதாயத்தின் கலாச்சார, ஆன்மீகத் தரத்தை மேன்மேலும் உயர்த்துவதாக வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பற்றியும் அவர் ஒவ்வொரு வாரமும் எழுதி வந்தார்.

காந்தியடிகள் அளித்த புதுக்கல்வியின் நோக்கமானது ஒவ்வொரு மனிதனிடமும் அமைந்துள்ள உடற்பண்புகள், உள்ளப்பண்புகள், ஆன்மீகப்பண்புகள் என்ற மூவகைப் பண்புகளையும் ஒருமித்து சீராக வளரச் செய்வதன்மூலம் புதிய மனிதனை உருவாக்குதல், என்பதாகும். இத்தகைய புதிய மனிதர்களின் மூலம் கூட்டுறவு முறையில் பரஸ்பரம் ஒத்துழைப்பு என்ற அடிப்படையில் சத்தியத்தையும் அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்ட ஏற்றத்தாழ்வில்லாத புதிய சமுதாயம் உருக்கொண்டு எழச்செய்தல் என்பதாகும்.

ஏதாவது ஓர் ஆக்கத் தொழிலை மையமாகக் கொண்டு கற்றுத்தருதல், நடைமுறை வாழ்க்கையோடு இசைவுபடுத்திப் பாடங்களைக் கற்றுக்கொடுத்தல், தாய்மொழி மூலம் கல்வி என்பதே அவர் கையாண்ட முறைகளாகும்.

அவரது ஆதாரக்கல்வியானது தன்னம்பிக்கையை வளர்த்து, தன்னிறைவு பெற வாய்ப்பளிக்கிறது; உள்ளார்ந்த திறமைகளை வளர்க்கிறது. கூட்டுறவுச் சமுதாயப் பண்புகளைத் தோற்றுவிக்கிறது; நாட்டில், உலகில் அமைதி நிலவ அகிம்சையில் பயிற்சி அளிக்கிறது; மக்களாட்சிக்கான பயிற்சி அளிக்கிறது. ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையை உருவாக்குகிறது: வாழ்க்கைக்கு, வாழ்க்கை மூலம், வாழ்க்கை முழுவதும் கல்வியளிப்பது காந்தி வழிக் கல்வியே.



அவர் வேறு யாரையும் விட மிக அதிக அளவு நாட்டில் சுற்றுப்பயணம் செய்து மக்களுடன் நேரடியாகப் பேசினார். தம் கருத்துகள் செயல்படுவதற்காகப் பல நிறுவனங்களை உருவாக்கினார். மனமாற்றத்தில் அவருக்கு நம்பிக்கை இருந்தது. 'மனமாற்றத்திற்கான இணக்குதல், கல்வி ஆகியவற்றின் மூலம் சமுதாயத்தில் முழு மாறுதல் ஏற்படுத்த முடியும். உண்மை, அகிம்சை ஆகியவற்றின் அடிப்படையில் சமுதாயம் முழுவதையுமே புதிதாக நிர்மாணிக்க முடியும், அன்பின் மூலம், மூளைக்கும் இதயத்துக்கும் சரியான கல்வியளிப்பதன் மூலமும் பலாத்காரத்தை வெல்ல முடியும்' என்பதைத் தம் வாழ்நாளிலேயே காந்தியடிகள் நிரூபித்துக்காட்டினார். ஆனால் இன்னும் நடைபெற வேண்டியது எவ்வளவோ உள்ளது. காந்தியடிகள் கண்டுபிடித்த கல்விமுறையைச் சரியாக உணர்ந்து பரவலாக அமுல்படுத்தினால் துன்பத்தால் தவிக்கும் இன்றைய உலகில் பல்வேறு தீமைகள் தொலைய வழி ஏற்படும். சோதனைகள் வாயிலாகவும், தம் சொந்த வாழ்க்கை அனுபவங்களின் மூலமும் கண்டுபிடித்து நீண்டநாள் நிலைத்து நிற்கக்கூடிய தம்முடைய கொடை என காந்தியடிகள் உலகிற்கு வழங்கிய புரட்சிகரமான இந்தக் கருத்துகளைப் பற்றி ஆசிரியர்களும் கல்வி நிபுணர்களும் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும்.

## உண்மையான உழைப்பாளரை மறவாதவர்

விருட்சமாக வளர்ந்து இன்று வெள்ளி விழாவை காணுகிறது வ.உ.சி. கலைக்கல்லூரி. இதன் வளர்ச்சிக்காக ஆதரவளித்தும் வழிகாட்டியும் வந்த பல்கலைக்கழக துணைவேந்தர்கள், திட்டக்குழுவின் தலைவர்கள், அறிஞர்கள், கல்வித்துறையின் வல்லுநர்கள், டாக்டர். லட்சுமணசாமி முதலியார், டாக்டர். மு. வரதராசனார், பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், அறிஞர் வ.சுப. மாணிக்கம், நெ.து. சுந்தரவடிவேல் போன்றவர்களை - நினைவு கூர்ந்து பாராட்டி மகிழ்வதில் பெருமையடைகிறேன். இத்தகைய சான்றோர்களால் அறிவென்னும் ஞான தீபம் நாளும் சுடர்விட்டுப் பிரகாசிக்க, வ.உ.சி. கல்லூரி என்னும் கலைக்கோயிலை உருவாக்க, எடுப்பான எழிலார்ந்த இக்கட்டிடத்தை வடிவமைக்க, எத்தனையோ உழைக்கும் கரங்கள் இணைந்து செயலாற்றின.

ஆரம்ப காலத்திலிருந்தே இக்கட்டிடப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒரு உண்மை உழைப்பாளியின் திரு உருவப்படத்தை திறந்து வைப்பதில் பெருமிதம் அடைகின்றேன். அயராத உழைப்பு. அல்லும் பகலும் எடுத்துக் கொண்ட காரியத்தில் சிரத்தையான கண்காணிப்பு, இம்மியளவேனும் - கட்டுமானப்பொருட்களை சேதமுறாது பயன்படுத்திய செயல்திறம், கட்டிடத்திற்கு பூரண வடிவப் பொலிவு அமைந்தவுடன் அதைப் பார்த்து ஆனந்தப்பரவசம் அடையும் மனோபாவம் இத்தகு குணநலன்களுடன், செயல்திறத்துடன் திகழ்ந்த தலைமை மேஸ்திரி சுப்பு ரெட்டியார் திருவுருவப் படத்தை திறந்து வைப்பதுடன் அதை என்றும் அலுவலகத்தில் அணிபெறச் செய்வதில் பெருமிதம் அடைகின்றேன். அவர் உண்மை உழைப்புக்கு வழங்கிய பணம் ஊதியமாகும். அவர் படத்தைத் திறந்து வருங்காலத் தலைமுறை என்றும் நினைவு கூறுமாறு செய்வதை உண்மையான நன்றிக் காணிக்கையாக கருதுகின்றேன்.

**தலைமை மேஸ்திரி - சுப்பு ரெட்டியார் படத்தைத் திறந்து**

**திரு. ஏ.பி.சி. வீரபாகு ஆற்றிய சொற்பொழிவு. தகவல் - தெ.மு.**



# கல்விப்பணியின் கலங்கரை விளக்கம்

**சு. பரமசிவன்**
தமிழக பள்ளிக் கல்வி இயக்குநர் (ஓய்வு), சென்னை.



**க**ல்வித் தந்தை குலபதி ஏ.பி.சி. வீரபாகு நூற்றாண்டு விழாக்குழுவினர் சிறப்பு மலர் ஒன்றினை இத்தருணத்தில் வெளிக்கொண்டு வருவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையில் 30 ஆண்டுகளுக்குமேல் பணியாற்றியத் தொண்டன் என்ற முறையில் அன்னாரின் பல்வேறு சமுதாயத் தொண்டுகளை நினைத்து நான் மிகவும் பெருமிதப்படுகிறேன். அன்னார் ஆற்றிய கல்விப்பணிகளுக்கு என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வித் தந்தை குலபதி ஏ.பி.சி. வீபாகு அவர்கள் தூத்துக்குடி மாநகரில் ஏழை எளிய மாணவர்களுக்காக, சிறந்த முறையில் பள்ளிக் கல்வி, கல்லூரி கல்வி மற்றும் பல்வேறு சமுதாயப் பணிகள் செய்ய வேண்டும் என்று நினைத்து, செக்கிழுத்த செம்மல் சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களின் பெயர் நிலைத்து நிற்க வேண்டும் என்ற எண்ணத்தில் அன்னாரின் பெயரிலேயே வ.உ.சி கல்விக் கழகத்தினைக் நிறுவி, அதன் மூலம் இலவசமாக தரமான கல்வியை வழங்க வேண்டும் என்ற சீரிய எண்ணத்தோடு, பல கல்விக் கூடங்களை நிறுவினார்கள். அவைகளில் வைரக்கல்லாக இருப்பது தூத்துக்குடி ''வ.உ.சி கல்லூரி''. இக்கல்விக் கூடத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தின் கிழக்கு பகுதியில் உள்ள மக்களுக்கு கல்லூரிக் கல்வியை கல்வித் தந்தை குலபதி ஏ.பி.சி. வீரபாகு அனைவருக்கும் வழங்கினார்கள்.

வ.உ.சி கல்விக் கழகத்தின் சார்பில் வ.உ.சி ஆசிரியர் பயிற்சி கல்லூரி, மகளிருக்காக ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி மற்றும் பாரதியார் மேல்நிலைப்பள்ளி போன்ற கல்விக் கூடங்களை நிர்வாகம் சிறந்த முறையில் நடத்தி வருகிறது.



வ.உ.சி கல்விக்கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து கல்விக்கூடங்களிலும் ஆசிரியர் நியமனங்கள் ஏழை எளியவர்களுக்காக வழங்கப்படுவதாகும். ஆசிரியர் பணியிடங்களுக்கு நியமிக்கப்படுபவர்களிடமிருந்து நிர்வாகம் எவ்விதமான நிதி உதவியும், கல்விக்கூடங்களின் வளர்ச்சிக்காகப் பெறுவது கிடையாது. அதேபோல் நிர்வாகம் மாணவர்களிடமிருந்து படிப்பிற்காக சேரும்பொழுது எந்த விதமான நிதியையும் வசூலிப்பது கிடையாது.

கல்வித் தந்தை ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் கல்விப்பணியை மட்டும் செய்யாமல் மற்ற துறைகளிலும் செம்மையாக பல்வேறு பணிகளைச் செய்து சமுதாயத்தில் சிறந்த குடிமகன்



என்ற பெயர் பெற்றவர். அன்னார் அரசியல், ஆன்மிகம், கூட்டுறவுத்துறை, வங்கிப்பணி, வணிகம், சர்வோதயம், நூலகத்துறை மற்றும் பூமிதான இயக்கம் போன்ற துறைகளிலும் சிறந்த பணிகளைச் செய்து பொதுமக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்தவர் ஆவார்.

அன்னாரின் பன்முகத்திறமையில் வெளிப்பட்ட திறன்கள் இம்மலரைப் படிப்பவர்களுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை. காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக அன்னார், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் தொகுதியின் தமிழ்நாடு சட்டப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினராக 10 ஆண்டுகள் (1957-1967) மிகச் சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.



மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றிய காலங்களில் தொகுதியில் உள்ள அனைத்து பிரச்சனைகளுக்கும் நல்ல முறையில் தீர்வுகண்டு சிறப்பாக பணி செய்து மக்களின் நற்பெயரைப் பெற்றவராக திகழ்ந்தார்கள். அன்னார் கல்விக்காக செய்த தொண்டுகளை தூத்துக்குடி வாழ் மக்கள் நிச்சயமாக என்றென்றும் நினைவில் வைத்துக் கொள்வார்கள்.

அன்னார் தற்பொழுது நம்மிடையே இல்லை என்றாலும், அன்னாரின் எண்ணங்களும் நோக்கங்களும் நமக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகவும் நம்மையெல்லாம் நல்வழி நடத்திச் செல்லும் சக்தியாகவும் இருந்து வெற்றியை நமக்குத் தேடித்தரும் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை.

கல்வித் தந்தை குலபதி ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் விட்டுச் சென்ற கல்விப் பணிகளை அன்னாரின் புதல்வர்கள் திருமிகு. ஏ.பி.சி.வீ. சொக்கலிங்கம் அவர்களும் திருமிகு. ஏ.பி.சி.வீ.சண்முகம் அவர்களும் மிகவும் சிறப்பாக செய்து கொண்டிருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருவதாக அமைகிறது. அன்னார் இருவருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வித் தந்தை குலபதியின் நினைவாக ஏ.பி.சி வீரபாகு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஒன்றும் தொடங்கப்பட்டு மிகவும் சிறந்த முறையில் ஏழை எளிய மாணவர்கள் மற்றும் நடுத்தர வகுப்பினரின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இயங்கி வருவது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வித்தந்தை குலபதியின் சீரிய கல்விப் பணியை இனி வரும் காலங்களில் நல்லமுறையில் அன்னாரின் சந்ததியர்கள் தொடர்ந்து நடத்துவார்கள் என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை.





## நான் கண்ட திரு ஏ.பி.சி. வீரபாகு

**- பி.கே. பாலசுப்ரமணியன்**

**முன்னாள் பொருளாளர் தட்ஷிணபாரத் இந்தி பிரச்சார சபை**

**வீ**ரபாகு என்ற பெயரைக் கேட்டதும் நமக்கு சூரபத்மனை வதம் செய்த முருகனுடைய தூதுவன் வீரபாகுதான் நம் கண் முன் நிற்பார்.

இந்தி பிரச்சாரச் சபையைப் பொறுத்தமட்டிலும் திரு ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் நம் மனதில் தோன்றுவார். 1956ல் இருந்து இந்தித்துறையில் நான் தொண்டு புரிந்து வருகிறேன். அப்போதிருந்தே அநேக தொண்டர்களுடன் பழகி வருகிறேன். படிப்படியாக உயர்ந்து தக்ஷிண பாரத் இந்தி பிரசாரச் சபையில் பொருளாளராகவும் சேவை செய்ய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் ஏ.பி.சி. அவர்களோடு நெருங்கிய பழக்கம் எழுபதுகளில்தான் கிடைத்தது.

அதற்கு முன்பும் அவர்களுடைய மாண்பினைப் பற்றிப் பல விவரங்களைக் கேட்டிருக்கிறேன். எடுத்துக்காட்டாக இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடந்த 1963-இல் தூத்துக்குடியில் சிறப்பாக ஒரு கொட்டகை போட்டு சபாவின் தேர்வுகளை நடத்தினார். ஊரே பற்றி எரியும்போது துணிச்சலாக அவர் செய்த சேவை அபூர்வமானது.

1970ல் தன்னலம் கொண்டவர்கள் சபையின் ஆட்சிப் பொறுப்பை வகித்தபோது அதனை எதிர்த்து ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது அவரே சென்னை வந்து சிக்கலைக் தீர்க்க ஆயத்தமானார். அவரிடம் சிலர், 'நான் செய்த போராட்டம் சரியா, தவறா', என்று அவருடைய கருத்தைக் கேட்டபோது அவர், 'சில சமயங்களில் தவறான முறையில் போராட்டம் நடத்துவது மிக அவசியமாகிறது; குறிக்கோள் நல்லதாக இருக்கும்போது முறை தவறி நடந்தாலும் அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம்', என்றார். ஆனால் அவரை வரவிடாது சிலர் தடுத்து விட்டனர். அவர் வந்திருந்தால் அந்த இலக்கு நிறைவேறியிருக்கும்.

குழப்பங்களும், சிக்கல்களும் தீர்ந்த பின்பு முறையாகத் தேர்தல் நடந்து புதிய ஆட்சியாளர்கள் வந்தபோது எனக்குப் பொருளாளர் பொறுப்பு கிடைத்தது. பணிமூப்பு அடிப்படையில் ஒருவர் வந்திருக்க வேண்டும். சில பல காரணங்களால் புதியதாக ஒரு நபர் பொதுச் செயலராக நியமிக்கப்பட்டார். எவர் வரவேண்டுமோ, அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இந்த முறைகேடு பற்றிய விவரத்தை அவரிடம் எடுத்துரைத்தபோது அவர் நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். ஆனால் இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை கூறினீர்களானால் அதை நான் செய்து தருகிறேன் எனக் கூறினார். நான் அவர் முன்னிலையில் இரண்டு வழிகளைப் பற்றிச் சொன்னேன். அதில் ஒன்று ''பாதிக்கப்பட்டவருக்கு பொதுக் காரியதரிசிக்குரிய சம்பளமும் சலுகைகளும் தர வேண்டும். அவருக்குப் பொதுக் காரியதரிசியிடம் பணி செய்வதிலிருந்து விலக்கு அளித்து, உங்கள் மேற்பார்வையில் பணி செய்ய வாய்ப்புத் தர வேண்டும். அப்போதுதான் எனது வேண்டுகோள் ஏற்கப்பட்டது ஆகும்'', என்றேன்.



பட்டயத் துறைப் பேராசிரியர்களுக்கு பல்கலைக் கழகக் குழுவின் பரிந்துரைப்படி ஊதியம் வழங்க முடிவு எடுக்கப்பட்டது. பல்கலைத் துறையில் பணியாற்றியவர்களுக்குப் பணி விதிமுறைகள் வரையறுக்கப்பட்டன. நான் அதிகப்படியான பதவிகளை முதன்முதலாக அமல்படுத்த எனது கருத்துகளைச் செயற்குழுவில் அங்கீகாரம் மற்றும் ஆவணம் செய்ய வேண்டியதிருந்தது. செயற்குழுவில் ஒருவர் காழ்ப்புணர்ச்சியோடு விதிமுறைகள் வகுத்ததைப் பற்றிச் சாடினார். தலைமை வகித்த வீரபாகு அவர்கள், ''கருத்துகள் மாறுபாடாக இருந்தால் உரிய முறையில் மரியாதையுடன் எடுத்துக் கூறுங்கள்'', என்று அவரைக் கடிந்து கொண்டார்.

புதிய பதவிகள் பற்றி எதிர்ப்பு வந்தபோது அவர் என்னிடம் எனது கருத்தைக் கேட்டார். அவருடைய அறிவுரைப்படி நானும் அந்த விதிமுறைகளை மாற்றி ஏற்றுக்கொண்டேன்.

அந்த விதிமுறைகள் பற்றி அப்போது துணை வேந்தராக இருந்த மாண்புமிகு திரு. நரசிஸிம்மராவ், தில்லியில் பல்கலை செனட் கூட்டம் ஒன்றை நடத்தினார். எனக்கு அப்போது உடல் நலக் குறைவால் அறுவைச் சிகிச்சை நடந்தது. அதனால் ஏ.பி.சி.வி அவர்கள் என்னை விமானத்தில் செல்ல அறிவுரை கூறினார். இதனால் சபைக்குத் தேவையற்ற செலவாகும். ஆகவே நான் விதிமுறைகளைத் தெளிவாக எழுதியுள்ளேன். விமானச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்தேன். அதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போது இருந்த நிதிச் செயலாளரிடம் கூறி என்னைப் பயணச் சீட்டுடன் விமானத்தில் ஏற்றி அனுப்பச் சொன்னார். அவருடைய ஆணைப்படி நானும் நடந்து கொண்டேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

ஒரு முறை தேர்தலில் விதிமுறைகளை மாற்றம் செய்ய செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட்டது. அப்போது Single transferable முறையை ரத்து செய்து, சாதாரணப் பெரும்பான்மை விதிகளை அமல்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டம் மூன்று முறை நடந்தது. அந்தக் கூட்டம் துவங்குவதற்கு முன் அவர் எனது கருத்தைக் கேட்டார். நான் அவருக்கு ஒரு குறிப்பிட்ட வாக்காளர்களை உடையவர் மிக எளிமையாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால் பெரும்பான்மை வாக்குப் பெறும் விதியால் 51% சதவிகிதம் பெற்றவர் 49% சதவிகிதம் பெற்றவர்களை ஒதுக்கிவிடலாம். இதனால் ஒரு குறிப்பிட்ட குழுவினர் ஆட்சி பீடத்தில் அமர்வார்கள் என்றேன். வீரபாகு அவர்கள் இருந்தவரை சாதாரண பெரும்பான்மை விதிமுறை மாற்றத்திற்கு ஆதரவு கிடைக்கவில்லை. அவர் செயற்குழு கூட்டத்திலேயே, 'பி.கே.பி சொல்வது நியாயமாக உள்ளது. எனவே யாரும் இதனைப் பற்றிப் பேசவேண்டாம்', என்று கூறிவிட்டார். அவர் காலத்தில் இதைப்பற்றிய மாற்றம் ஏற்படவில்லை. அவருக்குப் பின்னால் வந்தவரின் தலைமையில்தான் சாதாரண பெரும்பான்மை விதி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஒரு முறை மத்திய அரசிடமிருந்து சபைக்கு உதவித்தொகை கிடைக்கவில்லை. நமது வீரபாகு அவர்கள் தில்லி சென்று கல்வி அமைச்சரைச் சந்தித்தார். ஒரு குறிப்பிட்ட திட்டங்களுக்குத்தான் நீங்கள் உதவித்தொகை தருகிறீர்கள். அதை நீங்கள் தரவில்லையானால்





அவற்றை நிறுத்திவிடுகிறோம். ஆனால் பொதுமக்களிடையே காந்திஜீ கூறியதுபோல் இந்தி பிரச்சாரம் செய்வோம். ஊடகங்கள் மூலம் சர்க்கார் உதவித்தொகை தரவில்லை என்பதை அறிக்கைகள் மூலம் தெரிவிப்போம்; என எச்சரித்தார். பதினைந்து நாட்களுக்குள் உதவித்தொகை முழுவதும் கிடைத்தது. ஒரு பைசா கூடக் குறைக்காது முழுத்தொகையும் கிடைத்தது.

ஒரு முறை இந்தி பிரச்சார சபைப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்ய நினைத்தோம். சபை வளாகத்தில் அடுக்கு மாடிக் கட்டிடம் வங்கி உதவி பெற்று கட்டி மாத வாடகை வசூல் செய்து வங்கிக்குச் செலுத்த நீண்ட காலத் திட்டம் தீட்டினோம். ஆனால் ஏ.பி.சி வீரபாகு அவர்கள் அதை ஏற்கவில்லை. அவர் கூறிய காரணம் சரியாக இருந்தது அவர் என்னிடம் நீ பொருளாளராக இருக்கும்வரை மாத வாடகை சரியாக வசூல் செய்து வங்கிக் கடனை அடைத்து விடுவாய். நீயே அடுத்துப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவது ஜனநாயக முறையில் சாத்தியமில்லை. வேறு ஒருவர் பொருளாளரானால் மாத வாடகையை முறையாக வசூல் செய்யாது அல்லது வசூல் செய்துவிட்டு வங்கிக்குச் செலுத்தாது இருந்தால் பெரும் நஷ்டம் ஏற்படும். எனவே இத்திட்டத்தை நிறைவேற்றுவது உசிதமில்லை என்றார்.

அதற்குப் பதிலாக அவர்களுக்குக் கட்டிடம் கட்டிக்கொள்ள நிலம் வாங்கித் தந்து உதவி செய்யலாம் என்றார். அவர்கள் மாதத் தவணைகளை வங்கிக்கு நேரே செலுத்தச் செய்யலாம். அதற்காக அவர் நெடுங்காடி வங்கியில் ஒரு பெரும் வைப்பு நிதியைக் கொடுத்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார். அது தான் வீரபாகு குடியிருப்புத் திட்டம். இதில் போற்றப்படும் அம்சம் என்னவென்றால் உதவி செய்யும்போது சிக்கல்களில்லாது சரியான முறையில் செய்ய வேண்டும் என்பதே.

ஏ.பி.சி. வீரபாகு அவர்களின் தோற்றமே நம்மை நேர்வழியில் செலுத்தும் ஆற்றலுடையது. அவர் இறையாண்மை மீது அபார நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் சிவ தீட்சைப் பெற்றவர். அவர் கண்களில் பரிவு இருந்தது. அவை நேர்வழியில் நம்மை செல்லத்தூண்டும். அவர் கொடுத்துள்ள தாரக மந்திரம் சிக்கலை முடித்துவிடும் அல்லது அதன் குற்றங்குறைகளை நீக்கி நேரான முறையில் தீர்த்து வைக்கும் (END OR MEND),

அவரின் பொது வாழ்வின் சிறப்புகளை ஏராளமாக எழுதலாம். அவரது வழிகாட்டுதலைப் பின்பற்றி இந்தித் தொண்டு செய்யும் வாய்ப்பை நான் பெற்றேன். அதுவே என் வாழ்க்கையினைச் சீரிய முறையில் நடத்த வழி காட்டுகிறது.

## கல்லூரிக்கு வருகை தந்துள்ள இந்தியப் பிரதமர்கள்

இந்தியப் பிரதமராக இருந்த பண்டிட் ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, திருமதி. இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் வ.உ.சி கல்லூரிக்கு வருகை தந்துள்ளார்கள். பல்வேறு மாநில ஆளுநர்களும் வருகை தந்துள்ளார்கள்.



# மலரும் நினைவுகள்

**மா. சங்கரநாராயணன்,**
தொழிலாளர் இணை ஆணையர் (ஓய்வு), சென்னை



**நா**ன் 1964-67 கால கட்டத்தில் இக்கல்லூரியில் பி.காம் மாணவனாக இருந்தேன். குலபதி ஏ.பி.சி வீரபாகு அவர்கள் மனிதாபிமானம், மேலாண்மைத்திறன், கல்வியின் தரத்தை மேம்படுத்துவதில் அக்கறை, அனைவருக்கும் கல்வி போன்ற கொள்கைகளில் தளராத நம்பிக்கை, முக்கியமாக மாணவர்களின் ஒழுக்கத்தில் கவனம் செலுத்துதல், போன்றவற்றில் சிறந்து விளங்கினார்கள். அந்த காலகட்டத்தில் தென் தமிழ் நாட்டில் வ.உ.சி. கல்லூரி அதிக மாணவர்களைக் கொண்ட கல்லூரியாகவும், இளங்கலையில் அதிக பிரிவுகளைக் கொண்ட கல்லூரியாகவும், இருந்தது. மேலும் பி.காம் பட்டப்படிப்பு ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் வ.உ.சி. கல்லூரியில் மட்டும்தான் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.!

அன்றைய ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் சிறந்து விளங்கிய சில கல்லூரிகளில் மாணவர்களைக் கல்லூரியில் சேர்ப்பதற்கு, அவர்கள் பி.யூ.சி எனப்படும் கல்லூரிப்படிப்புக்கு முந்தைய புகுமுக படிப்பில் பெற்றிருந்த மதிப்பெண்கள்தான், கல்லூரி சேர்க்கைக்கு அளவுகோலாக இருந்து வந்தது. அதன் அடிப்படையில்தான் மாணவர்கள் தாங்கள் விரும்பும் பிரிவில் சேர இடம் கிடைத்தது. ஆனால் இந்த நடைமுறைக்கு மாறாக வ.உ.சி கல்லூரியில் மாணவர்களின் இதர திறன்கள் மற்றும் பின்புலன்களைக் கருத்தில் கொண்டு அவர்கள் விரும்பும் பாடப்பிரிவில் சேர்க்கை அளிக்கப்பட்டது என்பது ஒரு பெருமைக்குரிய விஷயம் என்று நான் கருதுகிறேன்.

குலபதி ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, வறுமையில் வாடுகின்ற மாணவர்களுக்கு சிறப்புச் சலுகை அளித்து அவர்கள் கல்லூரியில் தொடர்ந்து கல்விபயில வசதி செய்து கொடுத்தும், மற்ற கல்லூரிகளில் எல்லாம் விடுதியில் தங்கிப் படிக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கூட அந்தந்த மாதமே விடுதிக் கட்டணம் மற்றும், உணவுக் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும் என்ற நிலைமை இருந்து வந்தபோது, வ.உ.சி கல்லூரியில் மட்டும்தான் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அரசிடமிருந்து கல்வி உதவித்தொகை கிடைத்தபின்பு விடுதிக்கட்டணம் மற்றும் உணவுக்கட்டணம் ஆகியவற்றை செலுத்தினால் போதும் என்ற சலுகை இருந்து வந்தது என்பதை நான் இங்கு மிகவும் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறான மனிதாபிமான செயல்கள் மூலம் குலபதி. ஏ.பி.சி.வீ அவர்கள் பல்லாயிரக் கணக்கான பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட ஏழை மாணவர்கள் பொருளாதாரப் பிரச்சனையினால் கல்வியை கைவிடும் சூழ்நிலையை மாற்றி, தங்கள் கல்வியைத் தொடர உதவியிருக்கிறார்கள் என்பதையும் நான் பெருமையுடன் நினைவு கூர்கிறேன்.

திரு. குலபதி ஏ.பி.சி.வீ அவர்கள் தொடங்கி வைத்த இந்த கல்விப்பணி இன்றளவும் எவ்வித குறைபாடும் இல்லாமல், தொடர்ந்து அவரது வாரிசுகளால் சிறப்பாக நடத்தப்பட்டு வருவது என்பது மிகவும் பெருமைக்குரியதும், எப்போதும் நினைத்துப்பார்க்க வேண்டியதும் ஆகும்.



# "தாயின் மடி"

**K. ராமச்சந்திரன்,** தூத்துக்குடி.

'**ஊ**ருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்து, இன்றும் நமது மனதில் நிலைத்து வாழும் குலபதி அமரர் ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் கல்லூரிப் படிப்பென்றால் எண்ணிகூடப் பார்க்கஇயலாத, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருந்த என் போன்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு, கல்லூரிப் படிப்பை மேற்கொள்ள வாய்ப்பு தந்ததன் மூலம் மேன்மை பெற்று விளங்கினார் என்றால் அது மிகையாகாது.



பி.யு.சி வகுப்பில் கணிதப் பிரிவிலும், பின்னர் B.Com வகுப்பிலும் சேர்ந்து படித்தேன். கல்லூரியின் சென்ட்ரல் ஹாலில் அவ்வப்போது நடைபெறும் வினாடி வினா நிகழ்ச்சியில் Quiz Master கேள்வி கேட்டு முடிக்கும் முன்னரே சில மாணவர்கள் முந்திக்கொண்டு சரியான பதிலைக் கூறும்போது; அவர் என்ன கேட்டார், இவர் என்ன பதில் சொன்னார்; என்று அருகில் இருந்தவரைக் கேட்டுத் தெரிந்துகொள்வேன். ஒரே ஒரு கேள்விக்கு எந்த மாணவரும் சரியான பதில் சொல்ல முடியாமல் அந்த மதிப்பெண் Quiz Master க்கே சென்றுவிட்ட சந்தர்ப்பம் இன்னும் என் நினைவில் உள்ளது. கேள்வி என்னவென்றால் "Which is the warmest place in the world" ஒவ்வொருவரும் உலகில் உள்ள உஷ்ணப் பிரதேசங்களைப் பற்றி கூறினர். Quiz Master கூறிய சரியான விடை என்ன தெரியுமா? The Lap of the Mother is the warmest place in the world. அதாவது தாயின் மடிதான் உலகத்தில் வெதுவெதுப்பான இடம். இதைக் கேட்டதும் கை தட்டலால் அரங்கமே அதிர்ந்தது. Quiz Master வேறுயாரும் அல்ல. புகழ் வாய்ந்த மேதை பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் அவர்கள் தான்!

கல்லூரியில் எனக்கு மிகவும் நம்ப முடியாமல் இருந்தது பாடம் போதித்த ஆசிரியர்கள் மணமாகாதவர்களாகவும், மாணவர்களில் சிலர் மணமானவர்களாகவும் இருந்ததுதான். அதிலும் சில மாணவர்கள் வெளிநாட்டிலிருந்து இந்தக் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றனர். மலாயாவிலிருந்து (அப்போது மலேசியா என்ற பெயர் கிடையாது) சங்கரலிங்கம் என்பவரும், இலங்கையிலிருந்து C.O.V.K. முதலியார் என்பவரும் வந்து, என்னுடன் கல்வி கற்றனர். அது என்ன தங்கள் பெயரில் முதலியார் என்ற சாதிப் பெயரை மட்டும் வைத்திருக்கிறீர்கள் என்று வினவினேன். அதற்கு அவர் சொன்ன பதில், எனது முழுப்பெயர் ''ஓங்கார வடிவேலு கதிர்காம முதலியார்'' என்பதாகும் என்று கூறினார்.

அந்தக் காலத்தில் தமிழ் நாட்டிலேயே இரண்டு பல்கலைக்கழகங்கள்தான் இருந்தன. சென்னைப் பல்கலைக் கழகமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும்தான். அதிலும் **B.Com** பட்டப்படிப்பு தென் தமிழகத்தில் மதுரை அமெரிக்கன் கல்லூரி, விருதுநகர் செந்தில்குமார் நாடார் கல்லூரி ஆகியவை தவிர, தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி என்று பெருமையுடன் கூற முடியும். நான் பட்டம் பெற்ற சில வருடங்களிலேயே **B.Com.,** வகுப்பில் சேருவதற்கு வேறு சில கல்லூரிகளில் பல ஆயிரம் ரூபாய்கள் நன்கொடை கொடுத்துத்தான் சேர முடியும் என்ற நிலை இருந்தது. ஆனால் அமரர் குலபதி ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் வாழ்ந்த காலத்திலும் சரி, அவருக்குப் பின்னர் அவரது வழித்தோன்றல்களும் சரி, கல்வி வணிகமாகி விடக்கூடாது என்ற கொள்கைப்பிடிப்பில் இருந்து விலகாமல் ஏனைய அனைத்துக் கல்லூரிகளிலிருந்தும் வேறுபட்டு ஒளி வீசுவதை கண்டு பெருமிதம் கொள்கிறேன்.



# மனிதர் பற்றிய மதிப்பீடுகள்

**டி.என். சுகிசுப்பிரமணியன்**
(வானொலி நாடக அமைப்பாளர்)

உலகம் முன்பிருந்ததுபோல இன்று இல்லை. விநாடிக்கு விநாடி உலகத்தில் மதிப்பீடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. நாட்டுக்கு நாடு 'அரசியல் மதிப்பீடு' ஏற்றுமதி- இறக்குமதி மதிப்பீடு, கல்வி-கலாச்சார மதிப்பீடு என்று பலதரப்பட்ட மதிப்பீடுகள் நடக்கின்றன.

வாணிப உலகத்தின் ஆதிக்கம் பெருகி வளர்கிறது. அரசியல்வாதிகளின் செல்வாக்கு ஓங்கி வருகிறது. மனிதர்கள், கட்சிகள், கட்டிடங்கள், தொழிலகங்கள், சட்ட மன்றங்கள் எங்கும் மதிப்பீடு நோக்கம் சதா வேலைசெய்து கொண்டே இருக்கிறது.

விற்பனைப் பொருள்களின் விலை மதிப்பை அவற்றின் தரம் நிறுத்தலளவை, அல்லது முகத்தலளவை அல்லது எண்ணலளவை கொண்டு மதிப்பீடு செய்கிறோம். எந்தப் பொருளுக்கும் விலை வைக்கிறோம். விலை வைக்கிற பொருள்களிடம் மதிப்பு வைப்பது இல்லை. ஐந்து பைசா மதிப்புள்ள குங்குமத்திற்குள்ள மதிப்பு வேறு, ஐந்து ரூபாய் விலையுள்ள செருப்புக்குள்ள மதிப்பு வேறு. ஆயினும் வாணிபச் சந்தையில் எல்லாப் பொருள்கட்கும் விலை உண்டு.

வாணிபப் பொருளாக இருந்தாலும், விலைக்குமப்பால் சிலபொருள்மீது மதிப்பும் மாண்பும் நமக்கு இருக்கும். இதேபோன்று மனிதர்களிடம் நாம் எதற்காக மதிப்பு வைக்கிறோம் என்னென்ன அம்சங்கள் மனிதர்கள் மீது மதிப்பு வைக்கச் சொல்லுகின்றன? அல்லது என்னென்ன வகை மனிதர்கள் சமுதாயத்தில் மதிப்பைப் பெறுகிறார்கள்?

பிறந்தவர்கள் யாவரும் மதிப்புப் பெறுவதில்லை. கல்லெல்லாம் மாணிக்கக் கல் ஆகுமா? மாணிக்கக்கற்கள் மத்தியிலும் மாணிக்கங்கள் உண்டு. மனிதர்களுக்குள் மனிதர்கள் உண்டு. விதிக்குவிதிபோல வீரருக்குள் வீரன், பெண்களுக்குள் பெண் என்றெல்லாம் சலித்தெடுத்து தரம் பிரிப்பார்கள்.

உடல் உறுப்புக்கள் யாவும் இயங்கினால் தான் மனிதன் என்று பெயர். ஆயினும் எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்று மதிப்பீடு செய்கிறார்கள். வியர்வை உடலின் பலபாகங்களில் வரலாம். நெற்றி வியர்வைக்குத்தான் மதிப்பு அதிகம். மூளை உழைப்புக்குத்தான் மதிப்பு அதிகம்.

சிரசும், அதன் உழைப்பும் தலைசிறந்தது என்று சொல்லுமாப்போல, மக்களில் தலைசிறந்தவர்களிடம் மதிப்பு வைக்கிறோம். சில சமயம் மிகச்சிறந்த மனிதர்கள் இறந்த பின்னும் அவர்கள் நினைவையும், நேர்மையையும், தகுதியையும், அவர்கள் விட்டுச்சென்ற ஆக்க வேலைகளையும் தலைமேற்தாங்கித் தொடர்ந்து நடத்துகிறோம்.

மனிதர்களை மதிப்பீடு செய்யும்போது 'இருந்தும் கொடுத்தான், இறந்தும் கொடுத்தான்' என்று போற்றுகிறோம். ஒரு சிலரை 'இருந்தும் கெடுத்தான், இறந்தும் கெடுத்தான்', என்று தூற்றுகிறோம்.

மனிதனை மதிப்பது எதற்காக? எதன் காரணமாக மதிக்கிறோம்?

ஒழுக்கத்திற்காக மதிக்கலாமா? அவனது அறிவுக்காக மதிக்கலாமா? அல்லது தொழிற்திறமை, செல்வம் சேர்க்கும் ஆற்றல் இதற்கு மதிக்கலாமா? மக்கள் மந்தையை



மாணிக்க மக்களாக மாற்றும் தலைமைப் பதவிக்காக மதிக்கலாமா? கொள்கைக்காக மதிக்கிறதா? உரிமை வேட்கை ஊட்டுவதற்காக மதிப்பதா? சுதந்திர தாகத்தை ஊற்றெடுக்க வைக்கும் நெஞ்சுரத்திற்காக மதிக்கலாமா?

எதைக்கண்டு பிறர்மீது அல்லது பிறரது கொள்கை, மதிநுட்பம் இவற்றின் மீதுநாம் இச்சை கொள்ளுகிறோம்? மதிப்பீடு செய்தவர்களிடம் மரியாதையும் அன்பு வழிபாடும் செய்கிறோமே எதனால்?

ஒருவரிடம் சீரிய குறிக்கோள்கள் இருக்கலாம் ஆயினும் அவற்றைச் செயற்படுத்துவதில் அணுகும் தன்மைகளில் இவை நமக்குப் பிடிக்காமலிருக்கலாம்.

மற்றொருவரிடம் சீரிய குறிக்கோள்கள் சிறப்பாக இல்லாமல், பிறரை அணுகும் தன்மைகள் சிறப்பாக அமையலாம்.

மனிதனிடம் சிறந்த தன்மைகள், சிறப்பான குறிக்கோள்கள் இருந்து பிறரை அணுகிச் செயல்படும் தன்மைகளும் இருந்தால் நமது மதிப்பீட்டில் அந்த நபர் தனியிடம் பெற்றவராக உயர்ந்து நிற்கிறார்.

இதுபோன்ற மதிப்புக்குள் விழுகிறவர்கள் பலர் நமது கவனத்தையும் கருத்தையும் கவருகிறார்கள். அவர்களை நாம் தரம் பிரிக்கத் தொடங்குகிறோம்.

தோட்டத்தில் விளையும் ஆரஞ்சுப் பழங்களை அதன் உருவம், நிறம், பருமன், கவர்ச்சி போன்ற மதிப்பீடு வைத்து விலை நிர்ணயம் செய்கிறார்கள்.

வைரம், முத்து, பவளம் போன்ற மணிகளை அவற்றின் பருமன்,ஒளிச்சுடரும் தன்மைக்கு ஒப்பாகப் பிரிக்கிறார்கள் .

நெல்லும் கரும்பும், பழமும் பயிர்வகையும் தரம் பிரிக்கப்படுகின்றன.

தரம்பிரிக்கும் வகையான பொருள்களுக்கு விலைவைப்புச் சாத்தியமாகிறது. விலை அதிகமுள்ள சரக்கு உயர்ந்தது; நயமானது; நல்லது. விலைகுறைவான சரக்கு மட்டமானது, போலியானது, என்னும் நியதியை அனுசரிக்கிறோம்.

இதே நியதிப்படி பார்த்தால் யாரிடம் பொன்னும் பொருளும் பணச்செழிப்பும் குமிழ்விடுகிறதோ அவனைப் பெரியவனாக மதிக்க வேண்டும். ‘கத்தும் ஆழ் கடலைவிட உண்ணீர் தரும் சிறிய ஊற்று மிகப் பெரிதாக மதிக்கப்படுவதுபோல’, லட்சாதிபதிகள் கோடீஸ்வரர்களைவிட அதிக மதிப்பு வாய்ந்தவர்கள் மிகச்சிறிய வாழ்க்கை வடிவத்தில் இருக்கிறார்கள்.

பண்பு, கலை, கவிதை, ஆராய்ச்சி என்னும் இடங்களுக்கு வரும்போது பண விலைக்குள்ள மதிப்புப் போய்விடுகிறது, போயே போய் விடுகிறது என்று கூடஅழுத்தமாகச் சொல்லாம்.

பயனுக்கு என்று வரும்போது புதிய மதிப்பும் புதிய அளவுகோலும் பிறக்கிறது.

பலதாரம் மணம் செய்தவனைவிட, அவ்வாறு செய்வதே மனிதப் பண்பாகாது என்னும் நியதியை அனுஷ்டிப்பவனைப் போற்றுகிறோம். பிட்சாதிபதியான கலைஞன், கவிஞன் பண்டிதன், லட்சாதிபதியைவிடப் பெரியோன்.

ஆடம்பர அரசனைவிடத் துரும்பு போன்ற துறவி மேலோன்.

பணமுடையார் எல்லாமுடையவரல்லர்; அறிவுடையாரே எல்லாமுடையவர்



என்றெல்லாம் நூதன மதிப்பீட்டு அளவைகள் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

மனிதனை வயதுக்காக மதிப்பது வேறு; மனிதனை அவன் தரும் வளத்திற்காக மதிப்பது வேறு. சுழன்றும் ஏர் பிடிப்பவன் பின்னால் போவதே உலகம் என்பதுபோல எளிய தோற்றமுள்ளவன் கவர்ச்சிக்காரனைவிட உயர்ந்தோன் ஆகிறான்.

எனவே மனிதனை மதிப்பது வேறு; மனிதத் தன்மையினை மதிப்பது வேறு. மனிதர்களின் வடிவம், வளர்ச்சி, ஆற்றல், கல்வி, கேள்வி, செல்வம், இவற்றோடும் நின்றுவிடாத நமது அறிவு, இவற்றுக்கு உள்ளும் புறமுமாக நின்று வேறு ஒன்றைத் தேடுகிறது. அந்த ஒன்று எது ?

அதன் பெயர் மனிதத் தன்மை !

மனிதத் தன்மைகள் ஒருவரிடம் இருக்கின்றனவா என்று எக்ஸ்ரே கதிர்களைப் போல ஊடுருவிப் பார்ப்பதுதான் மதிப்பீட்டின் நோக்கம்.

மனிதனாக இருந்தும், மனிதத் தன்மை இல்லாதவர்கள் இருக்கலாம். எல்லாச் சிப்பியிலும் நன்முத்துக் கிடைப்பது இல்லை. முத்து இருந்த சிப்பியை எவரும் பாதுகாப்பது இல்லை. முத்தை எடுத்துக்கொண்டு சிப்பியை மறந்துவிட வேண்டும். மனிதனின் எளிமை, வறுமை, சமுதாய அந்தஸ்து இவற்றை மறந்து அவனிடமுள்ள மனிதத் தன்மையை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

இந்த மனிதத் தன்மையானது வெளிப்படையாகத் தெரியாத ஒருவகைப் பண்பு. அது உறுப்பாக மனிதர்களுக்குள் ஒளிந்து கிடக்கும் திறமை, மனிதர்களிடம் இருக்கும் சக்தி. இவற்றை நாம் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எவை புறக்கண்ணால் காணக் கிடைக்கவில்லையோ,அவற்றை அறியவும், அறிந்த பின்பு அவற்றைப் பேணவும், பாராட்டவும் தெரிய வேண்டும்.

பச்சிலைகளிலுள்ள மருத்துவச் சக்தியை அறிந்து இதனை வழி வழிவம்சமாக நாம் காப்பாற்றுகிறோம். பச்சிலைகள் யாவும் நோய்தீர்க்கும் தாவரம். இதேபோன்று காய்கனி, கிழங்கு, மாவுப் பொருள்கள் தரும் தாவர இனங்களையும் அழியாது பயிரிட்டுப் பாதுகாக்கிறோம்.

மக்களில்,சமுதாயத்தின் பசிநீக்கும் தகுதியுள்ளவர்கள், நோய்தீர்க்கும் தகுதியுள்ளவர்கள் என்று இருசாரார் இருக்கின்றனர். வைத்தியர்களில் மன நோய்தீர்க்கும் வல்லவர்கள் இருக்கிறார்கள். வயிற்றுப்பசி நீக்குபவர்களைவிட அறிவுப் பசி நீக்குபவர்கள் மனிதர்களில் சிறந்தவர்கள்.

மனித சமுதாயத்தின் பசி வகைகளைப் போக்கக் கூடியவர்கள் நமக்குத்தேவை. அதே சமயம் மனிதத்தன்மை நிரம்பியவர்களாய் இருப்போர் மதிப்பீட்டிற்குத் தேவை.

சமுதாயத்தின் அன்றாட வாழ்வு சிறப்புறுவதற்குச் செம்மையை வளர்ப்பவர்கள், ஒழுங்கைப் பேணுபவர்கள் தேவை. பிறர் உரிமைகளில் தலையிடாதவர்கள் தேவை. பிறர் சுதந்திரத்தை, மதிப்பவர்களும் நமக்குத் தேவை.

சமுதாயத்தில் பிறந்த மனிதர்கள் யாவரும் நல்லன செய்யமாட்டார்கள். சுயநலம் , வாழ்வுப் போராட்டம் காரணமாகத் தீமை செய்தும் வாழ்வார்கள்.

தீயதன்மைகளை நசுக்குவதற்கும், நல்ல தன்மைகளை வளர்ப்பதற்கும் மாமனம்





படைத்தவர்கள் தேவை.

தீயனவற்றை ஒடுக்கும் ஆற்றல் இருக்கலாம் சிலருக்கு. ஆனால் நல்லனவற்றை வளர்க்கும் திறமை இல்லாது போகலாம். நல்லன பேணும் திறமைசாலிகளும் தீயன நீக்கும் திறமைசாலிகளும் ஒன்றாகச் சந்தித்து அனுசரணையாக இருக்கும் அறிவு பெற்றாக வேண்டும். அனுசரணைச்சக்திக்கு வலிமை அதிகம். விட்டுச் கொடுக்கும் இயல்பு நிரம்பிய மனிதர்கள் பிறரை உயர்த்த முடியும். தாமும் உயர முடியும்.

மனிதத்தன்மை என்பதற்கு இரக்கச்சித்தம் என்று மட்டும் பொருள் கொள்ளக்கூடாது காரியசாதனையாளர்களிடம் கடினச் சித்தத்துடன், ஓரளவுஇரக்கச் சித்தமும் இருக்கும். இரக்கச் சித்தம் மிகுதியாக இருப்பவர்களிடம், ஓரளவு கடினச் சித்தமும் கண்டிப்பும் இருக்கக் காணலாம். எந்த மனிதத்தன்மை யாரிடம் வகைவகையாகப் புதைந்து இருந்தாலும், அத்தனை மனிதத் தன்மையும் ஆக்க வேலைக்கும், வளர்ச்சிப் பாதைக்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும்.

வளர்ச்சியிலும் ஆக்கவேலையிலும், ஈடுபடுகின்ற மனிதத்தன்மைகளை மட்டுமே சமுதாயம் மதிப்பீடு செய்ய முன்வரும்.

பயிரிடும் காலை, பசி நீக்கும் பயிர்வகை என்றும், பணம் குவிக்கும் பயிர்வகை என்றும் இருவகைப்படுத்திப் பயிர்செய்கிறோம். இவ்விரண்டு வகையும் சமுதாயத்திற்குத் தேவை. இரண்டில் எது மிக உயர்ந்த தேவை என்றால் பசிநீக்கும் பயிரே தேவை. இதிலே மனிதத்தன்மை மிகுதி என்பது சான்றோர் கொண்ட முடிவு.

சான்றோர்கள் கடைப்பிடிக்கும் ஒழுங்கும் நியதிகளும் போலீஸ்காரர்கள் கடைப்பிடிக்கும் விதி ஒழுங்குக்கு ஒப்பு. சமுதாய வீதியில் நடக்கும்போது சான்றோர்கள் அறங்காவலர்களாய் இருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் காட்டும் ஒழுங்குப்படி நடந்தால் நாமும் நடக்கலாம், பிறரையும் நடக்க வைக்கலாம். பிறர் நல்வழியைத் தடுப்பவர்கள், தங்கள் நடமாட்டத்தைத் தடுக்க வழிகோலுகிறார்கள்.

விளையும் மகசூலில், தூற்ற வேண்டிய பொருள்கள், போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொருள்கள் என்று இருவகை இருக்கும் போது. பதர்நீக்கி, மனிதனை பாதுகாக்க வேண்டும்.

சொல்லிலே, செயலிலே பயனுள்ளவை பயனில்லாதவை இரண்டும் உண்டு. பயனுள்ளவற்றை பாதுகாக்க வேண்டும். இதுவே மனிதத் தன்மையின் அடித்தளம்.

மனிதர்களை உருவத்தால் அன்றி, உள்ளத்தால் நிறுத்துப் பார்க்க வேண்டும்.

மனிதர்களை வயதாலன்றி, அறிவால் சிறந்தவர் என்று பிரித்துப் பார்க்கத் தெரிய வேண்டும்.

மனிதர்களில், நெற்றி வியர்வை சிந்தியவர்களைக் காணும் சக்தி வர வேண்டும். கொள்கைகள், உரிமைகள் இவற்றைச் சுட்டிக்காட்ட வல்லவர்களே மக்களில் சிறந்த மனம் படைத்தவர்கள்.

மனிதர்களில் விலை மதிக்கக்கூடிய பொருள்களையும், விலைமதிக்க வொண்ணாத அற்புதங்களையும் தரவல்லவர்கள் இருப்பார்கள். ஒரு சிலர் இருப்பதைக் காப்பதில் வல்லவர்களாகத் திகழ்வார்கள். காத்தலும் மனிதத் தன்மைகளில் ஒன்றே. சிறந்த குணம், சிறந்த கருத்து, சிறந்த செயல் உள்ளவர்களைப் பின்பற்றுகிறவர்களையும் கணிக்கும் ஆற்றல் தேவை.



நல்ல நம்பிக்கைகள், நல்ல கொள்கைகள் நிலவவும், வளரவும் துணை நிற்பவர்கள் மனிதர்கள்.

மனித சமுதாயத்தில் ஒரு சிலர்தடையும், குறையும் சொல்லுவார்கள். தேர்த் திருவிழாவில் வடம் பிடிப்பவர்கள்தாம் தேரை இழுப்பவர்கள். இவர்களே தேரோட்ட விழாவிற்குத் தேவை. இதே சமயம் தேர்ச் சக்கரத்தின் ஓட்டத்திற்கு முட்டுக் கொடுக்கும் நபர்கள் இருக்கிறார்கள். தேரோட்டத்திற்குத் தடை செய்கிற இவர்கள் பாதைவிட்டுப் பிறழா திருக்கவும் வீதிமருங்கில் சாடி, ஓடித் தேருக்கு ஆபத்து விளைவிக்காமலிருக்கவும் மறைமுகமாக நன்மை செய்கிறார்கள்.

மாட்டிற்கு மூக்கணாங்கயிறு போன்றவர்களும், சட்டசபைக்குள் எதிர்க்கட்சியாளராகவும் வந்து சமுதாய வளர்ச்சிக்குத் பாடுபடுகிறவர்களும், மனிதத் தன்மை உள்ளவர்களே.

மனித மனத்தின் மாண்பை எங்கும் காணமுடியும்!

கட்சியை மறந்தும் மனிதத்தன்மையுள்ளவர்களைச் சட்டசபைக்குள் காணலாம்.

ஜாதீயப் பக்தியைக் கடந்தும் மனிதத்தன்மையுள்ளவர்களைச் சமய வழிபாட்டில் காணலாம்.

அலுவலகங்களில் நான்கு வர்க்க பேதங்களை மறந்து செயல்படுகிறவர்களையும் காணலாம்.

பிறரிடமுள்ள மனிதத்தன்மைக்கு மதிப்புக்கொடுப்பது மிகப் பெரிய சீலம், மிகப் பெரிய தவம். இந்தத் தவ வேள்விக்கும் நம்மிடையே அதிக எண்ணிக்கையுள்ள நபர்கள் மிகமிக தேவை. அந்த நாடு, அந்தமொழி அந்த இனம் ஓங்கி உயர்ந்து வாழ முடியும்.

எந்த மதிப்பீடுகள் செய்தாலும் ஆக்கசக்தியை மதிப்பிடுவது போன்று, மறைமுகமான எதிர்ப்புச் சக்தியைத் தடைசெய்து, நேர்மை வழங்கிய மனிதத்தன்மைகளையும் நாம் மதிப்பீடு செய்யத் தெரிய வேண்டும்.

அப்போதுதான் சமுதாயத் தேர் ஒழுங்கான நிலைகாண வந்து நிற்கும்.

மதிப்பீடு என்னும் படிக்கற்கள் இல்லாது போனால் வாணிபம் நடக்காது. கலை பிறக்காது கட்சிகள் செயலாற்ற முடியாது. நியாயங்கள் நிலவா. மதிப்பீடுகள் தாம் உயர்வு தாழ்வுக்குரிய அடித்தளம். மதிப்பீடுகள் அத்தனை புனிதமானவை.

*நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், கல்விக்குமாக தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்த செம்மல் ஏ.பி.சி.வீரபாகு*

***தருமை ஆதீன குருமகாசந்நிதானம்***

*தொடர்பு கொண்ட எல்லாத் துறைகளிலும் ஊக்கத்துடனும் வெற்றியுடனும் உழைத்தவர் திரு. வீரபாகுபிள்ளை*

***பன்றிமலை சுவாமிகள்***





# நான் ஏன் நேசிக்கிறேன்?

**எஸ்.ஏ. முருகானந்தம்** - EX.M.P

**ஏ.பி.சி.**வீரபாகு அவர்களும், நானும் அரசியல் உலகில் மாறுபட்ட கருத்துடையவர்கள். தூத்துக்குடி நகர அரசியல் வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் நாங்கள் இரண்டு பேரும் அவரவர் கட்சிக் கொள்கையில் உறுதியாக நின்று போரிட்டு வந்தவர்கள்.

நான் ஏ.பி.சி.வீரபாகு மணி விழா கமிட்டியில் ஒத்துழைக்கிறேன் என்றால் அவர்களின், குறிப்பிடத்தகுந்த ஆக்கப்பூர்வமான பணிகளுக்காகவே ஆகும்.

நான்குநேரி, சங்கரன்கோவில் வட்டங்களில் பூமிதான அபிவிருத்திப் பொறுப்பாட்சி என்னும் ஸ்தாபனத்தின் மூலம் விவசாயிகளுக்கு 300 கிணறுகள் தோண்டுவதற்கு உதவி புரிந்தார்.

தூத்துக்குடியில் சிதம்பரநகர் என்று இன்று பிரபலமாக விளங்கும் நகரத்தை, கூட்டுறவுத் துறையில் உருவாக்கிய பெருமை திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்களைச் சாரும்.

எல்லாவற்றிற்கும் மேலாக கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல், தென்னாட்டுத் திலகர், தேசபக்தர் வ.உ.சிதம்பரனாரின் பெயரால் திருமந்திர நகரத்தில் தமது சொத்து முழுவதையுமே ஈடு வைத்துக் கல்லூரியை உருவாக்கியவர். தமிழகத்தில் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாக அது திகழ்கிறது என்றால் அப்பெருமை ஏ.பி.சி.வீரபாகு அவர்களையே சாரும்.

அடுத்து, பொதுவாக, ஏ.பி.சி. மகாலெட்சுமி கல்லூரி ஒன்றை உருவாக்கி அதனுடைய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருகிறார்.

**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**

---------------------------------

**பின்னருள்ள தருமங்கள் யாவும்**

**பெயர் விளங்கியொளிர நிறுத்தல்**

**அன்னயாவினும் புண்ணியம் கோடி**

**ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்**

என்று தேசீயக் கவி பாரதியார் பாடியதற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டுபவர் ஏ.பி.சி வீரபாகு. இத்தைகய சிறப்புமிகு காரணங்களினால் தான் நானும், தி.மு.க.வைச் சார்ந்த திரு. சிவசாமி, எம்.பி. திரு. ராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர்களும் திரு. ஏ.பி.சி.வீரபாகு மணிவிழா கமிட்டியில் இணைந்து செயல்படுகிறோம்.

**நன்றி - ஏ.பி.சி. வீரபாகு மணி விழா மலர்**

(கட்டுரையாளர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்)



# சித்தா, ஆயுர்வேதம், அலோபதி ஆகியவற்றை இணைத்து Integrated வைத்திய முறையை உருவாக்க வேண்டும்

**ஏ.பி.சி.வீ.உரை :**

தூத்துக்குடி பாரதி தமிழ்ச்சங்கத்தின் அறிமுக விழாவும், பாரதி நூலகத் திறப்பு விழாவும் 17.1.1982 அன்று தூத்துக்குடியில் நடைபெற்றது. அவ்வமயம் பாரதி தமிழ்ச் சங்கத்தின் சார்பாக புதிதாக தொடங்கப்பட்ட வான்முகில் என்ற இலக்கிய பத்திரிகையின் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. அதன் முதல் பிரதியை பெற்றுக் கொண்ட தூத்துக்குடி கல்வித் தந்தை அறநெறி அண்ணல் திரு. ஏ.பி.சி. வீரபாகு அவர்கள் தமது உரையில்,

'நமது நாட்டில், குறிப்பாகத் தமிழ் மொழியில், இல்லாதது ஒன்றும் இல்லையென கூறலாம். புதிய ஆராய்ச்சியில் ஈடுபடுவதை விட காலத்தால் முந்திய தமிழர்களின் நாகரீகத்தையும் அவர்கள் எழுதிய சாஸ்திரங்களையும் ஆராய்ந்து அதனை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். வைத்தியத் துறையை எடுத்துக் கொண்டால் வாதம், இரத்த அழுத்தம் மற்றும் சில நோய்களுக்கு அலோபதி முறையில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை மட்டுமே சிகிக்சை உண்டு அவ்வியாதிகளின் சுவடுகள்கூட தெரியாதபடி குணமாக சித்த, ஆயுர்வேத முறையினால் மட்டுமே முடியும். தற்சமயம்அரசாங்கம் சித்த வைத்திய முறைக்கு ஊக்கம் அளித்து வருகிறது. இருப்பினும் நாம் சித்தம், ஆயுர்வேதம், அலோபதி ஆகிய மூன்றையும் இணைத்து Integrated வைத்திய முறையை உருவாக்கலாமா என ஆராய்ச்சி செய்ய வேண்டும். மேலை நாட்டு அறிஞர் பெருமக்கள் கூட நமது சித்தாந்தம் விஞ்ஞான பூர்வமானது என்ற உண்மையறிந்து நம்மைப் பின்பற்றுகிறார்கள். வான சாஸ்திரம், ஜோதிட சாஸ்திரம் போன்றவைகளை அன்றே நமது முன்னோர்கள் கணித்துள்ளார்கள்.

இன்று விஞ்ஞானிகளால் பாராட்டப்படுவதோடு கையாளவும் படுகிறது. 0-வை (சைபர்) கண்டுபிடித்தது நமது முன்னோர்களே. புதியதை விட பழையவைகளை ஆராய்ந்தால் அதில் பல அரிய செய்திகள் நமக்கு கிடைக்கும். இன்றைக்கு நமக்குத் தேவை டெக்னாலஜி தான். அது விஷயமாக பாரதி கூறிய கூற்றுகளை மனதில் கொண்டு வாழ்க்கை முறைகளை வகுப்போமாக. இன்றைக்குத் தேவையானது விஞ்ஞான பார்வையே. அதைக்கற்று சிறந்து விளங்குவோம்'.

**நனவாகிய கனவு**

1982-ல் ஏ.பி.சி.வீ கண்ட கனவு இன்று நனவாகியுள்ளது. ஆம்! மத்திய அரசாங்கத்தினால் இந்திய மாற்று மருத்துவங்களான ஆயுர்வேதம் (A), யோகா (Y), யுனானி (U), சித்தா (S), ஹோமியோபதி (H) ஆகிய மருத்துவ முறைகளை இணைத்து, ஆயுஷ் (AYUSH) என்ற துறையை ஏற்படுத்தி மாற்று மருத்துவ முறைகளை ஊக்குவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

– **க.பிச்சையா,** தூத்துக்குடி





# தூத்துக்குடி பெயர் காரணம்?

**அ.ச.சாந்தா ஜெயராணி விஜயா**

தூத்துக்குடி நகரை, அந்தப் பெயர் கொண்டு அழைப்பதற்கு பல காரணங்களைக் கூறுவர். 1923ம் ஆண்டில் தூத்துக்குடியின் நிலை, இன்றைய நிலையிலிருந்துபெரிதும் வேறுபட்டது. மக்கள் குடிப்பதற்கு நீரின்றி துன்புற்றனர். பணம் படைத்த சிலர் மட்டுமே கொழும்பிலிருந்து நீர் பெற்றனர். இத்தகைய நிலையில் ஏற்பட்டதே தூத்துக்குடி என்ற பெயர் என்பர்.

"ஊரின் நீர்நிலை எளிதில் தூர்ந்துவிடும் தன்மையுடையது. தூர்ந்த நிலையினை அடைந்து பின் தூர்துக்குடிக்கும் தன்மையினால் தூத்துக்குடி என்ற பெயரினைப் பெற்றது.

ஐரோப்பாவிற்குப் போகும் பெரிய கப்பல்கள் இங்கு வந்து செல்லும். அவ்வாறு செல்லும்போது கப்பலில் சிதறிக் கிடந்த தானியங்களைத் தொழிலாளர்கள் தூர்த்து எடுத்தார்கள் . அதனால் தூத்துக்குடி என்றாயிற்று என்பர்.

வெளிநாட்டிற்குச் செய்தி அனுப்புவர்களும், உள்நாட்டிற்குச் செய்தி அனுப்புவர்களுமாகிய இருநாட்டுத் தூதுவர்களும் முன்காலத்தில் இங்கு தங்கியிருந்தனர். இதனால் தூ துக்குடி என்பது தூத்துக்குடி என்றாயிற்று என்பர்.

தூ த் என்ற போர்த்துக்கீசியன், படைவீடு அமைத்த மூன்று இடங்களில் ஒன்று இது. அதனால் அவன் பெயரால் தூத்துக்குடி என்றாயிற்று என்பர். உண்மையில் இம்மாநகரின் புராணப் பெயர் 'திருமந்திரநகர்'. இதை அநேகமாக அனைவருமே மறந்துவிட்டார்கள்! ஆனால், அதற்குப் பதிலாக இந்நகரை இப்போது புதிதாக 'முத்துநகர்' என்று அழைக்கத் தொடங்கி இருக்கிறார்கள்'. மாறுதல் ஒன்றுதானே மாறுதல் இல்லாதது!

---

# சான்று காட்டி நிறுவும் பாங்கு

திரு. ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தனது கருத்தினை எடுத்துரைக்கும்போது அதற்குரிய சான்றாதாரங்களோடு நிறுவுவார். சான்றாக, மாணிக்கவாசகர் காலத்தினை கி.பி.9ம் நூற்றாண்டே என்று நிரூபிப்பார்.

1.''சுந்தரர் திருத்தொண்டர் தொகையில் மாணிக்கவாசகரைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

2. அண்மைக்காலத்து கல்வெட்டு ஆராய்ச்சியாளர் டாக்டர்.நாகசாமி அவர்கள் சுந்தரருக்குப் பிந்தையவரே மாணிக்கவாசகர் என்பதை நிறுவும் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

3. சுந்தரர் காலம் கி.பி.8ம் நூற்றாண்டு என்பதால் மாணிக்கவாசகர் காலம் கி.பி.9ம் நூற்றாண்டு என்பது புலனாகின்றது.

4. பெரியபுராணத்தில் மாணிக்கவாசகரைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

5. மூவர் தேவாரத்தின் பின்னர்தான் திருவாசகம் பாடி இருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது.மூவரின் காலம் 6,7,8,ம் நூற்றாண்டுகள். இதனை அடுத்த 9ம் நூற்றாண்டே மாணிக்கவாசகர் காலம் என்பது இதனால் புலப்படுகின்றது.

6. தூ து உலா, மடல், பிள்ளைத்தமிழ் போன்ற பிரபந்த வகைகளைச் சார்ந்த அகத்துறைப் பாடல்களைப் பாடி இருப்பதால் மாணிக்க வாசகர் காலம் கி.பி. 9ம் நூற்றாண்டே என்பது. தெளிவாகிறது", என்று தமது கருத்துக்கு அரண் செய்யும் வகையில், சான்றாதாரங்களைத் திரட்டிக் கூறி, தமது கருத்தின் வன்மையினை உறுதி செய்வார். இலக்கியங்களில் அவருக்கிருந்த பரந்துபட்ட அறிவுத்திறன் இதன் மூலம் வெளிப்படுகின்றது.



# தலைவர் பார்த்த பாலர் நாடகம்!

தூத்துக்குடி **முத்து**



அப்போது நான் தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்ததாக நினைவு. பள்ளி விடுமுறை நாட்களில் ஏ.பி.சி.வீ. அவர்கள் இல்லம் இருக்கும் வாடித்தெருவில் விளையாடுவதற்காகக் கூடுவோம். ஒரு நாள் எங்களில் ஒருவன் 'நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு நாடகம் போட்டால் என்ன?' என்றான். பலரும் பல நாடகங்களைச் சொல்ல, முடிவாக 'சாக்ரடீஸ்' நாடகம் போடுவது என்று முடிவாயிற்று. அதற்குக் காரணமும் உண்டு. அந்த நேரத்தில் கலைஞர் திரு. கருணாநிதி அவர்களின் வசனத்தில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்கள் நடித்த 'சாக்ரடீஸ்' என்னும் ஓரங்க நாடகம் பரபரப்பாக பேசப்பட்டு வந்த நேரம். எங்களில் பெரும்பாலோர் சிவாஜி ரசிகர்கள்! எனவே, 'சாக்ரடீஸ்' நாடகத்தையே போடுவது என்று முடிவு! நாடகக் கலைஞர்களாகிய நாங்கள் எல்லோருமே 15 வயதிற்கும் குறைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

நாடகத்திற்காக, நாடகவடிவிலான சாக்ரடீஸ் வாழ்க்கை வரலாற்றைத் தேடி எடுத்து விட்டோம். நாடக இயக்குனர் ஏ.பி.சி.வீ. பரமசிவன் அவர்கள். (இவர் மட்டுமே எங்களில் வயதில் மூத்தவர். பின்னாளில் தூத்துக்குடி நகரசபைத் துணைத்தலைவரானார்.) சாக்ரடீஸாக நடித்தவர் திரு.ஏ.பி.சி.வீ.வேலாயுதம் அவர்கள். (சென்னையில் மிகப் பிரபலமான கண் மருத்துவராக இருந்தார்). சாக்ரடீஸ் மனைவியாக நடித்தவன் வேறு ஒரு பையன்! நானும், இன்னும் சிலரும் சாக்ரடீஸின் பிரதம சிஷ்யர்கள்!

நாடகம் தயாரித்து, ஒத்திகையெல்லாம் பார்த்து முடித்து, மேடை ஏற்ற தயார் நிலை! நாடக மேடையும் திரு.ஏ.பி.சி.வீ. அவர்களின் இல்லத் தாழ்வாரம்தான். (அவர்கள் நாளும் நடைபயிற்சி மேற்கொள்ளும் அதே தாழ்வாரம்!) நாடகம் அரங்கேற்றத்திற்கு நாள் குறிக்கும் முன் 'தலைவர்' ஏ.பி.சி.வீரபாகு ஐயா அவர்களும் நாடகம் பார்க்க வந்தால் நன்றாக இருக்குமே என்ற ஆசை எங்கள் எல்லோருக்கும். கல்லூரிப்பணி, கட்சிப்பணி, வங்கியின் வளர்ச்சிப்பணி, கூட்டுறவுத்துறைப்பணி என்று அவர்கள் மிகமிக பிஸியாக இருந்த நேரம். இருந்தும், நண்பர்கள் அவர்களிடம் ஒப்புதல் வாங்கி அரங்கேற்ற நாளும் குறித்துவிட்டார்கள்! ஆச்சர்யம்!

அரங்கேற்றத்தன்று நாடகம் ஆரம்பிக்க ஒரு நிமிடம் இருக்கும்போது, அரங்கத்திற்கு வந்த தலைவர் அவர்கள், எதிரே 'சேர்' போட்டு உட்கார்ந்து முழு நாடகத்தையும் பார்த்தார்கள். தலைவரே நாடகம் பார்க்க வந்துவிட்டதால், பக்கத்து வீடுகளில் இருந்தெல்லாம் சிறுவர், சிறுமிகளும், பெண்களும், தாய்மார்களும் வந்துவிட்டார்கள். அரங்கம் நிரம்பிய கூட்டம்! நாங்களும் மிகமிக கவனமாக நடித்தோம். நாங்கள் எதிர்பார்த்ததைவிடவும் நாடகம் சிறப்பாக அமைந்துவிட்டது என்பது நாடகம் முடிந்தவுடன் கிடைத்த கைத்தட்டல்களில் இருந்தே புரிந்து கொண்டோம்!

தலைவர் அவர்களும் சேரில் இருந்து எழுந்தவாறே எல்லா 'நாடகக் கலைஞர்களையும்' ஒட்டு மொத்தமாகப் பார்த்து 'வெரிகுட்' என்று சொன்னவுடன் எங்களுக்குத் தலைகால் புரியாத சந்தோஷம்! அந்த நாடகம் அரங்கேற்றத்தோடேயே நின்றுவிட்டதுதான் சோகம்! தமிழக மக்களுக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் போலும்!

தலைவர் அவர்களுக்கு நாடகம், சினிமா என்று பார்க்கும் பழக்கமோ, ஆர்வமோ கிடையாது. 'ஏதோ சிறுவர்கள் நாடகம் போடுகிறார்கள்' என்று அலட்சியப்படுத்தாமல், ஈகோ பார்க்காமல் முழுநாடகத்தையும் அமர்ந்திருந்து பார்த்தது மட்டுமல்லாமல், பாராட்டி ஊக்கப்படுத்தியதையும் இன்று நினைத்தால் கூட ஆச்சர்யமாக இருக்கிறது.





# ஒளியேற்றிய மாமேதை

அன்பு, அறிவு, அறம் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட வ.உ.சி. கல்லூரியில் முதலாம் ஆண்டு ஆரம்பித்த பொழுது சொல்லின் செல்வர் பேராசிரியர் அ.சீனிவாசராகவன் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்று தியாகசீலர் குலபதி அய்யா அவர்கள் காரியதரிசியாக இணைந்து பணியாற்றினார்கள் என்பது நினைவு கூறத்தக்கது.

அப்பொழுது கல்லூரியில் சேர்க்கப்பட்ட சுமார் 200 மாணவர்களில் அடியேனும் ஒருவன் என்று எண்ணும் பொழுது மனமகிழ்ச்சி அடைகிறேன். அது போது நிகழ்ந்த சில நிகழ்வுகளைப் பதிவு செய்வது சாலச்சிறந்ததாகும்.

கல்லூரி ஆரம்ப நாளில் ஏழை எளிய மாணவர்கள் அனைவருக்கும் கல்வி உதவித் தொகை கொடுத்து ஊக்கப்படுத்தினார்கள். அன்றைய நாளில் மதிய உணவு உண்ணும் பொழுது குடிதண்ணீருக்காக இராஜாஜி பூங்கா செல்ல வேண்டும். இதை அறிந்த குலபதி அய்யா அவர்கள் ஒரு வாரத்துக்குள் குடி தண்ணீர் குழாய் அமைத்துக் கொடுத்தார்கள். அது போன்று சிற்றுண்டியும் கிடைக்க ஏற்பாடு செய்தார்கள். மேலும் இலக்கிய மன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு தேசிய உணர்வு வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு அறிவுரை கூறுவார்கள். தேசிய மாணவர் படை அமைத்து மாணவர்களுக்கு வழிகாட்டியாய் இருந்தார்கள். உடல் நலம் பேண மாணவர்கள் விளையாட்டிலும், உடற்பயிற்சியிலும் கலந்து கொள்ள ஊக்கப்படுத்தினார்கள்.

குலபதி அய்யா அவர்களுடைய அரசியல் தூய்மை, நேர்மை, வாய்மை, கண்ணியம் எனப் போற்றும் வகையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அன்று அரசியல் மேடையில் உரையாற்றும் பலகட்சித் தலைவர்களான திரு. M.S. சிவசாமி (தி.மு.க), திரு. S.A.முருகானந்தம் (கம்யூனிஸ்ட் கட்சி), திரு. M. மரியதாஸ் (சோஷலிஸ்ட் கட்சி) அவர்களுடன் நேரடியான தொடர்பு கொண்டவராய் அய்யா அவர்கள் வாழ்ந்து, மேடை நாகரீகம் காப்பாற்றியவர். எதிர்க்கட்சியினரையும் பாராட்டும் நற்பண்பாளர்.

குலபதி அய்யா அவர்களிடம் நான் கண்ட மேலான குணம் கூட்டுறவு தத்துவம் பற்றியும், உழைப்பின் உயர்வு பற்றியும் உரை நிகழ்த்தும் தத்துவப் பேராசிரியராய் விளங்கியவர் என்பது தான். அவர்களுடைய ஆன்மீக ஈடுபாடு போற்றுதலுக்குரியது. நற்குணம், நற்பண்பு, நற்சிந்தனை உடையவராய் விளங்கினார்கள். அரிய கருத்துக்களை வழங்கும் சிந்தனையாளர்.

1976ல் தூத்துக்குடி நகர்மன்றம் கலைக்கப்பட்டது. அன்று நிர்வாகத்தில் தி.மு.க இருந்தது. நகராட்சித்தலைவர், உறுப்பினர்களுக்குப் பிரிவு உபச்சார விழாவில் தலைமை தாங்கிய குலபதி அவர்கள் அனைத்து நிர்வாகிகளும் திறமையானவர்கள் என்று பாராட்டியதோடு, அடுத்த நகர் மன்றத் தேர்தல் நடைபெறும் வரை இப்போதைய உறுப்பினர்கள் தான் மாமன்ற உறுப்பினர்கள் என்று குறிப்பிட்டார்கள். இது அவர்களுடைய பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

மேலும் மனித வாழ்வின் உண்மையான வளர்ச்சிக்குக் கூட்டுறவும், உழைப்பும் வேண்டும் எனக் குறிப்பிடுவார். சுரண்டுவோரும், சுரண்டப்படுவோரும் இல்லாத சாதி சமய பாகுபாடு அற்ற - ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைய வேண்டும் என மேடையில் முழங்குவார். வாழ்நாள் முழுவதும் அந்நெறிமுறைகளைக் கடைபிடித்துத் தேசீயத் தலைவரானார்.

பாரத தேசத்தின் தென் கோடியில் ஏழை எளிய மாணவ மாணவியர்க்கு கல்வி நிறுவனங்கள் நிறுவி அவர்களுடைய வாழ்வில் 'ஒளியேற்றிய மாமேதை' என விளங்கிய ஒப்புயர்வற்ற குலபதி அவர்களின் புகழ் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

**S.R. சௌந்திரபாண்டியன்**

(கல்லூரி ஆரம்பகால மாணவர்களில் ஒருவர்)



# திருமுறைச் செல்வர்

**மறை. திருநாவுக்கரசு**

காலை ஆறரை மணி. பெருந்தகை ஏ.பி.சி.வீ.யின் மாளிகையில் புகுந்தேன். முன் கூடத்தில், இனிமையாக எடுப்பான குரலில் திருமுறைப் பாடல்களைப் பண்ணிசையுடன் பாடுவதைக் கேட்டு என்னை மறந்தேன். முதலிற் சம்பந்தரின் தேவாரப்பாடல்கள் பல. என்னால் நிற்க முடியவில்லை. அங்கிருந்த இருக்கையிலமர்ந்து கொண்டேன். அடுத்து நாவரசரின் பக்தி கனிந்த திருவிருத்தங்கள், திருத்தாண்டகங்கள் பல. கண்களை மூடிக்கொண்டேன். நானே சிவ பூசை செய்வது போல்-பாடுவதுபோல் உணர்வு கொண்டேன். தொடர்ந்து சுந்தரர் தேவாரப் பாடல்கள் சில, மனமுருகினேன். பின்பு திருவாசகத்தில் பலப்பல பாடல்கள். அவற்றைத் தொடர்ந்து திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணப் பாடல்கள், நாயன்மார் வாழ்த்துக்கள், முருகன், திருமால் புகழ்ப் பாடல்கள், மணியோசை, வழிபாடு முடிந்தது. நானே வழிபாடுசெய்து மனமுருகிய நிலையிலிருந்தேன். பூசையறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார், திருநீறு அணிந்து சந்தனப் பொட்டுடன் பொலிவான எடுப்பான தோற்றத்துடன் நம் பெருந்தகையர்! ஏ.பி.சி. நகை முகங்கண்டு எழுந்து நின்றேன். ''வாருங்கள் வாருங்கள் எப்போது வந்தீர்கள்'' என்று பணிவன்புடன் கேட்டார்.

ஒருமணி நேரமாகின்றது. உங்களுடன் யானும் தொடர்ந்து சிவபூசை செய்தேன், பாடினேன். ஓதுவார்கள் கூட இவ்வளவு அழகாகத் திருமுறைகளை ஓத முடியாது. அருமையான குரல்; இனிமையாகப் பொருள் விளங்கப் பாடிய திறம் என்னைப் பெரிதும் மகிழ்வித்தது என்றேன் எல்லாம் தங்கள் ஆசீர்வாதந்தான் என்றார்கள். நான் அவர்கள் தம் வ.உ.சி. கல்லூரியின் ஊழியனாக இருந்தவன். அதையவர்கள் தம் பத்திமை மிகுதியால் வழக்கம்போல் மறந்து எனக்குச் சிற்றுண்டியூட்டினார்கள். தம் திருக்கையால் உண்டியில் நெய் வார்த்து மகிழ்ந்தார்கள். சேக்கிழார் விழாவுக்கும் என் நூற்பதிப்புக்கும் (பெரியபுராண ஆய்வுரைத் தொகுதிகள்) நன்கொடைகளை மனமுவந்தளித்தார்கள். அன்று மாலையே, என்னை வ.உ.சி. மகளிர் கல்லூரியில் 'சைவ மாதர்' என்று பேசச் செய்து உடனிருந்து சிறப்பித்தார்கள், மகிழ்ந்தார்கள்.

ஆயிரம் ஆண்டுகட்குமுன், இராசராசச்சோழன்-மாமன்னன், தென்கிழக்கு ஆசியா முழுவதும் வென்றான். தஞ்சாவூரில் சிவபெருமானுக்குப் பெருங் கோயிலெடுத்தான். மறைந்திருந்த சைவத் திருமுறைகளை (தேவார, திருவாசகங்கள்) வெளியுலகிற்குக் கொணர்ந்தான். நாற்பத்தெட்டு ஓதுவார்களை அழைத்து அவற்றைப் பாடச் செய்தான். இவற்றால், திருமுறைகண்ட ராசராசன் சிவபாதசேகரன், அருண்மொழித் தேவன் என்னும் பட்டங்களைப் பெற்றான். அவனே மாமன்னன்.

ஆனால், நம் ஏ.பி.சி.யோ பொருட்துறையில் இயல்பான குடும்பத்தில் தோன்றி, தம் பெயர் தள்ளி வ.உ.சி. யின் பெயரால் கல்வி நிலையங்கள் பல கண்டார். செயற்கரிய செயல் பல புரிந்து பெரியரானார். இராசராசன் திருமுறைகண்டான்; நம் தலைவரோ திருமுறைகளை உளமுருக நூற்றுக்கணக்கில் ஓதிச் சிவநெறி பரப்புகின்றார். எடுப்பான பெருந்தகை தோற்றத்தாரரான இவராற்றும் அரும் பெருஞ்சொல்களும் , பத்திமையும், கொடைமடமுங் காண தொறும் எனக்கு இப்பெருமகனார் இருபதாம் நூற்றாண்டின் இராசராசச் சோழராகவே காட்சியளிக்கிறார்.

- ஏ.பி.சி.வீரபாகு மணிவிழா மலரிலிருந்து......





**தமிழ்ப் பண்பாட்டு உருவம்**

''நண்பர் வீரபாகு அவர்கள், ஆளுங் கட்சியில் இருந்தபொழுது, நான் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த பொழுது, கிட்டத்தட்ட நான் அமர்ந்திருந்த இரண்டொரு இருக்கைகளுக்கு அப்பால் அவர்கள் அமர்ந்திருப்பார்கள்.

அவர்கள் அங்கே அப்பொழுது ஆளுங்கட்சிச் சார்பில் எதிர்க்கட்சியைத் தாக்கி பேசுகின்ற அந்த வார்த்தைகளை எல்லாம் நான் அங்கிருந்து கேட்டிருக்கிறேன். கட்சி மாற்சரியங்கள், கட்சி வேறுபாடுகள் இவைகளெல்லாம் தனிப்பட்ட தாக்குதலாக இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தமிழன் கட்டிக் காக்கின்ற பண்பாட்டின் உருவங்களாகத் திகழ்கின்ற ஒரு சிலரில் நண்பர் வீரபாகு அவர்களும் ஒருவர் என்பதை நாம் மறந்திட இயலாது''.

**(ஏ.பி.சி.மகாலெட்சுமி மகளிர் கல்லூரிப் புதிய கட்டிடத் திறப்பு விழாவில், அன்றைய தமிழக முதலமைச்சர், டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கூறியது.)**

# திருமுறைப் பாடல்களில் கொண்ட ஈடுபாடு

சிவநெறிச் செல்வர் வீரபாகு அவர்கள், திருமுறைப் பாடல்களின் ஆழ்ந்த உட்பொருளை உணர்ந்து, அதனை வாழ்க்கையில் செயலுக்கும் கொண்டு வந்தார். இதனை அவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பல எடுத்துக்காட்டுகின்றன:

**'காயமே கோயிலாக கடிமன மடிமையாக**
**வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக**
**நேயமே நெய்யும் பாலாநிறைய நீரமைய வாட்டி**
**பூசனை யீசனார்க்கு போற்றிவிக் காட்டினோமே**

அப்.5ம் திருமுறை. பொது.பா.739.

என்ற பாடலில் இறைவனுக்கு குடமுழுக்குச் செய்யும் இனிய நிகழ்ச்சியினைக் கண்டார், சிவநெறிச் செல்வர் திரு.வீரபாகு அவர்கள். ஆதலின் கோயில் கும்பாபிஷேக அழைப்பிதழ்களில் இப்பாடலும் இடம்பெற வேண்டும், என்று விரும்பினார். அவ்விருப்பத்தினை கோயில் கும்பாபிஷேகத்திற்காக தன்னை அணுகுபவர்களிடம் வலியுறுத்தி வந்தார். அன்னார் திருமுறைப் பாடல்களில் கொண்ட பற்றினை இந்நிகழ்ச்சி வெளிப்படுத்துகின்றது.

திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாடுவது மட்டுமல்ல, அந்நெறியில் வாழ்ந்தும் காட்டினார், அறநெறி அண்ணல் திரு. வீரபாகு! இதற்கு அவர் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றினைச் சான்றாகக் கூறலாம்.

வீரபாகு அவர்களின் வளர்ப்புத்தாயார் மகாலட்சுமியம்மையாரின் கண்பார்வை குன்றியிருந்தது. மருத்துவர்களும்கூட குணப்படுத்த முடியாதென்றே கூறினர். ஆனால், அன்னாரின்தெய்வ நம்பிக்கையும், திருமுறைப் பாடல்களில் அவர்கண்ட உண்மையும் வீண்போகவில்லை.

"மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கு அடியார் தங்களல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே

சுந்.7ம் திருமுறை.பா.964.

என்ற பாடலைத் தொடந்து பாராயணம் செய்யுமாறு கூறினார்.அவ்வம்மையாரும் தம் மைந்தனின் விருப்பப்படி நம்பிக்கையோடு இப்பாடலைக் கூறிவர, கண்பார்வையும் படிப்படியாகத் தெரிய ஆரம்பித்தது.



# சிறந்த ஹிந்தி சேவகர்

## வி. முத்து

நம்முடைய இந்தியா புண்ணிய பூமி. எண்ணிக்கையற்ற மதக்குருக்கள் மற்றும் ரிஷிமுனிவர்களைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. இந்த சாதுக்கள், முனிவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் தலைவர்கள் மனித சமுதாயத்தை, சரியான பாதை மீது கொண்டுவர, நல்ல மத சான்றோர்களை உருவாக்கி வைப்பதில் கடின உழைப்பு செய்திருக்கிறார்கள். அவர்களுக்குள் எத்தனை தைரியம், சாதனை, உழைப்பு, சேவை உணர்வு மற்றும் தியாகம் நிறைந்திருக்கிறது. இப்படிப்பட்ட மகத்துவ மனிதர்களில் திரு. ஏ.பி.சி. வீரபாகு அவர்களும் ஒருவர். இவர்களுடைய பிறப்பு தூத்துக்குடி நகரினுடைய ஒரு பெயர்பெற்ற குடும்பத்தில் 05.05.1915-ல் நடந்தது. ஏ.பி.சி. வீரபாகு ஒரு சிறந்த மனிதராக இருந்தார்கள். அவர்கள் வாழ்நாள் முழுவதும் மகாத்மா காந்திஜி கொள்கைகளை கடைபிடிப்பதில் உறுதியாக இருந்தார்கள். கூடவே தன்னுடைய நிறுவனங்களில் கூட காந்திஜியின் கொள்கைகளை அமுல் செய்தார்.

தூத்துக்குடி நகரம் முத்துக்காக மிகவும் புகழ்பெற்ற நகரம். மேலும் தேசபக்தி மற்றும் தேச சேவைக்காக கூட இந்த நகரம் புகழ்பெற்றது. இந்த நகரம் பெரிய - பெரிய தேச பக்தர்கள் காந்தியவாதிகள், சமுதாய சீர்திருத்தவாதிகள் மற்றும் இலக்கியவாதிகளை நம்முடைய தேசத்திற்காக கொடுத்திருக்கிறது. இவர்களில் திரு. வீரபாகுஜீயும் ஒருவர்.

பெண்கள் கல்வி அறிவு பெற வேண்டும். அதிலும் குறிப்பாகக் கிராமப்புற ஏழைப் பெண்கள் கல்வியறிவு பெற்றிட வேண்டும் என்ற அவருடைய தொலைநோக்குப் பார்வையின் காரணமாக 1973ம் ஆண்டு தொடங்கப்பட்டது மகளிர் கல்லூரி.

கல்லூரி தொடங்கிய நேரத்தில் மகளிர் கல்லூரி என்றே இது அழைக்கப்பட்டது. அப்போது, யார் ஒரு இலட்சம் ரூபாய் நிதி தருகிறார்களோ அவர்கள் சொல்லும்பெயரில் கல்லூரி இயங்கும். அக்குடும்பத்தினர் நிரந்தரமாக நிர்வாகக் குழுவில் அங்கம் வகிப்பார்கள் என்று அறிவித்தார் வீரபாகு.

அவரது வேண்டுகோளை யாரும் ஏற்காத நிலையில் தம் குடும்பத்தார் கடனாகக் கொடுத்த நிதியிலிருந்து கட்டிடங்களைக் கட்டி முடித்தார். பின்னர் அந்நிதியினை குடும்பத்தார்களே தானமாக அளிக்க முன்வந்தபோது, இவருடைய வளர்ப்புத் தாயார் திருமதி.ஏ.பி.சி. மகாலட்சுமி அம்மாளின் பெயரினை மகளிர் கல்லூரிக்கு சூட்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 1975 - 76 ல் அப்பெயர் மகளிர் கல்லூரிக்குச் சூட்டப்பட்டது. இங்கே மாணவர்களுக்குக் குறைந்தசெலவில் தரமான உணவு அளிக்க சலுகைக் கட்டண விடுதியைத் தொடங்கினார்.

இவரது கல்லூரிகளில் மகாகவி பாரதியின் சர்வமத பிரார்த்தனைப் பாடலான ‘‘ஆத்திச்சூடி இளம்பிறை அணிந்து’’, என்று தொடங்கும் பாடல்தான் இறைவணக்கப் பாடலாக இன்றுவரை ஒலித்து வருகிறது.



தூத்துக்குடியில் சாயர்புரம் போப் கல்லூரி மற்றும் அமரர் விவேகம் குருசாமியின் சீரிய முயற்சியால் தொடங்கபட்ட சக்தி விநாயகர் இந்து வித்யாலயா போன்ற பல கல்விநிறுவனங்கள் உருவாகுவதற்கு வீரபாகு உறுதுணையாக இருந்தார்.

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். காலத்தில் பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு கோரி ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். இவரது கல்லூரி ஆசிரியைகள் சிலர் அப்போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்கள்.சிறை சென்ற கர்ப்பிணி ஆசிரியைகளை பாளையங்கோட்டை சிறையிலிருந்து வேலூர் மத்திய சிறைச்சாலைக்கு மாற்றப்படுகிறார்கள் என்ற செய்தி கேள்விப்பட்டவுடன் தமது சொந்த ஜாமீனில் அவர்களை வெளிக்கொண்டு வரச் செய்தார் வீரபாகு. ஆசிரியர்களை தம் குடும்ப உறுப்பினராக பாவித்ததற்கு இதுவே சான்றாகும்.

தூத்துக்குடியில் இன்று இயங்கி வரும் அரசு தொழில் நுட்பக்கல்லூரி வருவதற்கு முன்னர் வ.உ.சி. கல்லூரி வளாகத்தில் அக்கல்லூரிக்கு இடம் தந்து மூன்று ஆண்டுகள் அங்கே நடத்தப்பட உதவியதோடு பின்னர் அரசு இடத்துக்கு நகர்ந்து அங்கும் வெற்றிகரமாக இயங்குவதற்கு உறுதுணையாக இருந்தவர்.

இன்று அமரர் ஏ.பி.சி. வீரபாகுவின் வழித்தோன்றல்கள் வ.உ.சி. கல்விக் கழக வளாகத்தில் அரசுககு 25 ஏக்கர் நிலம் ஒதுக்கி வ.உ.சி. அரசினர் பொறியியல் கல்லூரி வருவதற்கு உறுதுணையாக இருந்துள்ளனர். அமரர் ஏ.பி.சி. வீரபாகு அவர்களின் லட்சியத்தை இன்றுவரை இக்கல்விக் கழகம் கடைபிடித்து வருவதற்கு இதுவே சான்றாகும்.

கூட்டுறவுத் துறையில், இந்தியா விடுதலை அடைந்த வருடத்திலிருந்து தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் என்பதற்கு சிதம்பரநகரும், மீனவர்களுக்காக உருவாக்கப்பட்ட லயன்ஸ் டவுனும், தொழில் வளர்ச்சிக்காக கோரம்பள்ளத்தில் உருவாக்கப்பட்ட இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டும் சாட்சிகளாக அமைந்துள்ளன. மேலும் பொது விநியோக முறையின் மூலம் மக்களுக்கு உதவும் பொருட்டு நெல்லை மாவட்டக் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் இணைந்து அவர் ஆற்றிய தொண்டு இன்றளவும் பேசப்பட்டு வருகிறது.

எத்தனையோ இடர்ப்பாடுகளை எதிர்நோக்கிய போதிலும் குலபதி ஏ.பி.சி.வீரபாகு அமைத்திட்ட வழித்தடத்தில் இன்றுவரை தடம் புரளாமல் கல்வி நிறுவனங்கள் தம் செயல்பாட்டை தொடர்கின்றன.

சாதி, மதம், இன வேறுபாடின்றி அனைத்துப் பிரிவைச் சார்ந்தவர்களையும் பணியில் அமர்த்தினார்.

ஒவ்வொரு சாதியிலும் ஒவ்வொரு நபராவது நம் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றிருத்தல் வேண்டும். முஸ்லீம், தாழ்த்தப்பட்டோர் போன்றோர்களும் ஆசிரியர்களாக நம் கல்லூரிக்கு வருதல் வேண்டும் என்பார்.

நாட்டு விடுதலை வீரர் பெயரில் இயங்கும் இக்கல்லூரி இன்றளவிலும் இந்நெறியை கட்டிக் காத்து வருகின்றது. பாரதியின் ஆத்திச்சூடியை இக்கல்விக்கழகத்துக் கல்லூரிகளில் இறைவணக்கப் பாடலாக அமைத்துள்ளமை அவரின் சமயப்பொறைக்குச் சான்று பகர்வதாகவே அமைந்துள்ளது.

(கல்கி இதழ் 29.3.2015)





# குலபதியும் கோமதி குடிகொண்ட பதியும்

சொ. வீரபாகு, சங்கரன்கோவில்



தமிழையும், சைவத்தையும் இரு கண்ணாகப் பாவிக்கும் திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் நடைபெற்ற மூன்றாவது உலக சைவத் தமிழ் மாநாடு சங்கரன்கோவிலில் 25.07.1981 ல் நடைபெற்றது. திருவாவடுதுறை ஆதீன இளவரசு ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சுவாமிகள் முன்னிலை வகித்தார். கல்வித்தந்தை குலபதி திரு.ஏ.பி.சி.வீரபாகு அவர்கள் தொடக்கவுரை ஆற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார்கள்.

பாரதப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி இந்தியத் துணைக் கண்டத்துக்கு அறிமுகம் செய்து வைத்த இருபது அம்சத் திட்டத்தின்படி கிராமதான டிரஸ்டு மற்றும் கனரா வங்கி இணைந்து கடன் வழங்கும் விழா நடைபெற்றது. அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சுந்தரம், I.A.S. தலைமையில் குலபதி ஐயா ஏ.பி.சி வீரபாகு அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார். அந்நிகழ்வில் நான் வரவேற்புரை ஆற்றினேன்.

கல்வித் தந்தை. ஏ.பி.சி. வீரபாகு ஐயா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்ட ஏ.பி.சி வீரபாகு ஆங்கிலப்பள்ளி சங்கரன்கோவில் நகரில் இன்றும் வெற்றி நடைபோடுகிறது.

விவசாயிகள் வாழ்வு மேம்பட குலபதி ஐயா அவர்களின் முயற்சியில் மேயர் டிரஸ்ட் மூலம் ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டது. பால்பண்ணை அமைக்கப்பட்டது.

அன்னை கோமதியின் ஆடித் தபசுக் கோலம் காண ஆண்டுதோறும் சங்கரன்கோவிலுக்கு வருகை புரிவார். அவரை வரவேற்று மகிழ்வேன்.

# பெண்களின் உரிமை

சமுதாயத்தில் தனது உரிமைகளை பெண்கள் அன்றே நிலைநாட்டினர் என்பதற்கு, பக்தி இலக்கியத்தில் இடம்பெறும் மகளிரை சான்று காட்டி கோர்வையாக கருத்துக்களை எடுத்துரைப்பார் ஏ.பி.சி.வீ. அவர்கள்,

'சுந்தரமூர்த்தி நாயனார் புராணத்தில், சங்கிலியார் தன் திருமணத்தில் தந்தை, தாயினை தலையிடக்கூடாது என்று கூறி, பெற்றோர் உத்தரவின்றி தனது உரிமையை நிலைநாட்டி தானே மணமுடித்துக் கொள்கிறார். காரைக்காலம்மையார் தன் கணவனின் மருள்நெறி வாழ்க்கையினைக் கண்டு, அவ்வாழ்வை விடுத்து பேய்வடிவு பெற்று, இறைவனை அடையும் உயர்ந்த வாழ்வைப் பெற்றார். திலகவதியார் மனைத்தவம் மேற்கொண்டு திருமணம் முடியாமல் தம்பியரைக் காப்பதற்காக, தவநிலை பூண்டதும் பெண்ணின் தனி உரிமையினைக் குறிப்பதாகும். மங்கையர்க்கரசியார் தன் கணவனாகிய பாண்டிய மன்னன் சமணமதம் புகுந்தும், தான் சைவசமயத்தில் உறுதியோடு நின்றது அவரின் மன உறுதினையே காட்டுகின்றது',

என்று பெண்ணின் பெருமையினைக் கூறும் கருத்துக்கள் அனைத்தையும் கோர்வையாக நிரல்பட உரைப்பார்.



# புகழுக்கு மயங்காத பண்பாளர்

பேராசிரியர். **எஸ்.முருகேசன்** ஸ்ரீவைகுண்டம் (சென்னை)

**நா**மோ ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டவர்கள். ஆகவே பெருவாரியான மக்களின் அபிப்பிராயமே நியாயம். அவர்களை திருப்தி படுத்துவதே தர்மம். இதில் கிடைக்கிற லாபமே புகழ்....

புகழ் என்கிற சொல்கூட இன்று தனது பெருமையை இழந்து பிரபலம், பப்ளிஸிட்டி, பாப்புலாரிட்டி, அதாவது சீப் பாப்புலாரிட்டி என்று திரிந்து விட்டது.

எது பிரபலமானதோ அதுவே தகுதி வாய்ந்தது. இப்படி ஒரு பார்வை நம்மிடம் வேகமாக பரவிக் கொண்டிருக்கிறது. நமது இலக்கிய உலகில் கூட இப்போக்கு நிலவுகிறது என்று ஓர் அந்நியநாட்டுத் தமிழறிஞர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலைமையில் பொது வாழ்வுக்கு வருபவர்கள், இப்பிரபலத்தில் மயங்குவது இயல்புதான். இதற்கு பலியாகாத சான்றோர்களின் பட்டியல் ஒன்றினைப் போட்டு பாருங்கள். அதில் அமரர். ஏ.பி.சி.வீரபாகு அவர்களை நீங்கள் தவிர்க்க முடியாது.

எந்தப் பதவியை அவர் வகித்தாலும் அதில் ஒரு கம்பீரத்தை நிலைநாட்டுவார். எந்த மேடையில் ஏறினாலும் அவரது பேச்சில் ஒரு தனித்துவம் தொனிக்கும். எந்தக்கருத்தை முழங்கினாலும் அது ஒரு புதுக்குரலாக ஒலிக்கும்.

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நெல்லையில் ஒரு கல்லூரி விழா. தமிழ் மக்களால் எளிதில் ஏற்கமுடியாத மொழிக்கொள்கையை அவர் வலியுறுத்திப் பேசிக் கொண்டிருந்தார். பரிசு வாங்கிய ஒரு மாணவனாக அம்மேடை அருகில் அமர்ந்திருந்த எனக்கு அவரது பேச்சு வியப்பைத் தந்தது. தென்னிந்திய இந்திப் பிரசார சபையில் அவர் பொறுப்பு ஏற்றுக் கொண்டதே, தமிழக அரசியலைப் பொறுத்த வரையில் பாப்புலாரிட்டிக்கு வேட்டு வைக்கும் செயல் அல்லவா! அவர் கலந்து கொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சியும் இப்பிரச்சார சபைக் கூட்டம்தான்.

கதர் வேஷ்டி அரைக்கிசைத்து, அரைக்கைக் கதர் சட்டை அணிந்து நாலரை முழத் துண்டை இரண்டாகப் பிரித்து, பிடரி வழியாக இரு தோள்களிலும் பரப்பி, பல்லாயிரம் மக்கள் கூட்டத்தின் எதிரே எழுந்து நின்று பேசத் தொடங்கு முன் கூட்டத்தை நோட்டமிடும் அந்த எடுப்பான பார்வை......

திரு.தங்கப்பன் என்னும் ஓர் இந்தி பாடசாலை முதல்வர் வரைந்துள்ள இத்தோற்றத்தை நம்மில் பலர் மறந்து விட முடியாது. தனது அலங்காரமற்ற, ஆனால் அழுத்தமான பேச்சால் ஆழமான எண்ணங்களை பரப்பி ஆக்கப்பூர்வமான பணிகளை ஊக்குவித்து வந்தார். தனது சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடமிருந்து கண்டனம் வருமா, கைத்தட்டு வருமா என்று கணக்கிட்டு பார்க்கமாட்டார். சட்டசபையானாலும், தனது கட்சி கூட்டமானாலும், காந்தியவாதிகள், விவசாயிகள், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள் கருத்தரங்குகளானாலும் தனக்கென ஒரு பாணியைக் கடைபிடித்தார். பெருவாரியான மக்களின் கருத்தை தனக்கு சரியில்லை என்று பட்டால் மறுத்துப் பேச எப்போதும் தயங்கியதில்லை.

அகில இந்திய அளவில் பெரிய பிரமுகர்களுடன் பழகிய அனுபவம் அவருக்கு உண்டு. அனைத்துக் கட்சிகளிலும் அவருக்கு நண்பர்கள் இருந்தனர். எவருடைய பாராட்டு விழாவானாலும் அதில் துதிபாடிடமாட்டார். ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி முதலியோரிடம் பெரும் மதிப்பு வைத்திருந்தார். அவர்களை எதிர்த்த ராஜாஜியிடமும் அதே





மரியாதையைச் செலுத்தி வந்தார். காமராசர், பக்தவத்சலம் மற்றும் மோகன் குமாரமங்கலம் முதலானவர்களுடன் அவர் நெருங்கிப் பழகியதிலும் தனது ஆளுமையின் தனித்தன்மையை வெளிப்படுத்தினார். முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமனும்,முன்னாள் மராட்டிய ஆளுநர் சி.சுப்பிரமணியமும் அவருக்கு மிகவும் நெருக்கமானவர்கள். தனது மரியாதையை அவர் ஒரு வழிபாடாக்கியதில்லை. தனது விமர்சனத்தை ஒரு வசையாக்கினதுமில்லை. ஜனநாயகப் பண்பாட்டிற்கு ஏற்றதோர் முன்மாதிரியாக அவரது அரசியல் வாழ்வு திகழ்ந்தது.

ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டம். எல்லோரும் எதிபார்த்துக் கொண்டிருந்த பெரிய தலைவரின் வருகை தாமதமாகிக் கொண்டிருந்தது. வீரபாகு எழுந்தார். தலைவர் வருவதற்கு இன்னும் நேரமாகும். அவர் வருகிற வரைக்கும் நமது நாட்டின் பொருளாதார நிலைமையை நான் சில வளர்ச்சி அடைந்த நாடுகளின் பொருளாதார நடை முறைகளுடன் ஒப்பிட்டு பேசலாம் என நினைக்கிறேன் என்று அவர் அறிவித்ததும் ஏற்கனவே பொறுமை இழந்து கொண்டிருந்த பெரும்பாலோர் கலைய ஆரம்பித்தனர். சாதாரணமாக ஒரு பொருளியல் மாநாட்டில் பேசுவதற்கான குறிப்புகள் அவரது உரையில் பொதிந்து கிடந்தன. இந்நிகழ்ச்சிக்குப் பல நாட்கள் கழித்து நான் அவரிடம் இது பற்றி பேச நேர்ந்தது. தலைவர் வருகை தாமதமாகும் என்று கூறி கூட்டத்திற்கு வந்தவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து விட்டீர்களே.. என்று கூறினேன்.'' கூட்டத்தைப் பார்த்தேன். பொறுமை இழந்து கொண்டிருந்தாங்க. கொஞ்ச நேரம் வெளியே போகட்டும்னு தான் வேண்டுமென்றே இப்படி அறிவித்தேன்'' என்றார். இந்தப் பதிலை நான் எதிர்பார்க்கவில்லை. அப்போது ஓர் ஆலோசனையை ஒரு வேண்டுகோளை அவர் முன் வைத்தேன். '' நீங்கள் பல கூட்டங்களில் புதிய கருத்துக்களைச் சொல்றீங்க. இவைகள் வருங்காலத்தில் மறைந்து போய் விடலாம். முக்கியமாக, பொருளாதாரம் பற்றிய உங்களது கருத்துக்களை நீங்கள் எழுதி அச்சேற வைத்தாலென்ன?'' என்று சொன்னேன். ''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? எனக்கெல்லாம் உட்கார்ந்து பொறுமையாக எழுத ஓடாது'' என்று சொல்லி சிரித்தார்! அவரது இலக்கிய புலமையை அவரது மேடைப்பேச்சுகளிலிருந்து நாம் ஓரளவிற்குத்தான் தெரிந்திருப்போம். நான் அவரைக் காணச் சென்ற ஒரு சமயத்தில் அவரது பழைய நண்பர் ஒருவர் அவருடன் பேசிவிட்டு கல்லூரியில் அவர்கள் ஒன்றாகப் படித்த ஆங்கில இலக்கியப் பாடங்களைப் பற்றி உரையாட ஆரம்பித்தனர். விடைபெறுவது தாமதமானது. பல ஆங்கில வரிகளை இருவரும் சேர்ந்து சிறுபிள்ளைகள் போல் ஒப்புவித்தது ரசிக்கும் படியாக இருந்தது.

ஒரு பட்டிமன்றம் தொடங்கிக் கொண்டிருந்தது. அதற்கு முன்னதாக வீரபாகுவின் உரை, ''பட்டிமன்றங்களுக்குப் புதிய விஷயங்களை எடுக்கக் கூடாதா? உதாரணமாக நம்முடைய பகுதியில் தொழில் அபிவிருத்திக்கு என்ன செய்யலாம்? பனை மரத்தை எப்படி எல்லாம் நவீன நுட்பத்துடன் பயன்படுத்தலாம்? என்றெல்லாம் விவாதங்கள் நடைபெற வேண்டும்'' என்று பேசினார்.

அவருடைய ரசனை வெறும், பொழுது போக்கை நாடியதில்லை. இலக்கியத்தில் அறநெறியையும், இசையில் ஆன்மீகத்தையும், இயற்கையின் வனப்பில் முன்னேற்றத்தையும் நாடினார். கல்லூரி வளாகத்தில் பூச்செடிகள் வைப்பது பற்றி அவருடன் முதல்வர், எனது பேராசிரியர், அ.சீனிவாசராகவன் விவாதித்தாராம். அப்போது வீரபாகு, '' இதுக்குப் பதில் தென்னைகள் வளர்த்தால் நல்லது. அத்தேங்காய்கள் மூலம் கிடைக்கிற பணத்தில் சில பையன்களைப் படிக்க வைக்கலாம்'', என்று தெரிவித்தாராம். ஆம் அவரது ஆதரவில்



எத்தனையோ ஏழை மாணவர்கள், சாதி, மத, அரசியல் சார்புகளுக்கு அப்பால் அங்கே படித்து முன்னேறியுள்ளனர்.

அது சரி, ஒரு கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று ஏன் அவருக்கு தோன்றியது?

அவருடனேயே ஏடு தொடங்கி படித்து அவரது அந்தரங்க நண்பராக விளங்கிய ஒரு பெரியவரிடம் தான் இதற்கான விடை கிடைத்தது.

''எப்போதுமே அவருக்கு படிப்பு என்றால் பிரியம். சின்ன வயதிலேயே ஏராளமான பாடல்கள் மனப்பாடம் பண்ணினார். படிக்கிற காலத்தில் வெளியே அவரை அதிகமாகப் பார்க்க முடியாது. கெட்டப் பழக்கம்னு எதுவும் கிடையாது. எதிலும் ஒரு அறிவுத்தாகம் உண்டு. அதனால் தான், தானே ஒரு கல்லூரி கட்டி நடத்தணும்னு நினைத்தார்.....''

அவருடைய பாட்டனார், அகில இந்திய காங்கிரஸ் தொடங்கப்பட்ட போதே அவ்வியக்கத்தில் சேர்ந்து கொண்டவர். அதன் இரண்டாவது மாநாட்டில் இங்கிருந்து சென்ற பிரதிநிதி. இப்பாரம்பரிய பெருமையுடனும் பொது வாழ்வில் தான் பெற்ற செல்வாக்குடனும் வீரபாகு தனது பதவிகளையும் புகழையும் மேன்மேலும் உயர்த்தியிருக்கலாம். அவரோ இவைகளுக்காகப் பெரிதும் ஆசைப்பட்டதில்லை. ஆன்மீகமே அவரது தலையாய ஈடுபாடு என்பது பலருக்கும் தெரியாது.

ஆன்மீகம் கூட அட்டகாசமான விளம்பரத்திற்குத் துணை போகிற காலம் இது. வீரபாகு ஆன்மீகத்தை ஒரு வாழ்வுநெறியாக இளம் வயதிலேயே ஏற்றுக் கொண்டவர். ஆன்மீகத்தை வரலாறு, தத்துவம் மற்றும் அவரது வாழ்க்கைப் பயணத்தின் இறுதிக் கட்டத்திலும் அவர் எவ்வளவு ஆர்வம் பொங்க ஆன்மீக எண்ணங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பக்தி, பக்தி என்று பறக்கின்றவர்களில் எத்தனை பேருக்கு இத்தகைய பக்குவம் வாய்க்கும்?

ஒருமுறை ஒரு பெரியாரடியானின் புதுமனை புகுவிழாவிற்குச் சென்றிருந்தேன். நாத்திகர்கள் நிறைந்த கூட்டம் அது. வீரபாகுவின் படமும் திறக்கப்பட்டது. திராவிடக் கழகத் தளபதி வீரமணி பேசிய போது, ''வீரபாகு ஆன்மீகவாதி தான்'' என்று நினைவூட்டி விட்டு ''சிறந்த பண்பாளர்'' என்று ஒரு புகழுரை வழங்கினார்.

எதிரும் புதிருமான இடத்திலிருந்து, யாரும் எதிர்பாராத வகையில் இப்படி இயல்பாக உதிர்ந்த இப்பாராட்டு....ஓ.....எவ்வளவு சத்தியமான வாக்கு!

## ''வ.உ.சி.யும் - ஏ.பி.சி.யும்''

**தெய்வ. முருகன்**

வரலாற்றில் தமக்கென தன்னிகரற்ற சிறப்புடன் திகழ்ந்து, என்றும் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படக் கூடிய புகழை அடைந்தவர்கள் வ.உ.சிதம்பரனாரும் அவரின் அடிச்சுவட்டில் ஆயிரமாயிரம் அறப்பணிகளாற்றிய ஏ.பி.சி.வீரபாகுவும் ஆவார்கள்.

'வஉ.சி'., 'ஏ.பி.சி'., என்ற இரு மூன்று எழுத்துக்களும் இம்மண்ணின் இறுதி மூச்சுள்ள வரையில் ஒலித்துக் கொண்டிருக்கும். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இவ்விரு தேசிய நெஞ்சங்களின் உணர்வை - உழைப்பை - உறுதியை புறக்கணித்து விட்டு தென்னக தேசியவீரர் வரலாற்றை நிறைவாகத் தீட்டி விட முடியாது.



அடிமை இந்தியாவில் பிறந்து-சுதந்திர இந்தியாவை காணாத ஏக்கத்தோடு கண்ணை மூடியவர் வ.உ.சி. அடிமை இந்தியாவில் பிறந்து சுதந்திர இந்தியாவில் வாழ்ந்து, பெற்ற சுதந்திரத்தை பேணத் தெரியாத இளைய தலைமுறையைக் கண்டு ஏக்கப் பெருமூச்சை இறுதி மூச்சோடு கலந்து விட்டவர் ஏ.பி.சி.!

முன்னவரின் ஆவி என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்? என்ற தவிப்புடன் பிரிந்தது. பின்னவரின் ஆவி என்று இந்நாட்டின் இளைய தலைமுறை பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள்? என்ற புலம்பலுடன் பிரிந்தது.

வ.உ.சி அஞ்சா நெஞ்சமுடன் விடுதலைக்காக மறவேள்வியை அமைத்தார். ஏ.பி.சி. தியாகவுணர்வுடன் விடுதலை பெற்ற நாட்டின் மறுமலர்ச்சிக்காக அறவேள்வியை அமைத்தார்.

இருவரும் அரசியல், ஆன்மீகம், இலக்கியம் ஆகிய துறைகளில் எத்திக்கும் புகழ் மணக்கும் ஏற்றமிகு சாதனையைச் செய்தவர்கள். அடுத்தடுத்து தோல்வி வந்த பொழுதும் அதர்மப் பகைச் சூழ்ந்த போதும் தளராத அஞ்சா நெஞ்சமுடையவர்கள் இருவருமே.

இறுதி மூச்சுள்ள வரையில் இம்மியளவும் பிறழாத அவர்களின் தெய்வீக உணர்வும் தியாக வாழ்க்கையும் நினைக்குந்தோறும் வியப்பூட்டுவது!

ஆர்பாட்டம் மிகுந்த அரசியல் வாழ்வில் புலனைந்தை கலங்கச் செய்யும் பொதுப்பணியில் இருவரும் ஈடுப்பட்டிருந்தபொழுதினும் நாள்தோறும் தவறாமல் தேவாரம், திருவாசம் பாடிக் கசிந்துருகிய அவர்களின் பக்தி வாழ்க்கை சைவத் திருமறைகளின் மீது வைத்திருந்த பற்றையும், ஈர்ப்பையும் உணர்த்துகின்றன.

கண்ணனூர் சிறையில் ஆயுள் தண்டனை ஏற்று அடைக்கப்பட்டிருந்த அல்லல் மிகுந்த நேரத்திலும் சிறையில் அங்குமிங்கும் உலாவியவாறே திருமுறைகளைப் பாடி கசிந்துருகுவார் கப்பலோட்டிய தமிழன். ஒரு நாள் சிதம்பரனார் சிறைக்கூடத்தில் வழக்கம்போல் திருவாசகம் பாடிக் கொண்டிருந்த பொழுது, அங்கு வந்தார் சிறை கண்காணிப்பாளர் கடவுளின் இனிய காட்சியில் ஆழ்ந்து தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்த சிதம்பரனார் செவியில் ஜெயில் அதிகாரி கால்மணி நேரமாய் கத்திய சொற்கள் விழவில்லை. அதனால் கடுஞ்சினம் கொண்ட அதிகாரி அன்று முதல் அரிசி உணவு வழங்குவதை நிறுத்தி கேப்பைக்கூழ் பருகுமாறு கட்டளை இட்டாராம். கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே என்ற ஆன்றோர் மரபில் வந்த சிதம்பரனார் சிறிதளவும் கலங்காமல் நாளும் சிவனைப்பாடி கசிந்துருகுவாராம்!

கல்வித்தந்தை ஏ.பி.சி. வீரபாகுவும் சென்னையில் தனியார் மருத்துவமனையில் உடல் நலங்குன்றி வலுவிழந்த பொழுதினும் உள்ளம் சோர்வடையாமல் நாள்தோறும் திருமுறைப் பாசுரங்களை மெல்லிய குரலில் பாடுவாராம்.

பின்னர் மிகவும் சோர்வடைந்த போது ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாவின் மூலம் திருமுறைப்பாசுரங்களைக் கேட்டு உள்ளங்குளிர்வார். ஓட்டப்பிடாரத்தில் குடிகொண்டு உலகாளும் உலகாண்ட ஈஸ்வரியே இருவருக்கும் குலதெய்வம். ஆடும், கோழியும் பலியிட்டு ஆக்ரோஷமாய் இருந்த ஈஸ்வரி ஆலயத்தில் சைவநெறி வழிபாட்டைப் புகுத்தியவர் சிதம்பரனார்.

எந்தவொரு புதிய திட்டத்தையும் உலகம்மன் சன்னதியில் முறையிட்டப் பின்பே தொடங்குவார் ஏ.பி.சி .வீரபாகு அவர்கள்.

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமும் முடிவுமான இரு எல்லை ஓரத்தின் இருமாமலைகளென வாழ்ந்த இருவரின் வாழ்க்கையும் அகிலம் உள்ள வரை புகழ் மணத்தை பரப்பிக் கொண்டிருக்கும்.



सत्यमेव जयते

प्रधान मन्त्री भारत

PRIME MINISTER
INDIA

सन्देश

श्री ए० पी० सी० वीरबाहु के निधन का समाचार सुनकर मुझे दुःख हुआ। वे एक निष्ठावान कार्यकर्ता और हिन्दी प्रेमी थे।

शोक संतप्त परिवार को मेरी हार्दिक संवेदनायें।

इन्दिरा गांधी

(इन्दिरा गांधी)

नई दिल्ली,
31 अगस्त, 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1982, செப்டம்பர் 6, திங்கட்கிழமை.

ஆவணி 21, துந்துபி-திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 11-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

இரங்கல் குறிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் 10-8-1982 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. பி. சி. வீரபாகு அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும், மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும், திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அவர் நெல்லை மாவட்ட காங்கிரஸ் தலைவராகப் பல ஆண்டுகள் பதவி வகித்துள்ளார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவராகவும் இருந்துள்ளார். தூத்துக்குடியில் உள்ள வ. உ. சிதம்பரனார் கல்லூரி நிறுவனர்களில் ஒருவராகவும் அக்கல்லூரியின் நிர்வாகக் குழுச் செயலாளராகவும் இருந்துள்ளார். கூட்டுறவு இயக்கத்தில் மிகவும் ஈடுபாடுள்ள அவர் சவுத் இந்தியா பாங்க் தலைவராகவும் மற்றும் தென்பாரத இந்தி பிரசார சபையில் துணைத் தலைவராகவும் செயலாற்றி வந்துள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்ினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

க. இராசாராம்

பேரவைத் தலைவர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## செய்தி

ஸ்ரீ ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் மறைவு செய்தி கேட்டு எனக்கு துக்கம் ஏற்பட்டது. அவர் ஒரு உண்மையான ஹிந்தி பற்று உடையவர். அவரை இழந்து வாடும் குடும்பத்திற்கு என்னுடைய மனப்பூர்வமான துக்கத்தைத் தெரிவிக்கின்றேன்.

நியூ டெல்லி
31.08.1982

(ஒப்பம்)
இந்திராகாந்தி

PRIME MINISTER

New Delhi,
April 6, 1972

Dear Shri Veerabahu,

Thank you for your letter and the note which gives useful suggestions. I entirely agree that the organization must be revitalised and opportunities given to the public for a better understanding of our policies.

With good wishes,

Yours sincerely,

(Indira Gandhi)

Shri A.P.C. Veerabahu,
Convenor,
Tamilnadu Congress Committee,
8, Gangadeeswarar Kovil Street,
Madras-84.

PRIME MINISTER

New Delhi,
November 10, 1972.

Dear Shri Veerabahu,

Thank you for your interesting and comprehensive note on the situation in Tamil Nadu.

I agree that our party should be more active at the district and even lower levels.

Yours sincerely,

(Indira Gandhi)

Shri A.P.C. Veerabahu,
76, Beach Road,
Tuticorin.

Since 1951

# கல்லூரிகளில் நடைபெற்ற கல்வித் தந்தையின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

...சிரியர்களுக்கு எளிய முறை...

## சென்னை கணித நிபுணர் பங்கேற்பு

...டி, செப். 2-
கற்பித்தல்
...ள் குறித்து
மெட்ரிக்குலே
...ரியில் கருத்த
...ந்தது. இதில்
நிபுணர் ஆத்ம
...கேற்றார்.

...சி வீரபாகு
...டு நிகழ்ச்சியின்
...தியாக வீரபாகு
...ண்டு குழுவும்,
...ண்டு மெட்ரிக்
...கு
...லைப்பள்ளியும்
...ந்து நேற்று வீரபாகு
...க் மேல்நிலைப்பள்
...கணிதத்திற்கான
...ரங்கை நடத்தியது.
...னை பிரபல கணிதத்
...நிபுணரும், அரசு
...க்ஸ்புக், என்.சி.ஆர்.டி
... உறுப்பினரு
...டி ...மன் எளிய



கணிதம் கற்பித்தல் வழிமுறைகள் குறித்து வீரபா... மெட்ரிக்குலேஷன் பள்ளியில் கருத்தரங்கு நடந்தது.

...தலைப்பில் நடந்த கருத் தரங்கில் தூத்துக்குடி, கோவில்பட்டி, திரு... துார் ஆகிய ப... உள்ள 45 பெ... ஷன் மேல்...

முதல்வர் சுந்தரி ... பள்ளி தலை...

**Members :**

**Commerce**
Dr. S. Malarkodi (Co-ordinator)
Dr. A. Padrakali
Dr. K. SathyaBama
Mrs. K. Sivagama Shanmuga Sundari

**Commerce (UA)**
Dr. S. Vanitha
Mrs. P. Karpagavalli
Mrs. T. Chellammal
Mrs. K. Chitra Chellam
Mrs. A. Devi
Dr. M. Kailash
Mrs. R. Samundeeswari

**Commerce CA**
Mrs. S. Umamageswari
Mrs. K Jothi Lekshmi
Mrs. S. Meena
Mrs. R. Uma Sathiavathi

Registration Fee : Rs. 150
Lunch will be provided
E.Mail ID: apcmcommerce@gmail.com
Contact Us: 9488507...

Thoothukud...

**National Work...**
**On**
**Skill India-Empl...**
**Young Indi...**

*10th and 11th Decem...*

**DEPARTMENT OF COM...**

தினமணி 20/2/15

## தூத்துக்குடி வஉசி கல்லூரியில் கலைப் போட்டிக...



...டி வஉசி கல்லூரியில் வியாழக்கிழமை தொடங்கிய ...லைப் போட்டிகளில் நடனமாடும் மாணவிகள்.

...19: தூத்துக்குடி ...ரியில் வியாழக்கி ...ங்கிய கலைப் போட் ...ளான மாணவர், ...ள் கலந்துகொண்டனர். ...க்குடி வஉசி கல்லூரி ...ர் ஏ.பி.சி. வீரபாகு நூற் ...டு விழாவின் ஒரு பகுதியாக ...நெல்வேலி மனோன்மணீயம் ...னார் பல்கலைக்கழகத்துக் ...ட்ட கல்லூரிகளுக்கு ...டயேயான கலைப் போட்டி வியாழக்கிழமை ...டங்கியது. தொடக்க விழா ...கு, கல்லூரி முதல்வர் சி. வீர ...கு தலைமை வகித்தார். கல்லூ ...செயலர் ஏபிசிவீ. சொக்கலிங் ... போட்டியைத் தொட... ...வைத்தார். நிகழ்ச்சியில் ...மாணவர் ...

பரத்குமார், பேரவைச் ... ரமேஷ்குமார், துணைத் ... சுபா ஜெயஸ்ரீ, இணைச் ... பிரேம் டேனியல், ஒருங்கி... பாளர் செல்வம் மற்றும் ... ரியர்கள், மாணவர், மாண... கலந்துகொண்டனர். 20 பிரிவுகளில் நடை... இப்போட்டியில் 25 கல்... ளைச் சேர்ந்த சுமார் 700 ... வர், மாணவிகள் பங்கேற்ற... போட்டி நிறைவு விழா ... ளிக்கிழமை (பிப். 20) மால... மணிக்கு நடைபெறுகிறது... வில், காமராஜ் கல்லூ... சி.எஸ். ...

KULAPATHI A.P.C. VEERABAHU CENTENARY CELEBRATIONS THOOTHUKUDI
IMPARTING QUALITY EDUCATION • INSPIRING TEACHERS • EMPOWERING WOMEN
100 years
1915-2015

...G COMMITTEE

...tron
...HOCKALINGAM
...ident
...College for Women,
...ukudi.

...tron
...LAKSHMI
...ary
...ollege for Women,
...kudi.

...SUKI
...l
...lege for Women,
...di.

Commerce (U...
Dr.N. VANITH...
Mrs. P. KARPAGAV...
Mrs.T.CHELLAMM...
Mrs.K.CHITRA CHEL...
Mrs. A. DEVI
Dr.M. KAILASH

Commerce CA
Mrs. S. UMA MAGESWARI
Mrs. K.JOTHILEKSHMI
Mrs. S.MEENA
Mrs.R.UMA SATHIAVATHY

**********

...COMMERCE (UA), COMMERCE CA
&
THE MANAGEMENT

Cordially invite you to the

ONE DAY INTERNATIONAL SEMINAR
ON
"MANAGERIAL EXCELLENCE IN ...MPETITION"

தினமலர் திருநெல்வேலி 30.8.2016

## மாவட்ட அளவிலான பள்ளி மாணவர்கள் இறகுபந்து போட்டி அசத்தல்

தூத்துக்குடி, ஆக. 30- ...துக்குடியில் ஏ.பி.சி. நூற்றாண்டு விழாவை ...டு தூத்துக்குடி மாவட்ட மாணவ, மாணவிக ...இறகு பந்து போட்டிகள் ...

...க்குடி ஏ.பி.சி. ...ற்றாண்டு விழாவை ... ஏ.பி.சி. வீரபாகு ...விழா கமிட்டி மற்றும் ...இறகு பந்து கழகமும் ...த்துக்குடி மாவட்ட ...வ, மாணவிகள் ...பண்களுக்கான ...ட்டிகள் நடந்தது. ...றகு பந்து கழக ...சங்கர், வ.உ.சி. ...லூரி ...



இறகு பந்துபோட்டியில் வெ... வ.உ.சி. கல்லூரி ...

மாணவர் பாரத் மற்றும் ஹரி யதாந்த் முதல் பரிசும், மாணவர்கள் சாம்சன் மற்றும் கெவின் இரண்டாவது பரிசும் பெற்றனர். பெண்கள் இரட்டையர் பிரிவில் ஹோலிகிராஸ் மாணவிகள் ஜெல்ஸி மற்றும் ஸ்மிர்தா முதல் பரிசும், மாணவிகள் யோகிதா மற்றும் கெபா இரண்டாவது பரிசும் பெற்றனர். 30 வயதிற்கு...

ORGANIZING COMMITTEE

Chief Patron
...C.V. Chockalingam
...laxmi College For Women
...othukudi.

Co - Patron
...C. Subbulakshmi
...A.P.C. Mahalaxmi College For Women
Thoothukudi.

Advisor
Dr.R.C. Vasuki
Principal
A.P.C. Mahalaxmi College For Women
Thoothukudi.

Organizing Secretary
Dr. N. Meenakumari
Head, Department of Mathematics
A.P.C. Mahalaxmi College For Women
Thoothukudi.

Organizing Members
Dr. Latha Martin
Mrs. C. Parameswari
Dr.K. Palani
...Radha
...Deepa Arasi

KULAPATHY A.P.C. VE... CELEBR...
The M...
The Principal, ... of Depart...
cordial...
STATE ...
RECENT DE... A...



அன்பு அறிவு அறம்

Since 1951

## V.O.Chidambaram College, Thoothukudi - 628008

# A.P.C. Veerabahu Centenary Celebration - 2015

| Sl.No. | Name of the Programmes | Date |
|---|---|---|
| 1. | V.O.Chidambaram Statue Open | 02.02.2015 |
| 2. | APC Fest -Cultural Competition | 19.02.2015 - 20.02.2015 |
| 3. | Blood Donation Camp | 13.02.2015 |
| 4. | Two Day National Seminar | 26.03.2015 - 27.03.2015 |
| 5. | Alumni Meet | 18.07.2015 |
| 6. | Mini Marathon | 13.08.2015 |



## வ.உ.சிதம்பரனார் திருவுருவ வெண்கலச்சிலை திறப்பு விழா

குலபதி ஏ.பி.சி.வீரபாகு நூற்றாண்டு விழாவின் முதல் நிகழ்வாக வ.உ.சி. கல்லூரி வளாகத்தில் வ.உ.சிதம்பரனார் திருவுருவ வெண்கலச்சிலை திறப்பு விழா 02.02.2015 அன்று நடைபெற்றது. வ.உ.சி. திருவுருவ சிலையினை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் ஏ.கே.குமரகுரு அவர்கள் திறந்து வைத்தார்.





# குலபதி ஏ.பி.சி.வீரபாகு நூற்றாண்டு விழா நினைவு இரத்த தான முகாம்

## வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி

வ.உ.சிதம்பரனார் கல்லூரி, தூத்துக்குடியில் 13.03.2015 வெள்ளிக்கிழமையன்று கல்லூரியின் நிறுவனர் குலபதி வீரபாகு அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இரத்ததான முகாம் நடைபெற்றது. இம்முகாமை கல்லூரி முதல்வர் வீரபாகு அவர்கள் துவக்கி வைத்தார்கள். தூத்துக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் கல்லூரியிலிருந்து Dr.சாந்தி அவர்களின் தலைமையில் வந்த செவிலியர்கள் மற்றும் மருத்துவர் குழு மூலமாக முகாம் நடத்தப்பட்டது.

முகாமில் மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினார்கள். அவர்கள் வழங்கிய இரத்தமானது பொது மக்களின் பயன்பாட்டிற்காக, அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் பேராசிரியர்கள் சௌந்தரராஜன்(அணி எண். 69), பால்ராஜ் (அணி எண்.70) மற்றும் பேராசிரியை கால்ட் ஷர்மளா (அணி எண். 68) ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இரத்ததான முகாமிலும் வ.உ.சி. கல்லூரியானது மாவட்ட அளவில் 2-வது இடத்தை பெற்று, அதற்கான சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசினை தமிழக அரசிடம் இருந்து பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.





இரத்த தான முகாம்





# தேசியக் கருத்தரங்கம்

## வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி

**தூ**த்துக்குடி வ.உ.சி. கல்லூரி, ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி மற்றும் வ.உ.சி. கல்வியியல் கல்லூரி ஆகியவற்றின் நிறுவனச் செயலரும், திருவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினருமான குலபதி ஏ.பி.சி வீரபாகுவின் நூற்றாண்டு விழாவின் ஒரு அங்கமாக இந்தியாவில் உயர் கல்வி: எதிர் கொள்ள வேண்டிய சவால்களும் தேவைகளும் என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கு 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26,27 ஆகிய நாட்களில் வ.உ.சி கல்லூரியில் நடைபெற்றது.

கருத்தரங்கை இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிபல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், பல்கலைக்கழக மானியக்குழுவின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் ராஜசேகரன்பிள்ளை தொடங்கி வைத்தார். முதல் நாள், முதல் அமர்வில் சென்னை பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.பி. தியாகராஜன், 'அறிவியல் – தொழில்நுட்ப ஆய்வுகள்' என்ற தலைப்பில் உரையாற்றினார். இரண்டாம் அமர்வில், பாரதியார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியன் 'தரமான கல்வி அளிப்பதில் ஆசிரியரின் பங்களிப்பு' என்ற தலைப்பில் உரையாற்றினார். மூன்றாம் அமர்வில் பேராசிரியர் ராஜசேகரன் பிள்ளை உயர்கல்வியின் தரமேம்பாட்டில் தொழில் நுட்பத்தின் பங்கு என்ற தலைப்பில் உரையாற்றினார்.

முன்னதாக, வ.உ.சி. கல்லூரி முதல்வர் முனைவர். சொ. வீரபாகு வரவேற்புரை நிகழத்தினார். வ.உ.சி.கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைனவர். அ. பிரான்சிஸ் கருத்தரங்க அறிமுக உரையாற்றினார்.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் இந்தியாவின் முன்னிலை கல்வியாளர்களும், ஆய்வாளர்களும், அறிஞர்களும், பேராசிரியர்களும் ஆய்வு மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நாள் அமர்வில் பேராசிரியர் விஜயகுமார், டாக்டர் சண்முகம், டாக்டர் ரீட்டா கொளீட்டி லார்ட்ஸ் மற்றும் டாக்டர் அறவாணன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினார்கள்.







# மினி மாரத்தான் போட்டி

## வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி

கல்லூரியின் நிறுவனச்செயலர் குலபதி ஏ.பி.சி.வீரபாகுவின் நூற்றாண்டு விழாவின் ஒரு அங்கமாக, தூத்துக்குடி மாநகரத்தில் உள்ள பள்ளி மாணவ மாணவியருக்கான மினிமாரத்தான் போட்டி நடைபெற்றது. போட்டியை மாநகர ஏ.எஸ்.பி. டாக்டர் பி. அருண் சக்தி குமார் ஐ.பி.எஸ் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

13.08.2015 (வியாழக்கிழமை) காலை 6.30 மணிக்கு வ.உ.சிதம்பரம் கல்லூரியில் இருந்து தொடங்கிய இம்மாரத்தான் வ.உ.சி கல்லூரியிலேயே நிறைவுற்றது.

மாணவருக்கு 8 கிமீ மற்றும் மாணவியருக்கு 5 கி.மீ. தூரம்என்று நிர்ணயிக்கப்பட்டது.

மாணவர் மற்றும் மாணவியருக்கு தனித்தனியாக பரிசுகள் வழங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| முதல் இடம் | : ரூ. 5000 | 5 முதல் 10 இடம் | : ரூ. 500 |
| இரண்டாம் இடம் | : ரூ. 3000 | 11 முதல் 15இடம் | : ரூ. 300 |
| மூன்றாம் இடம் | : ரூ. 2000 | 16 முதல் 20 இடம் | : ரூ. 200 |
| நான்காம் இடம் | : ரூ. 1000 | | |

பங்கு பெற்ற அனைவருக்கும் பங்பேற்பு சான்றிதழும், காலை உணவும் வழங்கப்பட்டது.

## மாரத்தான் போட்டியில் மாணவர் படை






## ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்வு

## வ.உ.சி. கல்லூரி பழைய மாணவர்கள் சந்திப்பு

### சாதி-சமய பேதமற்ற சங்கமம்! ஆத்மார்த்தமாக அனைவரும் கூடினர்!






கல்வித் தந்தை , குலபதி ஏ.பிசி.வீரபாகு அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக வ.உ.சி.கல்லூரி பழைய மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி 18.07.2015 அன்று வ.உ.சி கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மூவாயிரத்திற்கும் அதிகமான பழைய மாணவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு சாதி சமய பேதமற்ற சங்கமமாக இருந்தது. அனைவரும் ஆத்மார்த்தமாக கூடி, தங்களது இளம் வயது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

காலை 9.00 மணிக்கெல்லாம் கார்களிலும், இரண்டு சக்கர வாகனங்களிலும், ஆட்டோக்களிலும் பயணித்து சாரை சாரையாக வந்தவர்களை கல்லூரி வாசலில் கம்பீரமாக நிற்கும் வ.உ.சிதம்பரனாரின் முழு உருவச்சிலையின் அருகில் இருந்து வ.உ.சி. கல்விக் கழகத் தலைவர் பேராசிரியர் சங்கரன், செயலர் ஏ.பி.சி.வீ. சொக்கலிங்கம், துணைச் செயலர் ஏ.பி.சி.வீ.சண்முகம், உறுப்பினர் டாக்டர் ஏ.பி.சி.வீ வேலாயுதம், ஏ.பி.சி.வீ.கணபதி, முதல்வர் சொ.வீரபாகு ஆகியோர் வரவேற்றனர்.

துறை வாரியாக ஒழுங்கு செய்யப்பட்ட அரங்குகளுக்கு பழைய மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அத்துறையில் பணிபுரியும் பேராசிரியர்களும் மாணவர்களும் அவர்களை வரவேற்று உபசரித்தனர். பலர் குடும்பத்துடன் வருகை தந்தனர். தாங்கள் படித்த வகுப்பறையை கண்டுகளித்து குடும்பத்தினருக்கு அறிமுகம் செய்து வைத்தனர். படிக்கும் காலத்தில் தாங்கள் செய்த குறும்புகளை குடும்பத்தினருக்கு எடுத்துச் சொல்லி குதூகலம் அடையச் செய்தனர்.

ஒவ்வொரு துறையிலும் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்த அரங்குகளில் நடைபெற்ற கூட்டங்களில் பழைய மாணவர்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். உடன் படித்தோருடன் உரையாடி மகிழ்ந்தனர்.

பொருளாதாரத் துறையில் 1973-76ம் ஆண்டு இளங்கலைப் படித்து தற்போது இந்திய ரிசர்வ் வங்கியில் துணை ஆளுநராகப் பணிபுரிந்து வரும் **திரு. ஆர். காந்தி அவர்கள்** தனது உரையில், ‘நான் இந்த நிலைக்கு வருவதற்கு காரணமாக இருந்தது இக்கல்லூரி. நான் ஒப்புக்காகச் சொல்லவில்லை. பி.யூ.சி. சயின்ஸ் படித்துவிட்டு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் இருந்தேன் கிடைக்கவில்லை. பின்னர் மேல்படிப்புக்காக பழைய கல்லூரியை அணுகிய போது அக்கல்லூரி கைவிட்டுவிட்டது. வ.உ.சி. கல்லூரி என்னை அரவணைத்துக் கொண்டது. இங்கே படிப்புடன் N.C.C., N.S.S., Extra Curricular Activities போன்றவற்றிக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. அது எங்களின் மனதிற்கும், நல்ல வாழ்க்கைக்கும் அடிப்படையை போட்டுத் தந்தது. இக்கல்லூரியின்



நிறுவனர் ஏ.பி.சி.வீரபாகு அவர்களின் நூற்றாண்டு விழாவின் போது இக்கல்லூரியின் பழைய மாணவன் என்று சொல்லிக் கொள்வது பெருமை அளிக்கிறது. இங்கு வியாபாரத் தன்மை கிடையாது, ஜாதி, மத, பேதமற்று எல்லா மாணவ, மாணவியருக்கும்கல்வி கிடைக்க வித்திட்டவர் ஏ.பி.சி.வீ. அவர்கள். அரசு மானியம் தாமதம் ஆனாலும், ஆசிரியர், ஆசிரியரல்லாத ஊழியருக்கும் சம்பளத்தை தனது சொந்த வியாபாரத்தில் கிடைத்த பணத்திலிருந்து கொடுத்தவர். சில நிறுவனங்களில் படிப்பதற்குமுன்பாகவே நான்கு, ஐந்து வருடக் கல்விக்கான கட்டணத்தை மொத்தமாக வாங்கும் காலத்தில், ஏ.பி.சி.வீ.கடைப்பிடித்த கட்டணச் சலுகை விதிமுறைகளை இன்றும் அவரது வாரிசுகள் கடைப்பிடிக்கிறார்கள் என்பது பாராட்டுக்குரியது. இங்கு படித்த ஒவ்வொரு மாணவருக்கும் இது மாதிரி அனுபவங்கள் இருக்கும்'', என்றார்.

**வணிகவியல் துறை சார்பில் நடந்த கூட்டத்தில் மாண்புமிகு நீதியரசர் சொக்கலிங்கம் தனது உரையில்,**

''வ.உ.சி.கல்லூரி அருமையான கல்லூரி. அரசு கல்லூரி போன்றது. சுதந்திரமாக செயல்பட அனுமதித்தார்கள். இந்தப் பகுதியில் உள்ள மாணர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது. குறிப்பிட்ட ஜாதி மதத்தினருக்கென்று இல்லாமல், சமுதாயத்தின் கீழ் நிலையில் இருந்தவர்களுக்கும் கல்வியைத் தந்தது. பக்கத்தில் உள்ள கிராமத்தில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல் குமரி, ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளவர்களும் இங்கே படித்தார்கள். நான், எங்கள் அண்ணன், தம்பி, அக்கா என எங்களது குடும்ப உறுப்பினர்கள் இங்கே படித்தனர். அப்போதெல்லாம் தனித்தனி கட்டிடங்களாக இருக்கும். இப்போது தொடர்ந்து கட்டிடங்கள் இருப்பது வளர்ச்சியை காட்டுகிறது. படிப்புடன், சுதந்திரமாக செயல்பட அனுமதித்தது மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது'', என்றார்.

**ஆர். கருமலையான் தனது உரையில்**

''நான் அகில இந்திய அளவில் எல்லா இடத்திற்கும் போகிறேன். தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் படித்தேன் என்றால் மதிப்பு கொடுக்கிறார்கள். கல்வியை மட்டும் போதிக்கவில்லை. தலைமைப் பண்பையும் வளர்த்து விட்டார்கள். அதன் காரணமாக தேசிய அளவில் பணி ஆற்றுவதற்கு சுலபமாக இருக்கிறது'', என்றார்.

பாரத ஸ்டேட் வங்கியில் ரீஜனல் மானேஜராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பெ.கோபால கிருஷ்ணன் அவர்கள், "1951ல் இக்கல்லூரியில் சேர்ந்தேன் . 23 பேர் இருந்தோம். அப்போது கல்லூரி ஆண்டு விழாவிற்கு அன்றைய கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாஷா அவர்கள் வருகை தந்தார்கள். கவர்னரின் கையால் பரிசு வாங்கினேன். கவர்னர் வரும் போது எப்படி நடக்க வேண்டுமென எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அது எனது வாழ்க்கைக்கும் பயன்பட்டது. பேராசிரியர் அ.சீ.ரா.நன்றாக பாடம் எடுப்பார்", என்றார்.

**எஸ். ராஜகோபால் தனது உரையில்,** "படிக்கும் போது நான் விடுதியில் தங்கி இருந்தேன் 52 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தப் பகுதி வளர்ச்சி அடையவில்லை இங்கே இருந்து பார்த்தால் சுடுகாடு தெரியும். பிணம் எரியும். புகை வரும். இன்றைக்கு நகரின் முக்கிய பகுதியாக உள்ளது . ஏ.பி.சி.வீ.அவர்கள் தொலை நோக்கு பார்வை கொண்டவர்", என்றார்.

**தொழிலாளர் துறையில் இணை ஆணையாளராக .இருந்து ஓய்வு பெற்ற மா.சங்கர நாராயணன் தனது உரையில்,** ''மாணவர்களை அடிமைகளாக ஆக்காமல் அவர்களுக்கு வழங்கிய சுதந்திரம், ஒழுக்கம், தரமான படிப்பின் காரணமாக இங்கே படித்தவர்கள் நிறைய பேர் அரசு பதவியில் உயரதிகாரிகளாக இருக்கிறார்கள். எல்லோரும் சமமாக நடத்தப்பட்டார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சார்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரி ஒருவரை நான் சந்தித்த போது 'இக்கல்லூரி இல்லாவிட்டால் நானெல்லாம் படித்து உயர்நிலைக்கு வர முடியாது,' என்று அவர் கூறியதை நினைவு கூர்ந்தார்.

அரசு உதவித் தொகை பெறும் மாணவர்களுக்கு, உரிய நேரத்தில் பணம் வராவிட்டாலும் கல்வி, உணவு உட்பட்ட ஹாஸ்டல்வசதிகளைத் தொடர்ந்து தொய்வின்றி செய்தார்கள். சில நிறுவனங்களில் மாதா மாதம் கட்டணங்கள் சரியாகக் கட்டவில்லையென்றால் 'வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள் ஆனால் இங்கே அப்படிச் செய்வதில்லை '',என்றார்.

**வ.உ.சி. கல்லூரியின் முன்னாள் மாணவரும், கல்லூரி சேர்மனாக இருந்தவருமான இளையராஜா தனது உரையில்,**





''பழைய மாணவர்களின் சார்பில் ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும். அதற்காக நான் ரூபாய் ஒரு லட்சம் தருகிறேன்'', என்று உறுதி அளித்தார்.

பி.பி.ஏ. பிரிவில் படித்த தூத்துக்குடி அபுதாமஸ் அவர்கள் தனது உரையில், படிக்கும் போது ஆசிரியருடன் சகஜமாக பழகியதை நினைவு கூர்ந்ததோடு பி.பி.ஏ. படித்ததினால் தூத்துக்குடி துறைமுக நகரத்தில் கடல் வாணிபம் செய்ய உதவியாக இருக்கிறது'', என்றார்.

சிவக்குமார் தனது உரையில், ''எனது அப்பா, முதல் நாள் கல்லூரிக்கு கூட்டி வந்து பேராசிரியர் ராஜனிடம் அறிமுகம் செய்து வைத்தார். நூலகத்திற்கும் அழைத்து வந்தார். அங்கே பல்வேறு பத்திரிகைகள் இருப்பதை பார்த்தேன். பொது அறிவிற்கு பயன்படுவதாக இருந்தது'', என்றார்.

பேராசிரியர் ஜெயப் பிரகாஷ் நாராயணன் தனது உரையில், ''நான் இங்கேயே படித்தேன். இங்கேயே பேராசிரியராகப் பணிபுரிந்தேன். ஓய்வு பெற்றுள்ளேன். எனது வாழ்க்கையின் பெரும் பகுதியை கிட்டத்தட்ட 50 ஆண்டுகளை இங்கேயே கழித்தேன். அதற்கு ஏற்ற சூழ்நிலை இங்கே இருந்தது தான் காரணம் ஆகும்'', என்றார்.

கே. இராமச்சந்திரன் தனது உரையில் ''அன்பு-அறிவு-அறம் தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கல்லூரியில் படித்ததினால் நன்றாக இருக்கிறேன். எங்கள் குடும்பத்தில் நான்தான் முதல் பட்டதாரி. இக்கல்லூரி இல்லையென்றால் இந்த பெருமை கிடைத்திருக்காது. நான் பருப்பு வியாபாரம் செய்கிறேன். தேசிய நீர்வழிச் சாலையின் ஆலோசகராக உள்ளேன்'', என்றார்.

முன்னாள் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் எம். அப்பாத்துரை தனது உரையில், ''நான் இந்தக் கல்லூரியில் படித்தது மட்டுமல்லாமல், பள்ளிப் படிப்பையும் வ.உ.சி. கல்விக்குழு நடத்தும் சுப்பையா வித்யாலயத்தில் படித்ததை நினைவு கூர்ந்தார். ''கல்லூரியில் படிக்கும் போது கட்சி பாகுபாடின்றி தலைவர்கள் வருவதும், கருத்துகளைத் தருவதும் என்னைப் போன்றவர்கள் வளர்வதற்கும் வாய்ப்பாக இருந்தது'', என்றார்.

இப்படி பழைய மாணவர்கள் ஒவ்வொரு துறையிலும் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

மொத்தத்தில்

- ஏ.பி.சி.வீரபாகுவின் தளரா முயற்சி
- தொலைநோக்கு பார்வை
- சுதந்திரத்தன்மை
- கட்டணச்சலுகை
- ஆசிரியர்களின் திறன்
- பொது அறிவு
- ஜாதி சமய பாகுபாடற்ற தன்மை
- பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு சலுகை

கல்வியை வியாபாரமாக்கக் கூடாது என்ற குலபதியின் லட்சியம், அதனைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் அன்னாரின் புதல்வர்களின் அணுகுமுறை என்று பல விஷயங்களை பழைய மாணவர்கள் பகிர்ந்து ஆனந்தம் அடைந்தனர்.

ஒவ்வொரு துறைக்கும் ஏ.பி.சி.வீ.சொக்கலிங்கம், ஏ.பி.சி.வீ. சண்முகம் சென்று அளவளாவியதையும், முதல்வர் சொ. வீரபாகு பேசியதையும் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

**விருந்து :** வருகை தந்த அனைவருக்கும் எந்தவித குறைபாடும் இன்றி உணவு வசதி செய்யப்பட்டதை, அனைவரும் பாராட்டினர். மதியம் கல்லூரியில் பயின்று பிரபல பாடகராக இருந்து வரும் அனந்த நாராயணன் குழுவினரின் மெல்லிசைக் கச்சேரி நடைபெற்றது. மாணவ, மாணவியர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

பழைய மாணவர்கள் தங்களுக்குக் கற்பித்துக் கொடுத்த ஆசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து, பரிசுகள் வழங்கி தங்களது நன்றியைத் தெரிவித்தனர். நிர்வாகத்தின் சார்பில் ஓய்வு பெற்ற ஆசிரியர், ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு பொன்னாடையும் நினைவு பரிசும் வழங்கப்பட்டது. மொத்தத்தில் எல்லோரையும் நெகிழ வைக்கும் நிகழ்ச்சியாக இது அமைந்தது.

**- சைவநெறி காந்தி**

## பழைய மாணவர்களின் பாசமிகு சந்திப்பு














# பழைய மாணவர் சந்திப்பு நிகழ்ச்சிகள்















## கல்லூரியில் களை கட்டிய கலை விழா















# கல்லூரியில் களை கட்டிய கலை விழா















# கல்லூரியில் களை கட்டிய கலை விழா



















Since 1951

## KULAPATHY A.P.C. VEERABAHU CENTENARY CELEBRATIONS

## A.P.C.MAHALAXMI COLLEGE FOR WOMEN

2014 - 2015

| Sl.No. | Date | Programmes | Organized By |
|---|---|---|---|
| 1. | 18.02.2015 | International Conference | Department of Commerce |
| 2. | 10.04.2015 | Eye Camp | A Special Programme |
| 3. | 13.08.2015 | Essay Competition | Department of Commerce |
| 4. | 04.09.2015 | Guest Lecture | Department of Mathematics |
| 5. | 30.09.2015 | State Level Seminar | Department of Mathematics |
| 6. | 09.10.2015 | Seminar | Department of Tamil |
| 7. | 10.12.2015 & 11.12.2015 | National Level Workshop | Department of Commerce |
| 8. | 21.12.2015 | National Level Workshop | Department of Chemistry |



# ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி

## *கல்வித் தந்தையின் நூற்றாண்டுவிழா நிகழ்வுகள்*

பல்லாயிரக் கணக்கான மாணவ மாணவியருக்குக் கல்விக்கண் கொடுத்து வாழ்வொளி தந்த குலபதி.திரு.ஏ.பி.சி.வீரபாகு ஐயாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாவட்ட பார்வை இழப்புத் தடுப்புச் சங்கத்தின் உதவியுடன் ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரியும் தூத்துக்குடி அரவிந்த் கண் மருத்துவமனையும் இணைந்து மாபெரும் இலவச கண்பரிசோதனை முகாமினை 09.04.2015, 10.04.2015, 16.04.2015, ஆகிய மூன்று நாட்களும் நடத்தின.

இம்முகாமில் 795 மாணவியரும், 64 ஆசிரியர்களும், 200 பொதுமக்களும் ஆக மொத்தம் 1059 பேர் பயன் பெற்றனர். 17 பேருக்கு கண்புரைஅறுவை சிகிச்சை நடைபெற்றது. 90 பேருக்கு இலவச கண்ணாடி வழங்கப்பெற்றது. தூத்துக்குடி மாவட்ட அளவில் நடைபெற்ற மிகப் பெரிய முகாம் இது என்பது குறிப்பிடத்தக்கது. அரவிந்த் கண்மருத்துவமனை கண் மருத்துவர்கள் உபாஜனா, ரிடெஷ், க்ரீஷ்மா, சக்ரபதி, நிஷா, கால்மா ஆகியோரின் பேருதவியுடன் கல்லூரியின் நிர்வாகமும் பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவியர் அனைவரும் இணைந்து கண்ணொளி முகாமைக் கனிவோடு நடத்தினர்.

### கல்வித்தந்தையின் நினைவுநாள்

கல்வித்தந்தையின் நினைவு நாளை அனுசரிக்கும் விதமாக, மாணவியர் மத்தியில் அவரது பன்முகத் திறனைப் பதிவு செய்ய எண்ணி, குலபதி ஏ.பி.சி.வீரபாகுவின் தேசிய உணர்வு, கல்விப்பணி, பன்முகத் திறன் ஆகிய தலைப்புகளில் கட்டுரைப் போட்டி நடைபெற்றது.

### கருத்தரங்குகள்

''எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி'' என இறுமாந்து பாடிய எட்டையபுரக் கவியின் கனவை நினைவாக்க, குலபதி ஐயா அவர்கள் விதைத்த விதைதான் ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி. அந்த விதை அவரது நூற்றாண்டு விழாவில் ஆலமரமாகி ஆறு கருத்தரங்குகளை நடத்தியது.

வணிகவியல் துறை சார்பில் பன்னாட்டுக் கருத்தரங்கும், தேசியக் கருத்தரங்கும் நடைபெற்றது. தமிழ்த்துறையும், வேதியியல் துறையும் தேசியக் கருத்தரங்கினையும், கணிதவியல் துறையினர் மாநில அளவிலான கருத்தரங்கினையும் நிறைவாக நடத்தினர். 18.02.2015 ல் தொடங்கி 21.12.2015 வரை இத்தகு கருத்தரங்குகளும், பயிற்சி முகாமும் நடைபெற்றன.

'மதுரை ராமானுஜன் கணிதவியல் ஆராய்ச்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சுவாமிநாதன். 'பெங்களூர் இந்திய அறிவியல் ஆராய்ச்சி மைய ஆய்வாளர் முனைவர். நடராஜன், 'காந்தி கிராம பல்கலைக்கழக வேதியியல்துறைத்'தலைவர் முனைவர். சேதுராமன், ஊட்டி ஹோட்டல் சஃபயர் கிராணிடின் மேலாண் இயக்குநர் துரைக்கண்ணன், கல்லூரி முதல்வர்கள், சவுதி அரேபியாவில் மனித வள மேம்பாட்டுத்துறை அலுவலராகப் பணியாற்றும் பினோ மேத்யூ, சென்னையில் ஸ்ரீ சாய்ராம் மேலாண்மையியல் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் மாறன், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் கேரளா பல்கலைகழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர்கள் எனப் பல்வேறு துறைசார் அறிஞர் பெருமக்கள் சிறப்பு விருத்தினராக வருகை தந்து கௌரவித்தனர்.

உலக அளவிலான இக் கருத்தரங்க மலர்களை கல்வித்தந்தையின் பொன்னார் கழல்களுக்கு ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி சமர்ப்பித்தது.

# கல்லூரியில் நடைபெற்ற பன்முக நிகழ்ச்சிகள்





**கண் சிகிச்சை முகாம்**




**தற்கால இயக்கிய போக்குகள்**




**Management Excellence**
**in Global Competition**



**Motivation to Net Exam**



**National workshop on skill**
**Indian Employable Young India**



**New Visitor in Chemistry**
**21.12.2015**



**ஒரு நாள் தேசிய கருத்தரங்கம்**
**9.10.2015**



**கண் சிகிச்சை முகாம்**



**கண் சிகிச்சை முகாம்**





## KULAPATHY A.P.C.VEERABAHU CENTENARY CELEBRATIONS

# V.O.CHIDAMBARAM COLLEGE OF EDUCATION

## 2014 - 2015

| Sl.No. | Date | Programmes | Oragnized by |
|---|---|---|---|
| 1. | 11.04.2015 | ENGTAFEST | Department of Tamil and English |
| 2. | Online Competition | | Department of Education |







# கல்வித் தந்தையின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

கல்லூரியின் நிறுவனச் செயலர் உயர்திரு குலபதி ஏ.பி.சி. வீரபாகு அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் வ.உ.சிதம்பரம் கல்வியியல் கல்லூரி, தூத்துக்குடியின் வைரவிழா ஆகியவற்றின் பகுதியாக தூத்துக்குடி மாவட்டத்தைச் சுற்றியுள்ள கல்வியியல் கல்லூரிகளுக்கு இடையே ஒரு நாள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி இலக்கியங்கள் தொடர்பான போட்டிகள் (ENGTAFEST)வ.உ.சிதம்பரம் கல்வியியல் கல்லூரியில் 11.04.2015 அன்று நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் கல்லூரி முதல்வர் முனைவர். வை.தாமோதரன் அவர்கள் முறையாகப் போட்டியினைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியங்களை மையப் படுத்தி,

1. தமிழ் பேச்சுப்போட்டி
2. ஆங்கில பேச்சுப்போட்டி
3. தமிழ் கட்டுரைப் போட்டி
4. ஆங்கில கட்டுரைப் போட்டி
5. தமிழ் கவிதைப் போட்டி
6. ஆங்கில கவிதைப் போட்டி
7. தமிழ் ஓவியப் போட்டி
8. ஆங்கில ஓவியப் போட்டி
9. தமிழ் - தனி நடிப்பு
10. ஆங்கிலம் - தனி நடிப்பு
11. தமிழ் வினாடிவினா
12, ஆங்கில வினாடிவினா
13. தமிழ் காப்பியத்தில் ஒரு காட்சி
14. ஆங்கிலம் ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஒரு காட்சி

ஆகிய போட்டிகளும், நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

தூத்துக்குடி மாவட்டத்தைச் சுற்றியுள்ள 14 கல்வியியல் கல்லூரிகள் போட்டிகளில் கலந்து கொண்டன.

வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி தமிழ்துறை துணைப் பேராசிரியர் முனைவர். ஜி. கிருஷ்ணவேணி அவர்களும், ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி தமிழ்த்துறை துணைப் பேராசிரியர் முனைவர். ஏ.விஜயலெட்சுமி அவர்களும், அதே கல்லூரியைச் சார்ந்த ஆங்கிலத்துறை துணைப் பேராசிரியர்கள் முனைவர். லில்லி கோல்டா மற்றும் முனைவர். அனிதா ஆல்பர்ட் ஆகியோரும், தூத்துக்குடி ஏ.பி.சி. வீரபாகு மெட்ரிகுலேசன் பள்ளியைச் சார்ந்த திருமதி. மதிமணி அவர்களும் போட்டிகளின் நடுவர்களாகப் பணியாற்றினர். மாலையில் நடைபெற்ற நிறைவு விழாவில் தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர்.ஆர்.சி.வாசுகி அவர்கள் சிறப்பு





விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

நடந்த போட்டிகளில் அதிக பரிசுகளை வென்று, முதலிடம் பெற்ற தூத்துக்குடி அன்னம்மாள் மகளிர் கல்வியியல் கல்லூரிக்கு, சிறப்பு கோப்பை வழங்கப்பட்டது. இரண்டாவது இடத்தை செய்துங்கநல்லூர் தூய மரியன்னை கல்வியியல் கல்லூரி மாணவர்கள் பெற்றனர்.

கல்லூரியின் தலைவர் திரு. ஏ.பி.சி.வீ சொக்கலிங்கம் மற்றும் கல்லூரி செயலர் திரு ஏ.பி.சி.வீ சண்முகம் ஆகியோரது வழிகாட்டுதலில், கல்லூரி முதல்வர் வை. தாமோதரன் அவர்களும், ஒருங்கிணைப்பாளர் முனைவர். இரசூல் மொகைதீன் அவர்களும், போட்டி அமைப்பாளர்கள் முனைவர்.விஜி மற்றும் போ. அந்தோணி ஆரோக்கிய அனுபியா மெல் ஆகியோரும் மற்றும் கல்லூரியின் கற்பித்தல்சார் மற்றும் அலுவல்சார் பணியாளர்களும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## இணைய வழியில் பரிந்துரைகள் வரவேற்பு:

கல்லூரியின் நிறுவனச் செயலர் குலபதி ஏ.பி.சி. வீரபாகு அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் வ.உ.சிதம்பரம் கல்வியியல் கல்லூரியின் வைர விழாவின் பகுதியாக 'ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய புதுமைகள் பற்றிய பரிந்துரைகள் மாணவ - ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோரிடமிருந்து இணைய வழியாக நிகழ் நிலையில் வரவேற்கப்பட்டன. சிறந்த கருத்துக்களுக்கு பரிசுகளும் அறிவிக்கப்பட்டன.

தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் 53 பேர் ஆர்வமுடன் பங்கேற்று தமது கருத்துக்களை பரிந்துரைத்தனர். வ.உ.சிதம்பரம் கல்வியியல் கல்லூரி, கணிதத்துறை இணைப் பேராசிரியர் முனைவர். ஜே.ஜோசப்பின் சலத் மேரி, வ.உ.சிதம்பரம் கல்லூரி, கணிதத்துறை இணைப் பேராசிரியர் முனைவர்.நெல்லை முருகன், ஏ.பி.சி.மகாலெட்சுமி மகளிர் கல்லூரி ஆங்கிலத்துறை துணைப் பேராசிரியர் முனைவர். லில்லி கோல்டா ஆகியோர் நடுவராகப் பணியாற்றி சிறந்த கருத்துக்களைத் தேர்ந்தெடுத்தனர்.

முதல் பரிசை முனைவர். வி.பி.மஷலா தேவி, முதல்வர், ஸ்ரீ பாரத் கல்வியியல் கல்லூரி, அம்பத்தூர் அவர்களும், இரண்டாவது பரிசை தூத்துக்குடி ராஜலெட்சுமி கல்லூரி முதல்வர் பேரா. ஆர். ஜான்சன் வீரசிங் அவர்களும், மூன்றாவது பரிசை கன்னியாகுமரி மாவட்டம், முட்டம், பிஷப் அன்னிசாமி கல்வியியல் கல்லூரி, முதுகலை கல்வியியல் மாணவி செல்வி.டி.ஜெனிதா அவர்களும் பெற்றனர். வெற்றி பெற்றோருக்கான ரொக்கப் பரிசுகள் அனுப்பி வைக்கப்பட்டன. வ.உ.சிதம்பரம் கல்வியியல் கல்லூரி கல்வியியல் துறை துணைப் பேராசிரியர் முனைவர்.குரு. வாசுகி இப்போட்டியை ஒருங்கிணைந்தார்.

## வ.உ.சி கல்வியியல் கல்லூரி விழா படங்கள்



